## வேளாண்மை – உழவர் நலத்துறை

# மக்கள் சாசனம்

©
தமிழ்நாடு அரசு
2026

# முன்னுரை

மக்கள் அனைவரின் உணவுத்தேவையை நிறைவு செய்யும் உழவர்கள், மேன்மையான உழவுத் தொழிலைத் தொடர்ந்து மேற்கொண்டு "பசி வந்திடப் பத்தும் பறந்துபோகும்" என்ற நிலையில்லாத, பசியில்லா **வெற்றித் தமிழ்நாட்டை** உருவாக்கிட அவர்களுக்கு உறுதுணையாக நிற்க உறுதி கொண்டுள்ளது தமிழ்நாடு அரசு. இதற்காக வேளாண்மை - உழவர் நலத்துறைக்கென தொலைநோக்குத் திட்டங்களையும் வகுத்து அளித்துள்ளது. அதன் அடிப்படையில் 2026-27ஆம் ஆண்டிற்கான வேளாண்மை நிதிநிலை அறிக்கையில் வேளாண் பெருமக்களின் தேவைகளைப் பெருமளவில் நிறைவு செய்யும் வண்ணம் பல்வேறு திட்டங்களை அறிவித்து அவற்றை செயல்படுத்தி வருகின்றது.

வேளாண்மைக்கு இன்றியமையாத இயற்கை வளமான மண்வளத்தை வளம் குன்றாமல் பாதுகாத்தால்தான் செழிப்பான விளைச்சல் பெற இயலும் என்பதால் தமிழ்நாடு மண்வள மேலாண்மை சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. மேலும், உழவர்களுக்குத் தரமான விதைகளை வழங்குதல், வேளாண்மைக்குத் தேவையான பாசனவசதியை உறுதி செய்தல், வேளாண்மையில் மின்னணு தொழில்நுட்ப பயன்பாடு, வேளாண்மைக்குத் தேவையான மும்முனை மின்சாரம் வழங்குதல், நல்விளைச்சலுக்கான உயர் விளைச்சல் இரகங்கள் மற்றும் வீரிய இரகங்களின் பயன்பாடு, குறைந்த நீரினைப் பயன்படுத்தி மாற்றுப்பயிர் சாகுபடி ஊக்குவிப்பு, உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பு, நஞ்சற்ற வேளாண் விளைபொருட்கள் பெற்றிட உயிர்ம வேளாண்மை மற்றும் இயற்கை வேளாண்மை ஊக்குவிப்பு, ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை, நுண்ணீர்ப்பாசனம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் வருமானத்திற்கான வேளாண் காடுகள், வேளாண் தொழிலாளர் பற்றாக்குறையை எதிர்கொள்ள வேளாண் இயந்திரமயமாக்கல், விவசாயிகள் வருமான உயர்விற்கான முன்னெடுப்புகள், வேளாண் விளைபொருட்களை மதிப்புக்கூட்டுதல் மற்றும் உணவு பதப்படுத்துதல் போன்ற உத்திகளின் அடிப்படையில் பல சிறப்பான திட்டங்கள் வகுக்கப்பட்டு, செயல்படுத்தப்படுகின்றன.

வேளாண்மை – உழவர்நலத்துறை மூலம் 2026 - 27 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படவுள்ள பல்வேறு வேளாண் திட்டங்கள் பற்றிய விவரங்கள் தொகுக்கப்பட்டு, அனைவரும் எளிதாகத் தெரிந்துகொள்ளும் வகையில் மக்கள்

சாசனம் தயாரிக்கப்பட்டு, அரசு வலைதளத்தில் பதிவேற்றம் செய்து, மக்களின் பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டுள்ளது.

2026 - 27 ஆம் ஆண்டின் மக்கள் சாசனம் உழவர்கள் மற்றும் மக்கள் அனைவருக்கும் திட்டங்கள் தொடர்பான விவரங்களைத் தெரிந்துகொண்டு, பயன்பெற உதவிகரமாக இருந்து பயனளிக்கும் என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**ர. வினோத்**

**வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர்**

## மக்கள் சாசனம்

## 2026-2027

## பொருளடக்கம்


| வ.எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1 | வேளாண்மை | 1 - 77 |
| 2 | சர்க்கரை | 78 – 80 |
| 3 | தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் | 81 – 148 |
| 4 | வேளாண்மைப் பொறியியல் | 149 - 182 |
| 5 | வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகம் | 183 – 191 |
| 6 | தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் | 192 -234 |
| 7 | விதைச் சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்பு | 235 - 246 |
| 8 | தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை | 247 - 253 |

# 1. வேளாண்மைத் துறை

விவசாயத்திற்குத் தேவைப்படும் பல்வேறு பயிர்களின் விதைகள், உயிர் உரங்கள், நுண்ணூட்ட உரங்கள் மற்றும் இதர வேளாண் இடுபொருட்களை உழவர்கள் வேளாண்மை - உழவர் நலத்துறையின் **உழவர் செயலியில்** உள்ள இடுபொருள் முன்பதிவு என்னும் சேவையில் பதிவு செய்து பெற்றுக்கொள்ளலாம்.

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | பயன்களைப் பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| **I. அ. விதைப் பெருக்கத் திட்டத்தின் கீழ் உழவர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள்** | | |
| தரமான விதைகளை உற்பத்தி செய்யும் விதைப் பண்ணை உழவர்களை ஊக்கப்படுத்த, அவர்கள் உற்பத்தி செய்யும் விதைகளுக்கு 2026-2027 **ஆம் ஆண்டில்** கீழ்க்கண்டவாறு **கொள்முதல் விலை (ரூபாய் /கிலோ)** வழங்கப்படுகிறது. | | |
| **1.நெல்**<br>**அ) ஆதார விதை**<br>மேம்படுத்தப்பட்ட<br>வெள்ளை பொன்னி – ரூபாய் 41/-<br>மிகச்சன்ன இரகங்கள் – ரூபாய் 37/-<br>சன்ன இரகங்கள் மற்றும்<br>மத்திய இரகங்கள் - ரூபாய் 36/-<br>மோட்டா இரகங்கள் - ரூபாய் 33/-<br>**ஆ) சான்று விதை**<br>மேம்படுத்தப்பட்ட<br>வெள்ளை பொன்னி – ரூபாய் 40/<br>மிகச்சன்ன இரகங்கள் - ரூபாய் 35/-<br>சன்ன இரகங்கள் மற்றும்<br>மத்திய இரகங்கள் - ரூபாய் 34/-<br>மோட்டா இரகங்கள் - ரூபாய் 31/-<br>**இ) உண்மை நிலை விதை**<br>பாரம்பரிய நெல் இரகங்கள் - ரூபாய் 45/- | உழவர்கள் உறுதியான பாசன ஆதாரம் கொண்டிருக்க வேண்டும்.<br>உழவர்களால் விதை சுத்திகரிப்பு நிலையத்திற்கு கொண்டு வரப்பட்ட விதைகளுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலையில் 80% முன்பணமாக வழங்கப்படும். | **<u>கிராம அளவில்</u>**<br>உதவி விதை அலுவலர்<br>**<u>வட்டார அளவில்</u>**<br>உதவி விதை அலுவலர்/ துணை வேளாண்மை அலுவலர்/ வேளாண்மை அலுவலர் மற்றும் வேளாண்மை உதவி இயக்குநர் (உதவி பொது மேலாளர் - தமிழ்நாடு மாநில விதை மேம்பாட்டு முகமை)<br>**<u>மாவட்ட அளவில்</u>**<br>வேளாண்மை துணை இயக்குநர் (துணை பொது மேலாளர் - தமிழ்நாடு மாநில விதை மேம்பாட்டு முகமை)<br>வேளாண்மை இணை இயக்குநர் (பொது மேலாளர் - தமிழ்நாடு மாநில விதை மேம்பாட்டு முகமை) |
| **2.சிறுதானியங்கள்**<br>**அ) ஆதார விதை**<br>சோளம் - ரூபாய் 64/-<br>கம்பு - ரூபாய் 52/-<br>கேழ்வரகு - ரூபாய் 58/-<br>மக்காச்சோளம் - ரூபாய் 46/-<br>தினை - ரூபாய் 68/-<br>குதிரைவாலி - ரூபாய் 66 /- | | |

| **நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும்** | **பயன்களைப் பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும்** | **தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர்** |
|---|---|---|
| சாமை,வரகு, பனிவரகு **மற்றும் இதர சிறுதானியங்கள்** **- ரூபாய் 65/-**<br>**ஆ) சான்று விதை**<br>சோளம் - ரூபாய் 56/-<br>கம்பு - ரூபாய் 45/-<br>கேழ்வரகு - ரூபாய் 50/-<br>மக்காச்சோளம் - ரூபாய் 40/-<br>வீரிய ஒட்டு மக்காச்சோளம் -ரூபாய் 260/-<br>சாமை, தினை - ரூபாய் 59/-<br>குதிரைவாலி - ரூபாய் 59/-<br>வரகு, பனிவரகு மற்றும் இதர சிறுதானியங்கள் - ரூபாய் 59/-<br>**இ. பாரம்பரிய சிறுதானியங்கள் – ரூபாய் 100/-** | விதை ஆய்வு முடிவுகளின்படி தேர்ச்சி பெற்ற விதைகளுக்கு டான்சிடா கொள்முதல் விலையின்படி மீதமுள்ள தொகை வழங்கப்படும்.<br><br>பாசன வசதி உடைய உழவர்கள்<br>1. நெல் – ஆண்டுக்கு 5 ஏக்கர் விதைப்பண்ணை<br>2. பிறபயிர்கள் – ஆண்டுக்கு 12.5 ஏக்கர் விதைப்பண்ணை. | **<u>கிராம அளவில்</u>**<br>உதவி விதை அலுவலர்<br>**<u>வட்டார அளவில்</u>**<br>உதவி விதை அலுவலர்/ துணை வேளாண்மை அலுவலர்/ வேளாண்மை அலுவலர் மற்றும் வேளாண்மை உதவி இயக்குநர் (உதவி பொது மேலாளர் - தமிழ்நாடு மாநில விதை மேம்பாட்டு முகமை)<br>**<u>மாவட்ட அளவில்</u>**<br>வேளாண்மை துணை இயக்குநர் (துணை பொது மேலாளர் - தமிழ்நாடு மாநில விதை மேம்பாட்டு முகமை)<br>வேளாண்மைஇணை இயக்குநர் (பொது மேலாளர் - தமிழ்நாடு மாநில விதை மேம்பாட்டு முகமை) |
| **3.பயறுவகைகள்**<br>**அ) ஆதார விதை**<br>துவரை - ரூபாய் 105/-<br>உளுந்து - ரூபாய் 107/-<br>பச்சைப்பயறு - ரூபாய் 107/-<br>தட்டைப்பயறு - ரூபாய் 105 /-<br>கொள்ளு - ரூபாய் 71/-<br>கொண்டைக்கடலை (காபுலி) – ரூபாய் 110/-<br>கொண்டைக்கடலை (தேசி) – ரூபாய் 100/-<br>பனிப்பயறு - ரூபாய் 95/-<br>**ஆ) சான்று விதை**<br>துவரை - ரூபாய் 100/- | | |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | பயன்களைப் பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| உளுந்து - ரூபாய் 102/-<br>பச்சைப்பயறு - ரூபாய் 102/-<br>தட்டைப்பயறு - ரூபாய் 100/-<br>கொள்ளு - ரூபாய் 68/-<br>கொண்டைக்கடலை (காபுலி) – ரூபாய் 105/-<br>கொண்டைக்கடலை (தேசி) – ரூபாய் 95/-<br>பனிப்பயறு - ரூபாய் 90/-<br>**இ) பாரம்பரிய பயறு வகைகள் – ரூபாய் 105/-** | உழவர்கள் உறுதியான பாசன ஆதாரம் கொண்டிருக்க வேண்டும்.<br>உழவர்களால் விதை சுத்திகரிப்பு நிலையத்திற்கு கொண்டுவரப்பட்ட விதைகளுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலையில் 80% முன்பணமாக வழங்கப்படும்.<br><br>விதை ஆய்வு முடிவுகளின்படி தேர்ச்சி பெற்ற விதைகளுக்கு டான்சிடா கொள்முதல் விலையின்படி மீதமுள்ள தொகை வழங்கப்படும்.<br><br>பாசன வசதி உடைய உழவர்கள்<br><br>1. நெல் – ஆண்டுக்கு 5 ஏக்கர் விதைப்பண்ணை<br><br>2. பிறபயிர்கள் – ஆண்டுக்கு 12.5 ஏக்கர் விதைப்பண்ணை. | **<u>கிராம அளவில்</u>**<br>உதவி விதை அலுவலர்<br>**<u>வட்டார அளவில்</u>**<br>உதவி விதை அலுவலர்/ துணை வேளாண்மை அலுவலர்/ வேளாண்மை அலுவலர் மற்றும் வேளாண்மை உதவி இயக்குநர் (உதவி பொது மேலாளர் - தமிழ்நாடு மாநில விதை மேம்பாட்டு முகமை)<br>**<u>மாவட்ட அளவில்</u>**<br>வேளாண்மை துணை இயக்குநர் (துணை பொது மேலாளர் - தமிழ்நாடு மாநில விதை மேம்பாட்டு முகமை)<br>வேளாண்மைஇணை இயக்குநர் (பொது மேலாளர் - தமிழ்நாடு மாநில விதை மேம்பாட்டு முகமை) |
| **4.எண்ணெய்வித்துக்கள்**<br>**அ) ஆதார விதை**<br>நிலக்கடலை - ரூபாய் 125/-<br>எள் - ரூபாய் 175/-<br>ஆமணக்கு - ரூபாய் 91/-<br>சூரியகாந்தி - ரூபாய் 105/-<br>சோயாபீன்ஸ் -ரூபாய்.70/-<br>**ஆ)சான்று விதை**<br>நிலக்கடலை - ரூபாய் 120/-<br>எள் - ரூபாய் 167/-<br>ஆமணக்கு வீரிய ஒட்டு } - ரூபாய் 86/-<br>ஆமணக்கு - ரூபாய் 230/-<br>சூரியகாந்தி - ரூபாய் 100/-<br>வீரிய ஒட்டு சூரியகாந்தி } - ரூபாய் 310/-<br>சோயாபீன்ஸ் - ரூபாய்.60/- | | |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | பயன்களைப் பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| 5. பருத்தி<br>**அ) ஆதார விதை**<br>பருத்தி - ரூபாய் 196/-<br>பருத்தி மிகநீண்ட இழை } - ரூபாய் 272/-<br>**ஆ) சான்று விதை**<br>பருத்தி - ரூபாய் 190/-<br>பருத்தி மிகநீண்ட இழை } - ரூபாய் 259/-<br>பருத்தி வீரிய ஒட்டு - ரூபாய் 504/- | உழவர்கள் உறுதியான பாசன ஆதாரம் கொண்டிருக்க வேண்டும்.<br>விவசாயிகளால் விதை சுத்திகரிப்பு நிலையத்திற்கு கொண்டுவரப்பட்ட விதைகளுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலையில் 80% முன்பணமாக வழங்கப்படும்.<br><br>விதை ஆய்வு முடிவுகளின்படி தேர்ச்சி பெற்ற விதைகளுக்கு டான்சிடா கொள்முதல் விலையின்படி மீதமுள்ள தொகை வழங்கப்படும்.<br><br>பாசன வசதி உடைய உழவர்கள்<br>1.நெல் – ஆண்டுக்கு 5 ஏக்கர் விதைப்பண்ணை<br>2. பிறபயிர்கள் – ஆண்டுக்கு 12.5 ஏக்கர் விதைப்பண்ணை. | **<u>கிராம அளவில்</u>**<br>உதவி விதை அலுவலர்<br>**<u>வட்டார அளவில்</u>**<br>உதவி விதை அலுவலர்/ துணை வேளாண்மை அலுவலர்/ வேளாண்மை அலுவலர் மற்றும் வேளாண்மை உதவி இயக்குநர் (உதவி பொது மேலாளர் - தமிழ்நாடு மாநில விதை மேம்பாட்டு முகமை)<br>**<u>மாவட்ட அளவில்</u>**<br>வேளாண்மை துணை இயக்குநர் (துணை பொது மேலாளர் - தமிழ்நாடு மாநில விதை மேம்பாட்டு முகமை)<br>வேளாண்மைஇணை இயக்குநர் (பொது மேலாளர் - தமிழ்நாடு மாநில விதை மேம்பாட்டு முகமை) |
| 6. பசுந்தாள் உரங்கள்<br>**உண்மை நிலை விதைகள்**<br>சணப்பை – ரூபாய் 85/-<br>தக்கைப்பூண்டு – ரூபாய் 95/- | | |
| 7.தீவனப் பயிர்கள்<br>**அ) ஆதார விதை**<br>தீவனச்சோளம் - ரூபாய் 45/-<br>தீவனக்கம்பு - ரூபாய் 44/-<br>வேலிமசால் - ரூபாய் 540/-<br>**ஆ) சான்று விதை**<br>தீவனச்சோளம் - ரூபாய் 40/-<br>தீவனக்கம்பு - ரூபாய் 40/-<br>வேலிமசால் - ரூபாய் 530/- | | |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | பயன்களைப் பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| **I.ஆ. 2026-27 ஆம் ஆண்டின் விதைகளுக்கான விற்பனை விலை (ரூபாய் /கிலோ)** | | |
| **1. நெல்**<br>**அ) ஆதார விதை**<br>மேம்படுத்தப்பட்ட<br>வெள்ளை பொன்னி – ரூபாய் 53/-<br>மிகச்சன்ன<br>இரகங்கள் - ரூபாய் 48/-<br>சன்ன இரகங்கள் மற்றும்<br>மத்திய இரகங்கள் - ரூபாய் 47/-<br>மோட்டா இரகங்கள் - ரூபாய் 44/-<br>**ஆ) சான்று விதை**<br>மேம்படுத்தப்பட்ட<br>வெள்ளை பொன்னி – ரூபாய் 52/-<br>மிகச்சன்ன இரகங்கள் - ரூபாய் 46/-<br>சன்ன இரகங்கள் மற்றும்<br>மத்திய இரகங்கள் - ரூபாய் 45/-<br>மோட்டா இரகங்கள் - ரூபாய் 43/-<br>**இ) உண்மைநிலை விதை**<br>பாரம்பரிய நெல் இரகங்கள் - ரூபாய் 70/-<br>**2.சிறுதானியங்கள்**<br>**அ) ஆதார விதை**<br>சோளம் - ரூபாய் 82/-<br>கம்பு - ரூபாய் 66/-<br>கேழ்வரகு - ரூபாய் 74/-<br>மக்காச்சோளம் - ரூபாய் 60/-<br>தினை - ரூபாய் 82/-<br>குதிரைவாலி - ரூபாய் 84 /-<br>சாமை,வரகு,<br>பனிவரகு மற்றும் இதர<br>சிறுதானியங்கள் – ரூபாய் 82/-<br>**ஆ) சான்று விதை**<br>சோளம் - ரூபாய் 72/-<br>கம்பு - ரூபாய் 58/-<br>கேழ்வரகு - ரூபாய் 65/-<br>மக்காச்சோளம் - ரூபாய் 52/- | அனைத்து மாவட்ட உழவர்கள் (சென்னை மற்றும் நீலகிரி நீங்கலாக) | **<u>கிராம அளவில்</u>**<br>உதவி வேளாண்மை அலுவலர்/ உதவி தோட்டக்கலை அலுவலர்/ உதவி வேளாண்மை அலுவலர் (வேளாண் வணிகம்)<br>**<u>வட்டார அளவில்</u>**<br>உதவி விதை அலுவலர்/ துணை வேளாண்மை அலுவலர்/ வேளாண்மை அலுவலர் மற்றும் வேளாண்மை உதவி இயக்குநர் (உதவி பொது மேலாளர் - தமிழ்நாடு மாநில விதை மேம்பாட்டு முகமை)<br>**<u>மாவட்ட அளவில்</u>**<br>வேளாண்மை துணை இயக்குநர் (துணை பொது மேலாளர் - தமிழ்நாடு மாநில விதை மேம்பாட்டு முகமை)<br>வேளாண்மை இணை இயக்குநர் (பொது மேலாளர் தமிழ்நாடு மாநில விதை மேம்பாட்டு முகமை) |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | பயன்களைப் பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| வீரியஒட்டு<br>மக்காச்சோளம் - ரூபாய் 327/-<br>தினை - ரூபாய் 73/-<br>குதிரைவாலி - ரூபாய் 73/-<br>சாமை,வரகு, பனிவரகு மற்றும் இதர சிறுதானியங்கள் - ரூபாய் 73/-<br>**இ) பாரம்பரிய சிறுதானியங்கள்** –ரூபாய் 120/- | | |
| **3.பயறுவகைகள்**<br>**அ) ஆதார விதை**<br>துவரை - ரூபாய் 129/-<br>உளுந்து - ரூபாய் 131/-<br>பச்சைப்பயறு - ரூபாய் 131/-<br>தட்டைப்பயறு - ரூபாய் 129/-<br>கொள்ளு - ரூபாய் 88/-<br>கொண்டைக் கடலை (காபுலி) – ரூபாய் 135/-<br>கொண்டைக் கடலை(தேசி) – ரூபாய் 122/-<br>பனிப்பயறு - ரூபாய் 116/-<br>**ஆ) சான்று விதை**<br>துவரை - ரூபாய் 123/-<br>உளுந்து - ரூபாய் 125/-<br>பச்சைப்பயறு - ரூபாய் 125/-<br>தட்டைப்பயறு - ரூபாய் 123/-<br>கொள்ளு - ரூபாய் 84/-<br>கொண்டைக்கடலை (காபுலி) – ரூபாய் 129/-<br>கொண்டைக்கடலை (தேசி) – ரூபாய் 117/<br>பனிப்பயறு -ரூபாய் 111/-<br>**இ. பாரம்பரிய பயறுவகைகள் -ரூபாய் 130/-** | அனைத்து மாவட்ட உழவர்கள் (சென்னை மற்றும் நீலகிரி நீங்கலாக) | **<u>கிராம அளவில்</u>**<br>உதவி வேளாண்மை அலுவலர்/ உதவி தோட்டக்கலை அலுவலர்/ உதவி வேளாண்மை அலுவலர் (வேளாண் வணிகம்)<br>**<u>வட்டார அளவில்</u>**<br>உதவி விதை அலுவலர்/ துணை வேளாண்மை அலுவலர்/ வேளாண்மை அலுவலர் மற்றும் வேளாண்மை உதவி இயக்குநர் (உதவி பொது மேலாளர் - தமிழ்நாடு மாநில விதை மேம்பாட்டு முகமை) |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | பயன்களைப் பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| **4.எண்ணெய் வித்துக்கள்**<br>**அ) ஆதார விதை**<br>நிலக்கடலை - ரூபாய் 149/-<br>எள் - ரூபாய் 207/-<br>ஆமணக்கு - ரூபாய் 108/-<br>சூரியகாந்தி - ரூபாய் 125/-<br>சோயாபீன்ஸ் - ரூபாய் - 82/-<br>**ஆ)சான்று விதை**<br>நிலக்கடலை - ரூபாய் 143/-<br>எள் - ரூபாய் 197/-<br>ஆமணக்கு - ரூபாய் 103/-<br>வீரிய ஒட்டு ஆமணக்கு- ரூபாய் 322/-<br>சூரியகாந்தி - ரூபாய் 119/-<br>வீரிய ஒட்டு சூரியகாந்தி –ரூபாய் 522/<br>சோயாபீன்ஸ் - ரூபாய்.72/- | | **மாவட்ட அளவில்**<br>வேளாண்மை துணை இயக்குநர் (துணை பொது மேலாளர் - தமிழ்நாடு மாநில விதை மேம்பாட்டு முகமை)<br>வேளாண்மை இணை இயக்குநர் (பொது மேலாளர் - தமிழ்நாடு மாநில விதை மேம்பாட்டு முகமை) |
| **5.பருத்தி**<br>**அ) ஆதார விதை**<br>பருத்தி - ரூபாய் 207/-<br>பருத்தி மிக நீண்ட இழை - ரூபாய் 283/-<br>**ஆ) சான்று விதை**<br>பருத்தி - ரூபாய் 204/-<br>பருத்தி மிக நீண்ட இழை - ரூபாய் 276/-<br>பருத்தி வீரிய ஒட்டு -ரூபாய் 609/-<br>**6. பசுந்தாள் உரங்கள்**<br>**உண்மை நிலை விதைகள்**<br>சணப்பை – ரூபாய் 93/-<br>தக்கைப்பூண்டு – ரூபாய் 103/- | அனைத்து மாவட்ட உழவர்கள் (சென்னை மற்றும் நீலகிரி நீங்கலாக) | **கிராம அளவில்**<br>உதவி வேளாண்மை அலுவலர் / உதவி தோட்டக்கலை அலுவலர் / உதவி வேளாண்மை அலுவலர் (வேளாண் வணிகம்).<br>**வட்டார அளவில்**<br>உதவி விதை அலுவலர்/ துணை வேளாண்மை அலுவலர்/ வேளாண்மை |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | பயன்களைப் பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| **7.தீவனப்பயிர்கள்**<br>**அ) ஆதார விதை**<br>தீவனச்சோளம் - ரூபாய் 57/-<br>தீவனக்கம்பு - ரூபாய் 57/-<br>வேலிமசால் - ரூபாய் 642/-<br>**ஆ) சான்று விதை**<br>தீவனச்சோளம் - ரூபாய் 56/-<br>தீவனக்கம்பு - ரூபாய் 56/-<br>வேலிமசால் - ரூபாய் 624/- | | அலுவலர் மற்றும் வேளாண்மை உதவி இயக்குநர் (உதவி பொது மேலாளர் - தமிழ்நாடு மாநில விதை மேம்பாட்டு முகமை)<br>**<u>மாவட்ட அளவில்</u>**<br>வேளாண்மை துணை இயக்குநர் (துணை பொது மேலாளர் - தமிழ்நாடு மாநில விதை மேம்பாட்டு முகமை)<br>வேளாண்மை இணை இயக்குநர் (பொது மேலாளர் - தமிழ்நாடு மாநில விதை மேம்பாட்டு முகமை) |

<u>குறிப்பு:</u>

ஒவ்வொரு ஆண்டும் சான்று விதைகளுக்கு/உண்மைநிலை விதைகளுக்கு தமிழ்நாடு மாநில விதை மேம்பாட்டு முகமையின் ஆட்சி மன்றக்குழு மூலம் கொள்முதல் மற்றும் விற்பனை விலை நிர்ணயம் செய்யப்படுகிறது.

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | பயன்களைப் பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| **II) மண் வளத்தைப்பாதுகாக்க உழவர்களுக்கு வழங்கப்படும் உதவிகள்** | | |
| **1) நுண்ணூட்ட உரக் கலவை விநியோகம்** | | |
| **அ. அனைத்து பயிர்களுக்கான நுண்ணூட்ட உரக்கலவை முழு விலையில் விநியோகித்தல் – கிலோ ஒன்றிற்கு**<br><br>நெல் (அடி உரம்) : ரூபாய் 62/-<br>சிறுதானியங்கள் : ரூபாய் 114/-<br>தென்னை : ரூபாய் 116/-<br>பருத்தி (அடி உரம்) : ரூபாய் 141/-<br>பயறுவகைகள் : ரூபாய் 148/-<br>கரும்பு (அடி உரம்) : ரூபாய் 71/-<br>நிலக்கடலை (அடி உரம்) : ரூபாய் 89/-<br>எலுமிச்சை : ரூபாய் 140/-<br>காய்கறிகள் : ரூபாய் 122/-<br>வாழை : ரூபாய் 119/-<br>மிளகாய் : ரூபாய் 173/- | மாநிலத்தில் உள்ள அனைத்து உழவர்கள் சென்னை தவிர. | **உழவர்கள் உழவர் செயலி**'யை பதிவிறக்கம் செய்து இடுபொருள் முன்பதிவில் தாங்களாகவே பதிவு செய்யலாம்.<br>**கிராம அளவில்**<br>உதவி வேளாண்மை அலுவலர்/ உதவி தோட்டக்கலை அலுவலர்/ உதவி வேளாண்மை அலுவலர் (வேளாண் வணிகம்).<br>**வட்டார அளவில்**<br>துணை வேளாண்மை அலுவலர் / வேளாண்மை அலுவலர் / வேளாண்மை உதவி இயக்குநர் |
| **ஆ. இலைவழி தெளிப்பு**<br>கரும்பு : ரூபாய் 92/-<br>பருத்தி : ரூபாய் 69/-<br>நெல் : ரூபாய் 76/- | | **மாவட்ட அளவில்**<br>வேளாண்மை துணை இயக்குநர் (மத்திய அரசு திட்டம் மற்றும் மாநிலத் திட்டம்) / வேளாண்மை இணை இயக்குநர். |

| **நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும்** | **பயன்களைப் பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும்** | **தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர்** |
|---|---|---|
| **2) திரவ உயிர் உர விநியோகம்** | | |
| ஒன்பது வகையான திரவ உயிர் உரங்கள் 22 உயிர் உற்பத்தி மையங்களில் உற்பத்தி செய்து உழவர்களுக்கு வெவ்வேறு திட்டங்களின் கீழ் மானியத்தில் வழங்கப்பட்டு வருகிறது.<br>**9 வகையான திரவ உயிர் உரங்கள்** (அசோஸ்பைரில்லம் (நெல், இதர பயிர்கள்), ரைசோபியம் (நிலக்கடலை, பயறு வகைகள்), பாஸ்போபாக்டீரியா, பொட்டாஷ் மொபிலைசிங் பாக்டீரியா (KMB), அசோபாஸ் (நெல்), அசோபாஸ் (இதர பயிர்கள்) மற்றும் துத்தநாகம் கரைக்கும் பாக்டீரியா (ZSB)) - (முழுவிலை =1லிட்டர் - ரூபாய் 300/-) | மாநிலத்தில் உள்ள அனைத்து உழவர்கள் சென்னை தவிர. | **உழவர்கள் உழவர் செயலி**'யை பதிவிறக்கம் செய்து இடுபொருள் முன்பதிவில் தாங்களாகவே பதிவு செய்யலாம்.<br>**கிராம அளவில்**<br>உதவி வேளாண்மை அலுவலர் / உதவி தோட்டக்கலை அலுவலர்/ உதவி வேளாண்மை அலுவலர் (வேளாண் வணிகம்).<br>**வட்டார அளவில்**<br>துணை வேளாண்மை அலுவலர் / வேளாண்மை அலுவலர் / வேளாண்மை உதவி இயக்குநர்<br>**மாவட்ட அளவில்**<br>வேளாண்மை துணை இயக்குநர் (மத்திய அரசு திட்டம் மற்றும் மாநிலத் திட்டம்) / வேளாண்மை இணை இயக்குநர். |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | பயன்களைப் பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| **3) மண் மற்றும் பாசன நீர் மாதிரிகள் பரிசோதனை** | | |
| **அ) மண் மாதிரி பரிசோதனை** மண்ணில் உள்ள சத்துக்களை பரிசோதனை செய்ய சலுகைக் கட்டணமாக மாதிரி ஒன்றிற்கு ரூபாய் 30 வசூலிக்கப்படுகிறது (பேரூட்டச் சத்துக்களை பரிசோதனை செய்ய மாதிரி ஒன்றிற்கு ரூபாய் 15/- மற்றும் நுண்ணூட்டச் சத்துக்களை பரிசோதனை செய்ய மாதிரி ஒன்றிற்கு ரூபாய் 15/-).<br><br>ஆ) பாசன நீர் மாதிரி பரிசோதனை பாசன நீர் மாதிரிகளைப் பரிசோதனை செய்ய சலுகைக் கட்டணமாக மாதிரி ஒன்றிற்கு ரூபாய் 30/- வசூலித்தல். | மாநிலத்தில் உள்ள அனைத்து விவசாயிகள். | <u>**கிராம அளவில்**</u> உதவி வேளாண்மை அலுவலர் / உதவி தோட்டக்கலை அலுவலர்/ உதவி வேளாண்மை அலுவலர் (வேளாண் வணிகம்).<br><u>**வட்டார அளவில்**</u> துணை வேளாண்மை அலுவலர் / வேளாண்மை அலுவலர் மற்றும் வேளாண்மை உதவி இயக்குநர்<br><u>**மாவட்ட அளவில்**</u> மண் பரிசோதனை நிலையம் /நடமாடும் மண் பரிசோதனை நிலையம், வேளாண்மை அலுவலர்கள் மற்றும் உதவி வேளாண்மை அலுவலர்கள், வேளாண்மை துணை இயக்குநர் (மாநில திட்டம்) /வேளாண்மை இணை இயக்குநர். |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | பயன்களைப் பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| **III. உயிரி கட்டுப்பாட்டு காரணிகள் மூலம் பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக விவசாயிகளுக்கு வழங்கப்படும் உதவிகள்** | | |
| **1. உயிரி கட்டுப்பாட்டு காரணிகள் உற்பத்தி மற்றும் விநியோகம்** | | |
| அ) ***டிரைக்கோடெர்மா விரிடி*** கிலோ ஒன்றிற்கு ரூபாய் 135/-<br>ஆ) ***சூடோமோனாஸ் புளூரசன்ஸ்*** கிலோ ஒன்றிற்கு ரூபாய் 180/-<br>இ) ***டிரைக்கோகிரம்மா கைலோனிஸ்*** ரூபாய் 40/சி.சி<br>ஈ) **என்.பி.வி. வைரஸ்** லிட்டர் ஒன்றிற்கு ரூபாய் 850 /-<br>உ) ***மெட்டாரைசியம் அனிசோபிலியே*** கிலோ ஒன்றிற்கு ரூபாய் 135/- | மாநிலத்தில் உள்ள அனைத்து விவசாயிகள் | **<u>கிராம அளவில்</u>**<br>உதவி வேளாண்மை அலுவலர்/ உதவி தோட்டக்கலை அலுவலர்/ உதவி வேளாண்மை அலுவலர் (வேளாண் வணிகம்).<br>**<u>வட்டார அளவில்</u>**<br>துணை வேளாண்மை அலுவலர் / வேளாண்மை அலுவலர் மற்றும் வேளாண்மை உதவி இயக்குநர்<br>**<u>மாவட்ட அளவில்</u>**<br>வேளாண்மை இணை இயக்குநர் |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | பயன்களைப் பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| **IV. தமிழ்நாடு மண்வளப் பாதுகாப்பு இயக்கம்** | | |
| **4.1. மண்நல அட்டைகள் வழங்குதல்**<br>**அ.** 1 இலட்சம் ஏக்கர் (திட்டம் செயல்படுத்துவதற்கு முன் மற்றும் பின்) ஒரு மண் மாதிரி ரூ.200/மண் மாதிரி<br>ஆ. இதர திட்டங்கள் மூலம் 3 இலட்சம் மண்நல அட்டைகள் ( 1.50 இலட்சம் மண்நல அட்டைகள் ரூ.300/மண் மாதிரி 1.50 இலட்சம் மண் நல அட்டைகள் ரூ.110/மண் மாதிரி) | சென்னை மாவட்டம் நீங்கலாக அனைத்து மாவட்ட விவசாயிகளும் இத்திட்டத்தின் பயனைப் பெற தகுதியுடையவராவர் | **<u>கிராம அளவில்</u>**<br>உதவி வேளாண்மை அலுவலர் / உதவி தோட்டக்கலை அலுவலர் / உதவி வேளாண்மை அலுவலர் (வேளாண் வணிகம்).<br>**<u>வட்டார அளவில்</u>**<br>துணை வேளாண்மை அலுவலர்/ வேளாண்மை அலுவலர் மற்றும் வேளாண்மை உதவி இயக்குநர்<br>**<u>மாவட்ட அளவில்</u>**<br>வேளாண்மை துணை இயக்குநர் (மாநிலத் திட்டம்) / வேளாண்மை இணை இயக்குநர் |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | பயன்களைப் பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| **4.2. பசுந்தாள் உர மற்றும் பல தானிய விதைகள் விநியோகம்**<br>I. பசுந்தாள் உர விதைகள் விநியோகம் - 75 சதவீதம் மானியத்தில் வழங்கப்படும்.<br>II. பலதானிய பயிர் விதை கலவை விநியோகம் - 75 சதவீதம் மானியத்தில் வழங்கப்படும்.<br>III. நிலத்திலேயே மடக்கி உழுதுவதற்கான நிதியுதவி (பின்னேற்பு மானியமாக ஒரு ஏக்கருக்கு ரூ.3,000) | சென்னை மாவட்டம் நீங்கலாக அனைத்து மாவட்ட விவசாயிகளும் இத்திட்டத்தின் பயனைப் பெற தகுதியுடையவராவர் | **கிராம அளவில்**<br>உதவி வேளாண்மை அலுவலர் / உதவி தோட்டக்கலை அலுவலர்/ உதவி வேளாண்மை அலுவலர் (வேளாண் வணிகம்).<br>**வட்டார அளவில்**<br>துணை வேளாண்மை அலுவலர்/ வேளாண்மை அலுவலர் மற்றும் வேளாண்மை உதவி இயக்குநர்<br>**மாவட்ட அளவில்**<br>வேளாண்மை துணை இயக்குநர் (மாநிலத் திட்டம்)/ வேளாண்மை இணை இயக்குநர் |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | பயன்களைப் பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| **4.3. திரவ உயிர் உரங்கள் விநியோகம்**<br>1 இலட்சம்ஏக்கர் @ ஏக்கருக்கு 1.50 லிட்டர் – 100% மானியம் | சென்னை மாவட்டம் நீங்கலாக அனைத்து மாவட்ட விவசாயிகளும் இத்திட்டத்தின் பயனைப் பெற தகுதியுடையவராவர் | **<u>கிராம அளவில்</u>**<br>உதவி வேளாண்மை அலுவலர் / உதவி தோட்டக்கலை அலுவலர்/ உதவி வேளாண்மை அலுவலர் (வேளாண் வணிகம்).<br>**<u>வட்டார அளவில்</u>**<br>துணை வேளாண்மை அலுவலர்/ வேளாண்மை அலுவலர் மற்றும் வேளாண்மை உதவி இயக்குநர்<br>**<u>மாவட்ட அளவில்</u>**<br>வேளாண்மை துணை இயக்குநர் (மாநிலத் திட்டம்)/ வேளாண்மை இணை இயக்குநர் |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | பயன்களைப் பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| **4.4. பாரம்பரிய வேளாண் வளர்ச்சித் திட்டம்**<br>1) தொகுப்புகள் உருவாக்கம் (50 ஏக்கர்), கண்டுநர் சுற்றுலா, திறன் மேம்பாட்டு பயிற்சி அளித்தல்<br>2) மண்டல கவுன்சில் மூலம் பங்கேற்பு சான்றளிப்பு மற்றும் எச்ச பகுப்பாய்வு செய்திட ஊக்கத்தொகை<br>3) உயிர்ம நிலமாக மாற்றுதல், இயற்கை இடுபொருட்கள், பண்ணை அளவில் இடுபொருட்கள் உற்பத்தி கட்டமைப்பு உருவாக்குதல் ஆகியவற்றிற்கு விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை<br>4) சந்தைப்படுத்துதல், சிப்பமிடுதல், மதிப்புகூட்டல், உட்கட்டமைப்பு வசதிகள், வர்த்தக பெயரிடுதல், வர்த்தக கண்காட்சி, மேளா, உயிர்ம வேளாண்மை கண்காட்சியில் கலந்து கொள்ளுதல் மற்றும் உள்ளூர் சந்தைப்படுத்துதல் முயற்சிகளுக்கு ஊக்கத்தொகை. | சென்னை, ஈரோடு, காஞ்சிபுரம், நாமக்கல், இராணிப்பேட்டை, கன்னியாகுமரி, திருவள்ளூர், திருநெல்வேலி, தென்காசி மற்றும் வேலூர் நீங்கலாக பிற அனைத்து மாவட்ட விவசாயிகள் | **<u>கிராம அளவில்</u>**<br>உதவி வேளாண்மை அலுவலர் / உதவி தோட்டக்கலை அலுவலர்/ உதவி வேளாண்மை அலுவலர் (வேளாண் வணிகம்).<br>**<u>வட்டார அளவில்</u>**<br>துணை வேளாண்மை அலுவலர்/ வேளாண்மை அலுவலர் மற்றும் வேளாண்மை உதவி இயக்குநர்<br>**<u>மாவட்ட அளவில்</u>**<br>வேளாண்மை இணை இயக்குநர் |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | பயன்களைப் பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| **4.5. இயற்கை வேளாண்மைக்கான தேசிய இயக்கம்**<br>இத்திட்டத்தின் கீழ் பின்வரும் இனங்களுக்கு நிதியுதவி வழங்கப்படும்<br>1. சமுதாய வளப்பயிற்றுநர்கள் (Krishi sakhis) நியமனம்<br>2. கிராமங்களில் இயற்கை வேளாண்மை பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்துதல்<br>3. இயற்கை வேளாண்மையில் ஈடுபடும் உழவர்களுக்கு ஊக்கத்தொகை<br>4. இயற்கை வேளாண்மை சான்றளிப்பு<br>5. தொடக்க வழிகாட்டு பயிற்சி வழங்குதல்<br>6. விவசாயிகளுக்கான இயற்கை வேளாண்மைக்கான தளைகள் வழங்குதல்<br>7. சமுதாய வளப்பயிற்றுநர்கள் (Krishi sakhis) அலைபேசி வாங்க ஆதரவு<br>8. இயற்கை இடுபொருள் மையங்கள் அமைத்தல்<br>9. முதன்மை விவசாய பயிற்சியாளர்களுக்கு, KVK விஞ்ஞானிகளுக்கு, சமுதாய வளப்பயிற்றுக்கான பயிற்சிகள் | சென்னை, செங்கல்பட்டு, கன்னியாகுமரி மற்றும் இராணிப்பேட்டை மாவட்டம் நீங்கலாக அனைத்து மாவட்ட விவசாயிகளும் இத்திட்டத்தின் பயனைப் பெற தகுதியுடையவராவர் | **<u>கிராம அளவில்</u>**<br>உதவி வேளாண்மை அலுவலர் / உதவி தோட்டக்கலை அலுவலர்/ உதவி வேளாண்மை அலுவலர் (வேளாண் வணிகம்).<br>**<u>வட்டார அளவில்</u>**<br>துணை வேளாண்மை அலுவலர்/ வேளாண்மை அலுவலர் மற்றும் வேளாண்மை உதவி இயக்குநர்<br>**<u>மாவட்ட அளவில்</u>**<br>வேளாண்மை இணை இயக்குநர் |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | பயன்களைப் பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| 4.6. **உயிர்ம வேளாண்மை விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை உயிர்ம வேளாண்மையை ஊக்குவிக்க** ஒரு ஏக்கருக்கு நிதியுதவி ரூ.4,000 வழங்கப்படும். | சென்னை மாவட்டம் நீங்கலாக அனைத்து மாவட்ட விவசாயிகளும் இத்திட்டத்தின் பயனைப் பெற தகுதியுடையவராவர் | **கிராம அளவில்**<br>உதவி வேளாண்மை அலுவலர் / உதவி தோட்டக்கலை அலுவலர் / உதவி வேளாண்மை அலுவலர் (வேளாண் வணிகம்).<br>**வட்டார அளவில்**<br>துணை வேளாண்மை அலுவலர்/ வேளாண்மை அலுவலர் மற்றும் வேளாண்மை உதவி இயக்குநர்<br>**மாவட்ட அளவில்**<br>வேளாண்மை துணை இயக்குநர் (மாநில திட்டம்) / வேளாண்மை இணை இயக்குநர் |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | பயன்களைப் பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| 4.7. **பிரச்சனைக்குரிய நிலங்களை சீர்திருத்துதல்**<br>ஒரு ஏக்கருக்கு மானியமாக ரூபாய். 10,000 வழங்கபடும். இத்திட்டம், 2000 ஏக்கர் பரப்பளவில் செயல்படுத்தபடும். | சென்னை மாவட்டம் நீங்கலாக அனைத்து மாவட்ட விவசாயிகளும் இத்திட்டத்தின் பயனைப் பெற தகுதியுடையவராவர் | **<u>கிராம அளவில்</u>**<br>உதவி வேளாண்மை அலுவலர் / உதவி தோட்டக்கலை அலுவலர்/ உதவி வேளாண்மை அலுவலர் (வேளாண் வணிகம்).<br>**<u>வட்டார அளவில்</u>**<br>துணை வேளாண்மை அலுவலர்/ வேளாண்மை அலுவலர் மற்றும் வேளாண்மை உதவி இயக்குநர்<br>**<u>மாவட்ட அளவில்</u>**<br>வேளாண்மை துணை இயக்குநர் (மாநில திட்டம்)/ வேளாண்மை இணை இயக்குநர் |

| **நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும்** | **பயன்களைப் பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும்** | **தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர்** |
|---|---|---|
| **4.8. மண் நல விழிப்புணர்வு மற்றும் பிரச்சாரங்கள்**<br>ஒரு கிராமத்திற்கு 4 விழிப்புணர்வு முகாம்கள் ரூ.5,000/முகாம் | சென்னை மாவட்டம் நீங்கலாக அனைத்து மாவட்ட விவசாயிகளும் இத்திட்டத்தின் பயனைப் பெற தகுதியுடையவராவர் | **<u>கிராம அளவில்</u>**<br>உதவி வேளாண்மை அலுவலர் / உதவி தோட்டக்கலை அலுவலர்/ உதவி வேளாண்மை அலுவலர் (வேளாண் வணிகம்).<br>**<u>வட்டார அளவில்</u>**<br>துணை வேளாண்மை அலுவலர்/ வேளாண்மை அலுவலர் மற்றும் வேளாண்மை உதவி இயக்குநர்<br>**<u>மாவட்ட அளவில்</u>**<br>வேளாண்மை துணை இயக்குநர் (மாநில திட்டம்) / வேளாண்மை இணை இயக்குநர் |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | பயன்களைப் பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| **V. மாநில வேளாண் வளர்ச்சித் திட்டம்** | | |
| **5.1.) டெல்டா மாவட்டங்களில் குறுவை சிறப்பு தொகுப்பு திட்டம்** | | |
| **நெல் இயந்திர நடவு / நேரடி நெல் விதைப்பிற்கான மானியம் (100% பின்னேற்பு மானியம்)** @ ரூ.4000/ஏக்கர் - ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக 2 ஏக்கருக்கு மானியம் | தஞ்சாவூர், திருவாரூர், மயிலாடுதுறை, கடலூர், நாகப்பட்டினம், திருச்சி, அரியலூர் மாவட்ட விவசாயிகள் | **<u>கிராம அளவில்</u>** உதவி வேளாண்மை அலுவலர் / உதவி தோட்டக்கலை அலுவலர்/ உதவி வேளாண்மை அலுவலர் (வேளாண் வணிகம்)/உதவி விதை அலுவலர். **<u>வட்டார அளவில்</u>** துணை வேளாண்மை அலுவலர்/ வேளாண்மை அலுவலர் மற்றும் வேளாண்மை உதவி இயக்குநர் **<u>மாவட்ட அளவில்</u>** வேளாண்மை இணை இயக்குநர் |
| **நெல் நுண்ணூட்டச்சத்து கலவை விநியோகம்** @ ரூ. 147.6/ஏக்கர் அல்லது 50 % மானியம் இவற்றுள் எது குறைவானது - ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக 5 ஏக்கருக்கு மானியம் | | |
| **திரவ உயிர் உரங்கள் விநியோகம்** @ ரூ.60/ஏக்கர் அல்லது 50 % மானியம் இவற்றுள் எது குறைவானது - ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக 5 ஏக்கருக்கு மானியம் | | |
| **விதை நெல் விநியோகம் (பத்து ஆண்டுகளுக்கு மேற்பட்ட நெல் இரகங்கள்)** @ ரூ. 10/கிலோ அல்லது மொத்த விலையில் 50% மானியம் இவற்றில் எது குறைவோ, ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக 5 ஏக்கருக்கு மானியம் | | |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | பயன்களைப் பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| **விதை நெல் விநியோகம்** (பத்து **ஆண்டுகளுக்கு உட்பட்ட நெல் இரகங்கள்**)<br>@ ரூ. 20/கிலோ அல்லது மொத்த விலையில் 50% மானியம் இவற்றில் எது குறைவோ, ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக 5 ஏக்கருக்கு மானியம் | தஞ்சாவூர், திருவாரூர், மயிலாடுதுறை, கடலூர், நாகப்பட்டினம், திருச்சி, அரியலூர் மாவட்ட விவசாயிகள் | **கிராம அளவில்**<br>உதவி வேளாண்மை அலுவலர் / உதவி தோட்டக்கலை அலுவலர்/ உதவி வேளாண்மை அலுவலர் (வேளாண் வணிகம்)/உதவி விதை அலுவலர்.<br>**வட்டார அளவில்**<br>துணை வேளாண்மை அலுவலர்/ வேளாண்மை அலுவலர் மற்றும் வேளாண்மை உதவி இயக்குநர்<br>**மாவட்ட அளவில்**<br>வேளாண்மை இணை இயக்குநர் |
| **புதிதாக வெளியிடப்பட்ட இரகங்களின் சான்று விதை உற்பத்தியினை ஊக்குவித்தல்** (**10வருடங்களுக்குட்பட்ட நெல் இரகம்**)<br>@ ரூ. 8/கிலோ - ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக ரூ. 40,000 மானியம் | | |

| **நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும்** | **பயன்களைப் பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும்** | **தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர்** |
|---|---|---|
| **டெல்டா அல்லாத இதர மாவட்டங்களில் கார் / குறுவை / சொர்ணவாரி சிறப்பு தொகுப்பு** | | |
| **நெல் இயந்திர நடவு / நேரடி நெல் விதைப்பிற்கான மானியம்** (100% **பின்னேற்பு மானியம்**) @ ரூ.4000/ஏக்கர் - ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக 2 ஏக்கருக்கு மானியம் | விழுப்புரம், கள்ளக்குறிச்சி, சேலம், தருமபுரி, நாமக்கல், திருப்பூர், கோயம்புத்தூர், ஈரோடு, மதுரை, தேனி, திண்டுக்கல், விருதுநகர், தூத்துக்குடி, பெரம்பலூர், தென்காசி, திருப்பத்தூர், திருநெல்வேலி, செங்கல்பட்டு, திருவள்ளூர், இராணிப்பேட்டை, காஞ்சிபுரம், வேலூர், திருவண்ணாமலை, புதுக்கோட்டை, கிருஷ்ணகிரி, இராமநாதபுரம், கரூர், கன்னியாகுமரி, சிவகங்கை, கடலூர், அரியலூர் மற்றும் திருச்சி மாவட்ட விவசாயிகள் | **கிராம அளவில்**<br>உதவி வேளாண்மை அலுவலர்/ உதவி தோட்டக்கலை அலுவலர்/ உதவி வேளாண்மை அலுவலர் (வேளாண் வணிகம்)/ உதவி விதை அலுவலர்.<br>**வட்டார அளவில்**<br>துணை வேளாண்மை அலுவலர்/ வேளாண்மை அலுவலர் மற்றும் வேளாண்மை உதவி இயக்குநர்<br>**மாவட்ட அளவில்**<br>வேளாண்மை இணை இயக்குநர் |
| **நெல் நுண்ணூட்டச்சத்து கலவை விநியோகம்**<br>ரூ. 147.6/ஏக்கர் அல்லது 50 % மானியம் இவற்றுள் எது குறைவானது- - ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக 5 ஏக்கருக்கு மானியம் | | |
| **திரவ உயிர் உரங்கள் விநியோகம்** @ ரூ.60/ஏக்கர் அல்லது 50 % மானியம் இவற்றுள் எது குறைவானது - ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக 5 ஏக்கருக்கு மானியம் | | |
| **விதை நெல் விநியோகம்** (பத்து **ஆண்டுகளுக்கு மேற்பட்ட நெல் இரகங்கள்**)<br>@ ரூ. 10/கிலோ அல்லது மொத்த விலையில் 50% மானியம் இவற்றில் எது குறைவோ, ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக 5 ஏக்கருக்கு மானியம் | | |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | பயன்களைப் பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| **விதை நெல் விநியோகம்** (**பத்து ஆண்டுகளுக்கு உட்பட்ட நெல் இரகங்கள்**)<br>@ ரூ. 20/கிலோ அல்லது மொத்த விலையில் 50% மானியம் இவற்றில் எது குறைவோ, ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக 5 ஏக்கருக்கு மானியம் | விழுப்புரம், கள்ளக்குறிச்சி, சேலம், தருமபுரி, நாமக்கல், திருப்பூர், கோயம்புத்தூர், ஈரோடு, மதுரை, தேனி, திண்டுக்கல், விருதுநகர், தூத்துக்குடி, பெரம்பலூர், தென்காசி, திருப்பத்தூர், திருநெல்வேலி, செங்கல்பட்டு, திருவள்ளூர், இராணிப்பேட்டை, காஞ்சிபுரம், வேலூர், திருவண்ணாமலை, புதுக்கோட்டை, கிருஷ்ணகிரி, இராமநாதபுரம், கரூர், கன்னியாகுமரி, சிவகங்கை, கடலூர், அரியலூர் மற்றும் திருச்சி மாவட்ட விவசாயிகள் | **<u>கிராம அளவில்</u>**<br>உதவி வேளாண்மை அலுவலர் / உதவி தோட்டக்கலை அலுவலர் / உதவி வேளாண்மை அலுவலர் (வேளாண் வணிகம்) / உதவி விதை அலுவலர்.<br>**<u>வட்டார அளவில்</u>**<br>துணை வேளாண்மை அலுவலர்/ வேளாண்மை அலுவலர் மற்றும் வேளாண்மை உதவி இயக்குநர்<br>**<u>மாவட்ட அளவில்</u>**<br>வேளாண்மை இணை இயக்குநர் |
| **புதிதாக வெளியிடப்பட்ட இரகங்களின் சான்று விதை உற்பத்தியினை ஊக்குவித்தல்** (**10 வருடங்களுக்குட்பட்ட நெல் இரகம்**)<br>@ ரூ. 8/கிலோ - ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக ரூ.40,000 மானியம் | | |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | பயன்களைப் பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் |
| --- | --- | --- |
| **5.2. நெல் விதை உற்பத்தி மற்றும் விதை விநியோக மானியத்திற்கான சிறப்புத் திட்டம்** | | |
| **1. சான்று விதை உற்பத்தியினை ஊக்குவித்தல்**<br>கிலோ ஒன்றிற்கு ரூ.8/- ஊக்கத்தொகை ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக ரூ.40,000/- மானியம்<br>**2. சான்று விதை விநியோகத்தினை ஊக்குவித்தல்** (10 **வருடங்களுக்குட்பட்ட நெல் இரகங்கள்**)<br>10 வருடங்களுக்குட்பட்ட நெல் இரகங்களுக்கு கிலோ ஒன்றிற்கு ரூ.20/- அல்லது மொத்த விலையில் 50 சதவீதம் மானியம் இதில் எது குறைவோ அது. **ஒரு விவசாயிக்கு 5 ஏக்கர் வரை மானியம் வழங்கப்படும்.**<br>**3. சான்று விதை விநியோகத்தினை ஊக்குவித்தல்** (10 **வருடங்களுக்கு மேற்பட்ட நெல் இரகங்கள்**)<br>10 வருடங்களுக்கு மேற்பட்ட நெல் இரகங்களுக்கு கிலோ ஒன்றிற்கு ரூ.10/- அல்லது மொத்த விலையில் 50 சதவீதம் மானியம் இதில் எது குறைவோ அது. **ஒரு விவசாயிக்கு 5 ஏக்கர் வரை மானியம் வழங்கப்படும்.** | சென்னை மற்றும் நீலகிரி நீங்கலாக அனைத்து மாவட்ட விவசாயிகள் | **<u>கிராம அளவில்</u>**<br>உதவி வேளாண்மை அலுவலர் / உதவி தோட்டக்கலை அலுவலர்/ உதவி வேளாண்மை அலுவலர் (வேளாண் வணிகம்)/ உதவி விதை அலுவலர்.<br>**<u>வட்டார அளவில்</u>**<br>துணை வேளாண்மை அலுவலர் / வேளாண்மை அலுவலர் மற்றும் வேளாண்மை உதவி இயக்குநர்<br>**<u>மாவட்ட அளவில்</u>**<br>வேளாண்மை இணை இயக்குநர் |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | பயன்களைப் பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| **5.3. குறுதானிய இயக்கம்** | | |
| 1) **குறுதானிய சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு பின்னேற்பு மானியம்**<br>குறுதானியப் பயிர்கள் (குதிரைவாலி, சாமை, தினை,பனிவரகு, வரகு) சாகுபடி செய்வதற்கான பின்னேற்பு மானியம் ரூ.3200/ஏக்கர்.<br><br>2) **குறுதானிய சிறுதளை விநியோகம் ஒரு அலகிற்கு ரூபாய் 350/-**<br>(100% **மானியம்**) | விழுப்புரம், கள்ளக்குறிச்சி, சேலம், ஈரோடு, நாமக்கல், கரூர், தருமபுரி, கிருஷ்ணகிரி, மதுரை, திருப்பூர், திண்டுக்கல், விருதுநகர், திருச்சி, கோயம்புத்தூர், தூத்துக்குடி, தேனி, தென்காசி, வேலூர், திருப்பத்தூர், திருவண்ணாமலை, இராமநாதபுரம், சிவகங்கை, கடலூர், அரியலூர், பெரம்பலூர், புதுக்கோட்டை, திருநெல்வேலி, திருவாரூர் மற்றும் திருவள்ளூர் மாவட்ட விவசாயிகள். | **<u>கிராம அளவில்</u>**<br>உதவி வேளாண்மை அலுவலர்/ உதவி தோட்டக்கலை அலுவலர்/ உதவி வேளாண்மை அலுவலர் (வேளாண் வணிகம்)<br>**<u>வட்டார அளவில்</u>**<br>துணை வேளாண்மை அலுவலர்/ வேளாண்மை அலுவலர் மற்றும் வேளாண்மை உதவி இயக்குநர்<br>**<u>மாவட்ட அளவில்</u>**<br>வேளாண்மை இணை இயக்குநர் |
| **5.4. அதிக ஊட்டச்சத்து நிறைந்த சீமைத் தினை, பாப்பரை மற்றும் குல சாமை பயிர்களை அறிமுகப்படுத்துதல்** | | |
| (1) சீமைத்தினை, பாப்பரை மற்றும் குலசாமை ஆகிய பயிர்களின் செயல்விளக்கத் திடல்கள் - ரூ.36,000/ ஏக்கர் | தருமபுரி, கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை, சேலம், நாமக்கல், கோயம்புத்தூர், ஈரோடு, | **<u>கிராம அளவில்</u>**<br>உதவி வேளாண்மை அலுவலர் / உதவி |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | பயன்களைப் பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| (2) வேளாண் விரிவாக்க அலுவலர்களுக்கு பயிற்சி அளித்தல் – ஒரு நாளுக்கு ரூ.1,500/அலுவலர் வீதம் பயிற்சி அளிக்கப்படும்<br>(3) உழவர்களுக்கு பயிற்சி அளித்தல் – ஒரு நாளுக்கு ரூ.1,250/ உழவர் வீதம் பயிற்சி அளிக்கப்படும் | திண்டுக்கல், தேனி, கரூர், திருப்பூர் மாவட்ட விவசாயிகள் | தோட்டக்கலை அலுவலர்/ உதவி வேளாண்மை அலுவலர் (வேளாண் வணிகம்)<br>**<u>வட்டார அளவில்</u>**<br>துணை வேளாண்மை அலுவலர்/ வேளாண்மை அலுவலர் மற்றும் வேளாண்மை உதவி இயக்குநர்<br>**<u>மாவட்ட அளவில்</u>**<br>வேளாண்மை இணை இயக்குநர் |
| **5.5. சான்று விதைகள் விநியோகத் திட்டம்** | | |
| **சான்று விதைகள் விநியோகத் திட்டம் - பயறு வகைகள்** (கிலோவுக்கு அதிகபட்சமாக ரூ. 30/-) | சென்னை மற்றும் நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக இதர மாவட்ட விவசாயிகள் | விவசாயிகள் உழவர் செயலியில் இடுபொருள் முன்பதிவு செய்து திட்ட பலன்களை பெறலாம்<br>**<u>கிராம அளவில்</u>**<br>உதவி வேளாண்மை அலுவலர் / உதவி தோட்டக்கலை அலுவலர்/ உதவி |

| **நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும்** | **பயன்களைப் பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும்** | **தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர்** |
|---|---|---|
| | | வேளாண்மை அலுவலர் (வேளாண் வணிகம்).<br>**வட்டார அளவில்**<br>துணை வேளாண்மை அலுவலர்/ வேளாண்மை அலுவலர் மற்றும் வேளாண்மை உதவி இயக்குநர்<br>**மாவட்ட அளவில்**<br>வேளாண்மை இணை இயக்குநர் |
| **5.6. மாற்றுப் பயிர் சாகுபடித் திட்டம்** | | |
| **மாற்றுப் பயிர்**<br>(ஒரு ஏக்கருக்கு)<br>**1.பயறு வகை பயிர்கள்:**<br>50 சதவீதம் மானியம் அல்லது ரூபாய் 1250 / - ஏக்கர்<br>**2.எள்**<br>50 சதவீதம் மானியம் அல்லது ரூபாய் 1250 /- ஏக்கர் | சென்னை மற்றும் நீலகிரி, நீங்கலாக இதர மாவட்ட விவசாயிகள் | விவசாயிகள் உழவன் செயலியில் இடுபொருள் முன்பதிவு செய்து திட்ட பலன்களை பெறலாம்<br>**கிராம அளவில்**<br>உதவி வேளாண்மை அலுவலர் / உதவி தோட்டக்கலை அலுவலர்/ உதவி வேளாண்மை அலுவலர் (வேளாண் வணிகம்). |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | பயன்களைப் பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| | | **<u>வட்டார அளவில்</u>**<br>துணை வேளாண்மை அலுவலர்/ வேளாண்மை அலுவலர் மற்றும் வேளாண்மை உதவி இயக்குநர்<br>**<u>மாவட்ட அளவில்</u>**<br>வேளாண்மை இணை இயக்குநர் |
| **5.7. நெல் ஜெயராமன் பாரம்பரிய நெல் இரகங்கள் பாதுகாப்பு இயக்கம்** | | |
| **அ. பாரம்பரிய நெல் இரகங்களுக்கான உற்பத்தி மானியம்**<br>ஒரு கிலோ உண்மை நிலை விதைக்கு ரூபாய் 15/- மானியம் | சென்னை மற்றும் நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக அனைத்து மாவட்ட சிறு, குறு மற்றும் இதர விவசாயிகள் | **<u>கிராம அளவில்</u>**<br>உதவி விதைஅலுவலர்<br>**<u>வட்டார அளவில்</u>**<br>துணை வேளாண்மை அலுவலர் / வேளாண்மை அலுவலர் மற்றும் வேளாண்மை உதவி இயக்குநர்<br>**<u>மாவட்ட அளவில்</u>**<br>வேளாண்மை இணை இயக்குநர் |
| **ஆ. விவசாயிகளுக்கு பாரம்பரிய நெல் இரகங்கள் விநியோகம்.**<br>50 சதவீத மானியத்தில் ஒரு கிலோ விதைக்கு ரூபாய் 35 மானியம் அதிகபட்சமாக ஒரு விவசாயிக்கு 20 கிலோ / ஏக்கர். | சென்னை மற்றும் நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக அனைத்து மாவட்ட சிறு, குறு மற்றும் இதர விவசாயிகள் | **<u>கிராம அளவில்</u>**<br>உதவி வேளாண்மை அலுவலர்/ உதவி தோட்டக்கலை அலுவலர்/ உதவி |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | பயன்களைப் பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் |
| --- | --- | --- |
| | | வேளாண்மை அலுவலர் (வேளாண் வணிகம்).<br>**<u>வட்டார அளவில்</u>**<br>துணை வேளாண்மை அலுவலர் / வேளாண்மை அலுவலர் மற்றும் வேளாண்மை உதவி இயக்குநர்<br>**<u>மாவட்ட அளவில்</u>**<br>வேளாண்மை இணை இயக்குநர் |
| **5.8. பாரம்பரிய சிறுதானியங்கள் மற்றும் பயறுவகை இரகங்கள் பாதுகாத்தல்** | | |
| **அ. பாரம்பரிய சிறுதானியங்கள் மற்றும் பயறுவகை இரகங்களுக்கான உற்பத்தி மானியம்**<br>ஒரு கிலோ உண்மை நிலை விதைக்கு ரூபாய் 15/- மானியம் | சென்னை மற்றும் நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக அனைத்து மாவட்ட சிறு, குறு மற்றும் இதர விவசாயிகள். | **<u>கிராம அளவில்</u>**<br>உதவி விதைஅலுவலர்<br>**<u>வட்டார அளவில்</u>**<br>துணை வேளாண்மை அலுவலர் / வேளாண்மை அலுவலர் மற்றும் வேளாண்மை உதவி இயக்குநர்<br>**<u>மாவட்ட அளவில்</u>**<br>வேளாண்மை இணை இயக்குநர் |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | பயன்களைப் பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| **ஆ. விவசாயிகளுக்கு பாரம்பரிய சிறுதானியங்கள் மற்றும் பயறுவகை இரகங்கள் விநியோகம்.**<br>ஒரு கிலோ விதைக்கு 50 சதவீத மானியம் அல்லது ரூபாய் 60 மானியம் அதிகபட்சமாக ஒரு விவசாயிக்கு 4 கிலோ/ ஏக்கர். | சென்னை மற்றும் நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக அனைத்து மாவட்ட சிறு, குறு மற்றும் இதர விவசாயிகள். | <u>**கிராம அளவில்**</u><br>உதவி வேளாண்மை அலுவலர்/ உதவி தோட்டக்கலை அலுவலர்/ உதவி வேளாண்மை அலுவலர் (வேளாண் வணிகம்).<br><u>**வட்டார அளவில்**</u><br>துணை வேளாண்மை அலுவலர் / வேளாண்மை அலுவலர் மற்றும் வேளாண்மை உதவி இயக்குநர்<br><u>**மாவட்ட அளவில்**</u><br>வேளாண்மை இணை இயக்குநர் |
| **5.9. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் (TNAU) திரவ காட்டுப்பன்றி விரட்டி வழங்குதல்** | | |
| வேளாண் மற்றும் தோட்டக்கலைப் பயிர்களுக்கு காட்டுப்பன்றிகளால் ஏற்படும் சேதத்தைத் தடுக்க, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் (TNAU) உருவாக்கியுள்ள திரவ காட்டுப்பன்றி விரட்டி, விவசாயிகளுக்கு 75% மானியத்தில் வழங்கப்படும்.<br>திட்டக் கூறுகள்:<br>TNAU திரவ காட்டுப்பன்றி விரட்டி, பாட்டில்கள் மற்றும் கட்டும் கம்பி | ➢ சென்னை நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தபடும்.<br>➢ காட்டுப்பன்றிகளால் பயிர்கள் அதிகம் பாதிக்கப்படும் பகுதிகளில், பயிர் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு | <u>**கிராம அளவில்**</u><br>உதவி வேளாண்மை அலுவலர் / உதவி தோட்டக்கலை அலுவலர்/ உதவி வேளாண்மை அலுவலர் (வேளாண் வணிகம்). |

| **நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும்** | **பயன்களைப் பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும்** | **தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர்** |
|---|---|---|
| | முன்னுரிமை வழங்கப்படும்.<br><br>➢ ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக 5 ஏக்கர் பரப்பளவிற்கு மானியம் வழங்கப்படும். | **<u>வட்டார அளவில்</u>**<br>துணை வேளாண்மை அலுவலர் / வேளாண்மை அலுவலர் / தோட்டக்கலை அலுவலர் / வேளாண்மை உதவி இயக்குநர் / தோட்டக்கலை உதவி இயக்குநர்<br>**<u>மாவட்ட அளவில்</u>**<br>வேளாண்மை துணை இயக்குநர் (மாநில திட்டம்) / தோட்டக்கலை துணை இயக்குநர் / வேளாண்மை இணை இயக்குநர்<br>**கரும்பு பயிருக்கு**:<br>**சர்க்கரைத் துறை / சர்க்கரை ஆலை அளவில்**<br>உதவி இயக்குநர் (சர்க்கரை) / கரும்பு அலுவலர் (சம்பந்தப்பட்ட சர்க்கரை ஆலை) |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | பயன்களைப் பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| **5.10. விவசாயிகளுக்கு தார்பாய் வழங்குதல்** | | |
| i)6மீ ×5மீ அளவுள்ள தார்பாலின் விநியோகம் - ரூ.1875 அல்லது 75% மானியம் - (இதில் எது குறைவோ)<br><br>ii)8மீ ×6மீ அளவுள்ள தார்பாலின் விநியோகம் - ரூ.3000 அல்லது 75% மானியம் - (இதில் எது குறைவோ) | சென்னை மற்றும் நீலகிரி மாவட்டம் நீங்கலாக இதர மாவட்ட விவசாயிகள் | உழவன் செயலியில் இடுபொருள் முன்பதிவு செய்து திட்டப்பயன்கள் பெறலாம்.<br>**கிராம அளவில்**<br>உதவி வேளாண்மை அலுவலர்/ உதவி தோட்டக்கலை அலுவலர்/ உதவி வேளாண்மை அலுவலர் (வேளாண் வணிகம்)<br>**வட்டார அளவில்**<br>துணை வேளாண்மை அலுவலர்/ வேளாண்மை அலுவலர் மற்றும் வேளாண்மை உதவி இயக்குநர்<br>**மாவட்ட அளவில்**<br>வேளாண்மை இணை இயக்குநர் |

| **நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும்** | **பயன்களைப் பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும்** | **தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர்** |
|---|---|---|
| **5.11. 'அஞ்சலை அம்மாள் விருதுகள்' மாநில அளவில் சிறப்பாக செயலாற்றி அதிக விளைச்சல் பெறும் சிறு, குறு விவசாயிகளுக்கு பரிசு வழங்குதல் – மாநில அளவிலான பயிர் விளைச்சல் போட்டி** | | |
| **மாநில அளவில் கம்பு, கேழ்வரகு, தினை, சாமை, குதிரைவாலி, உளுந்து, துவரை, பாசிப் பயறு, நிலக்கடலை மற்றும் எள் ஆகிய பயிர்களில் அதிக உற்பத்தியைப் பெறும் முதல் மூன்று விவசாயிகளுக்கு** முதல் பரிசாக ரூ.2.5 இலட்சமும், இரண்டாம் பரிசாக ரூ.1.5 இலட்சமும், மூன்றாம் பரிசாக ரூ.1.0 இலட்சமும் வழங்கப்படும். | சென்னை மற்றும் நீலகிரி மாவட்டங்களை தவிர்த்து அனைத்து மாவட்டங்களிலும் போட்டியில் கலந்து கொள்ளலாம்.<br>**பதிவுக் கட்டணம் :**<br>ஒரு பயிர் பதிவிற்கு – ரூபாய் 150/-<br>குறைந்தபட்ச மகசூல் அளவு அரசாணை மூலம் வரையறுக்கப்படும். நிர்ணயிக்கப்பட்ட அளவைவிடக் குறைவான விளைச்சலைப் பெறும் விவசாயிகள் இப்போட்டியில் பங்குபெறத் தகுதி பெறமாட்டார்கள். | **<u>கிராம அளவில்</u>**<br>உதவி வேளாண்மை அலுவலர் / உதவி தோட்டக்கலை அலுவலர் / உதவி வேளாண்மை அலுவலர் (வேளாண் வணிகம்).<br>**<u>வட்டார அளவில்</u>**<br>துணை வேளாண்மை அலுவலர்/ வேளாண்மை அலுவலர்/ மற்றும் வேளாண்மை உதவி இயக்குநர்<br>**<u>மாவட்ட அளவில்</u>**<br>வேளாண்மை இணை இயக்குநர் |

| **நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும்** | **பயன்களைப் பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும்** | **தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர்** |
|---|---|---|
| **5.12. வெற்றி விவசாயி விருதுகள்' மாவட்ட அளவில் சிறப்பாக செயலாற்றி அதிக விளைச்சல் பெறும் விவசாயிகளுக்கு பரிசு வழங்குதல் - மாவட்ட அளவிலான பயிர் விளைச்சல் போட்டி** | | |
| **மாவட்ட அளவில் நெல்** (இறவை & மானாவாரி), **மக்காச் சோளம், சோளம், கம்பு, துவரை, உளுந்து, பாசிப் பயறு, நிலக்கடலை மற்றும் பருத்தி ஆகிய பயிர்களில் அதிக உற்பத்தியைப் பெறும் முதல் இரண்டு விவசாயிகளுக்கு** முதல் பரிசாக ரூ.50,000/-, இரண்டாம் பரிசாக ரூ.25,000/- வழங்கப்படும். | சென்னை மற்றும் நீலகிரி மாவட்டங்களை தவிர்த்து அனைத்து மாவட்டங்களிலும் போட்டியில் கலந்து கொள்ளலாம்.<br><br>**பதிவுக் கட்டணம் :**<br>ஒரு பயிர் பதிவிற்கு - ரூபாய் 150/-<br>குறைந்தபட்ச மகசூல் அளவு அரசாணை மூலம் வரையறுக்கப்படும். நிர்ணயிக்கப்பட்ட அளவைவிடக் குறைவான விளைச்சலைப் பெறும் விவசாயிகள் இப்போட்டியில் பங்குபெறத் தகுதி பெறமாட்டார்கள். | **<u>கிராம அளவில்</u>**<br>உதவி வேளாண்மை அலுவலர் / உதவி தோட்டக்கலை அலுவலர்/ உதவி வேளாண்மை அலுவலர் (வேளாண் வணிகம்).<br>**<u>வட்டார அளவில்</u>**<br>துணை வேளாண்மை அலுவலர்/ வேளாண்மை அலுவலர்/ மற்றும் வேளாண்மை உதவி இயக்குநர்/<br>**<u>மாவட்ட அளவில்</u>**<br>வேளாண்மை இணை இயக்குநர் |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | பயன்களைப் பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| **5.13 சிறந்த உயிர்ம விவசாயிக்கான நம்மாழ்வார் விருது** | | |
| ஐந்து விவசாயிகளுக்கு தலா ரூ.2 இலட்சம் பணப்பரிசுடன், நம்மாழ்வார் விருது வழங்கப்படும் | அனைத்து மாவட்ட உயிர்ம விவசாயிகளும் இத்திட்டத்தின் பயனைப் பெறத் தகுதியுடையவராவர் | **<u>கிராம அளவில்</u>**<br>உதவி வேளாண்மை அலுவலர் / உதவி தோட்டக்கலை அலுவலர்/ உதவி வேளாண்மை அலுவலர் (வேளாண் வணிகம்).<br>**<u>வட்டார அளவில்</u>**<br>துணை வேளாண்மை அலுவலர்/ வேளாண்மை அலுவலர் மற்றும் வேளாண்மை உதவி இயக்குநர்<br>**<u>மாவட்ட அளவில்</u>**<br>வேளாண்மை இணை இயக்குநர் |
| **VI) தமிழ்நாடு சிறுதானிய இயக்கம்** | | |
| **1) சிறுதானிய உழவர் குழு உருவாக்கம்** - ரூபாய் 1000 / குழு<br>**2) சிறுதானியப் பயிர்களில் சான்று விதை உற்பத்தியை ஊக்குவித்தல் (சோளம், கம்பு,** | கிருஷ்ணகிரி, கள்ளக்குறிச்சி, தருமபுரி, விழுப்புரம், திருவண்ணாமலை, விருதுநகர், மதுரை, | உழவர் செயலியில் இடுபொருள் முன்பதிவு செய்து திட்டப்பயன்கள் பெறலாம். |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | பயன்களைப் பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| **கேழ்வரகு, சாமை, குதிரைவாலி, தினை, வரகு, பனி வரகு** )<br><br>சிறுதானியப் பயிர்களில் 8 வருடத்திற்கு மேற்பட்ட மற்றும் பனிவரகு பயிரின் சான்று விதை உற்பத்திக்கு ஒரு குவிண்டாலுக்கு ரூ. 3,000/- மானியம் வழங்குதல். | தென்காசி, இராமநாதபுரம், சிவகங்கை, தேனி, திருச்சி, கரூர், திண்டுக்கல், அரியலூர், பெரம்பலூர், தூத்துக்குடி, சேலம், வேலூர், திருப்பூர், ஈரோடு, நாமக்கல், கோயம்புத்தூர், புதுக்கோட்டை. திருப்பத்தூர் மற்றும் கடலூர் மாவட்ட விவசாயிகள் | <u>**கிராம அளவில்**</u><br>உதவி வேளாண்மை அலுவலர் /உதவி தோட்டக்கலை அலுவலர்/ உதவி வேளாண்மை அலுவலர் (வேளாண் வணிகம்).<br><u>**வட்டார அளவில்**</u><br>துணை வேளாண்மை அலுவலர்/ வேளாண்மை அலுவலர் மற்றும் வேளாண்மை உதவி இயக்குநர்<br><u>**மாவட்ட அளவில்**</u><br>வேளாண்மை இணை இயக்குநர். |
| 3) **கேழ்வரகு சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு பின்னேற்பு மானியம்** - கேழ்வரகு சாகுபடி செய்வதற்கான பின்னேற்பு மானியம் ரூ.1600/ஏக்கர். | | |
| 4) **கேழ்வரகு சிறுதளை விநியோகம் ஒரு அலகிற்கு ரூபாய்** 350/- (100% **மானியம்**) | | |
| 5) **மாற்றுப்பயிர் சிறுதானிய சாகுபடி** அதிக நீர் தேவைப்படும் பயிர்களுக்கு மாற்றாக சிறுதானியப் பயிர்கள் சாகுபடி செய்தல் ஒரு ஏக்கருக்கு மானியம் ரூபாய் 1250/- | | |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | பயன்களைப் பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| **VII) முதலமைச்சரின் உழவர் நல சேவை மையம்** | | |
| கடந்த ஆண்டில் தேர்வு செய்யப்பட்டு மானிய தொகை வழங்கப்படாத தகுதியுள்ள 214 பயனாளிகளுக்கு **உழவர் நல சேவை மையங்**கள் அமைத்திட 30 சதவீத மானியமாக ரூபாய் 3 இலட்சம் முதல் ரூபாய் 6 இலட்சம் வரை வழங்கப்படும். | 1. **வயது வரம்பு**: 20-45<br>2. **கல்வித் தகுதி**: வேளாண்மை / தோட்டக்கலை / வேளாண் வணிகம்/வேளாண் பொறியியல் பட்டப்படிப்பு/ பட்டயப்படிப்பு<br>3. அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனத்தில் பணியில் இருத்தல் கூடாது.<br>4. விண்ணப்பதாரர் கணினித்திறன் பெற்றிருக்க வேண்டும்<br>5. ஒரு குடும்பத்தில் ஒரு நபர் மட்டுமே நிதி உதவி பெற தகுதியுடையவர்.<br>6. வங்கி மூலம் கடன் பெற்று தொழில் புரிவோர் | <u>**கிராம அளவில்**</u><br>உதவி வேளாண்மை அலுவலர் / உதவி தோட்டக்கலை அலுவலர்/ உதவி வேளாண்மை அலுவலர் (வேளாண் வணிகம்).<br><u>**வட்டார அளவில்**</u><br>துணை வேளாண்மை அலுவலர் / துணை தோட்டக்கலை அலுவலர் /வேளாண்மை அலுவலர் /தோட்டக்கலை அலுவலர் மற்றும் வேளாண்மை உதவி இயக்குநர்/ தோட்டக்கலை உதவி இயக்குநர்<br><u>**மாவட்ட அளவில்**</u><br>வேளாண்மை |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | பயன்களைப் பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| | நிறுவனத்தின் உரிமையானது தனியுரிமையாக இருக்க வேண்டும்.<br>7. இத்திட்டத்தில் விண்ணப்பதாரர்கள் ரூபாய் 10 இலட்சம் முதல் ரூபாய் 20 இலட்சத்திற்கான விரிவான திட்ட அறிக்கையை தயாரித்து தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் அல்லது கூட்டுறவு வங்கியில் கடனுதவி பெற வேண்டும். | இணை இயக்குநர்/ செயற் பொறியாளர் (வேளாண் பொறியியல் துறை)/ வேளாண்மை துணை இயக்குநர் (மா.தி) / தோட்டக்கலை துணை இயக்குநர் / வேளாண் துணை இயக்குநர் (வேளாண் வணிகம்) வேளாண் துணை இயக்குநர் (விதை ஆய்வு) |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | பயன்களைப் பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் |
| --- | --- | --- |
| VIII) **மின்னணு வேளாண்மை** | | |
| **உழவர் செயலி மற்றும் அக்ரிஸ்நெட் இணையதளம்.**<br>**வேளாண்மை – உழவர்** நலத்துறையின் மூலம் வழங்கப்படும் திட்டப் பலன்களைப் பெற விவசாயிகள் உழவர் செயலி அல்லது அக்ரிஸ்நெட் இணையதளத்தில் பதிவு செய்ய வேண்டும்.<br>**https://www.tnagrisnet.tn.gov.in/** | **அனைத்து விவசாயிகளுக்கும்** | **கிராம அளவில்**<br>உதவி வேளாண்மை அலுவலர் / உதவி தோட்டக்கலை அலுவலர்/ உதவி வேளாண்மை அலுவலர் (வேளாண் வணிகம்).<br>**வட்டார அளவில்**<br>துணை வேளாண்மை அலுவலர்/ வேளாண்மை அலுவலர் மற்றும் வேளாண்மை உதவி இயக்குநர்<br>**மாவட்ட அளவில்**<br>வேளாண்மை இணை இயக்குநர் |
| IX) **பயிர் உற்பத்தித் திறனை அதிகரிக்க விவசாயிகளுக்கு வழங்கப்படும் உதவிகள்** | | |
| **தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம்** - ***விவசாயி ஒருவருக்கு அதிகபட்சமாக ஐந்து ஏக்கருக்கு மானியம் வழங்கப்படும்.*** | | |
| சிறு/குறு விவசாயிகள், பெண்கள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு முன்னுரிமை.<br>**திட்ட நிதியில்** - ஆதிதிராவிடர் விவசாயிகளுக்கு - 19% பழங்குடியின விவசாயிகளுக்கு - 1% | | |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | பயன்களைப் பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| **9.1. தமிழ்நாட்டில் மக்காச்சோள பரப்பு மற்றும் உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு மக்காச்சோள சாகுபடியை ஊக்குவிக்கும் திட்டம்** | | |
| **தொகுப்பு செயல்விளக்கங்கள் – மக்காச்சோளம்**<br>ஒரு ஏக்கருக்கு ரூபாய் 4,600/- | அனைத்து மாவட்ட விவசாயிகள் (சென்னை, நீலகிரி, கன்னியாகுமாரி நீங்கலாக) | உழவர் செயலியில் இடுபொருள் முன்பதிவு செய்து திட்டப்பயன்கள் பெறலாம்.<br>**<u>கிராம அளவில்</u>**<br>உதவி வேளாண்மை அலுவலர் / உதவி தோட்டக்கலை அலுவலர்/ உதவி வேளாண்மை அலுவலர் (வேளாண் வணிகம்)<br>**<u>வட்டார அளவில்</u>**<br>துணை வேளாண்மை அலுவலர் / வேளாண்மை அலுவலர் மற்றும் வேளாண்மை உதவி இயக்குநர்<br>**<u>மாவட்ட அளவில்</u>**<br>வேளாண்மை இணை இயக்குநர் |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | பயன்களைப் பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| **9.2. நடவுத் துவரை திட்டம்** | | |
| **நடவுத் துவரை திட்டம்**<br>50 சதவீத மானியம் அதிகபட்சமாக ரூபாய் 4,000/ ஏக்கர் | தருமபுரி, ஈரோடு, கரூர், கிருஷ்ணகிரி, மதுரை, நாமக்கல், இராணிப்பேட்டை, சேலம், தேனி, திருவண்ணாமலை, திருப்பத்தூர், திருச்சி மற்றும் வேலூர் மாவட்ட துவரை சாகுபடி செய்யும் விவசாயிகள் | விவசாயிகள் உழவர் செயலியில் இடுபொருள் முன்பதிவு செய்து திட்டப் பலன்களை பெறலாம்.<br>**<u>கிராம அளவில்</u>**<br>உதவி வேளாண்மை அலுவலர்/ உதவி தோட்டக்கலை அலுவலர்/ உதவி வேளாண்மை அலுவலர் (வேளாண் வணிகம்)<br>**<u>வட்டார அளவில்</u>**<br>துணை வேளாண்மை அலுவலர்/ வேளாண்மை அலுவலர் மற்றும் வேளாண்மை உதவி இயக்குநர்<br>**<u>மாவட்ட அளவில்</u>**<br>வேளாண்மை இணை இயக்குநர் |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | பயன்களைப் பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| **9.3. தரமான இரக பருத்தி விதைகள் உற்பத்தி மற்றும் விநியோகம்** | | |
| 1. **மிக நீண்ட இழை மற்றும் இதர பருத்தி இரகங்களில் விவசாயிகள் மூலம் விதை உற்பத்தியை ஊக்குவித்தல்** - 25 சதவீத மானியம் அதிகபட்சமாக ஒரு கிலோவிற்கு ரூ. 70/- இதில் எது குறைவோ<br>2. மிக நீண்ட இழை மற்றும் இதர பருத்தி இரகங்களில் சைமா உழவர் உற்பத்தியாளர் குழுக்கள் மூலம் விதை உற்பத்தியை ஊக்குவித்தல் - 25 சதவீத மானியம் அதிகபட்சமாக ஒரு கிலோவிற்கு ரூ. 70/- இதில் எது குறைவோ | கடலூர், கள்ளக்குறிச்சி, சேலம், நாமக்கல், திருவண்ணாமலை , திருப்பத்தூர், ஈரோடு, கோயம்பத்தூர், தர்மபுரி, கிருஷ்ணகிரி, திருப்பூர், திருச்சி, பெரம்பலூர், அரியலூர், கரூர், தஞ்சாவூர், நாகப்பட்டினம், மதுரை, திண்டுக்கல், தேனி, ராமநாதபுரம், மயிலாடுதுறை, திருவாரூர், சிவகங்கை விருதுநகர், திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி ஆகிய பருத்தி சாகுபடி செய்யப்படும் மாவட்டங்களில் உள்ள விவசாயிகள் மற்றும் சைமா உழவர் உற்பத்தியாளர் குழுக்கள் | **கிராம அளவில்**<br>உதவி வேளாண்மை அலுவலர்/ உதவி தோட்டக்கலை அலுவலர்/ உதவி வேளாண்மை அலுவலர் (வேளாண் வணிகம்).<br>**வட்டார அளவில்**<br>உதவி விதை அலுவலர்/ துணை வேளாண்மை அலுவலர்/ வேளாண்மை அலுவலர் மற்றும் வேளாண்மை உதவி இயக்குநர்<br>**மாவட்ட அளவில்**<br>வேளாண்மை இணை இயக்குநர் |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | பயன்களைப் பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| 3. மிக நீண்ட இழை மற்றும் இதர பருத்தி இரக சான்று விதைகள் விநியோகம் - 50 சதவீத மானியம் அதிகபட்சமாக ஒரு கிலோவிற்கு ரூ.140/- இதில் எது குறைவோ | கடலூர், கள்ளக்குறிச்சி, சேலம், நாமக்கல், திருவண்ணாமலை, திருப்பத்தூர், ஈரோடு, கோயம்பத்தூர், தர்மபுரி, கிருஷ்ணகிரி, திருப்பூர், திருச்சி, பெரம்பலூர், அரியலூர், கரூர், தஞ்சாவூர், நாகப்பட்டினம், மதுரை, திண்டுக்கல், தேனி, ராமநாதபுரம், மயிலாடுதுறை, திருவாரூர், சிவகங்கை விருதுநகர், திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி ஆகிய பருத்தி சாகுபடி செய்யப்படும் மாவட்டங்களில் உள்ள விவசாயிகள் மற்றும் சைமா உழவர் உற்பத்தியாளர் குழுக்கள். | **<u>கிராம அளவில்</u>**<br>உதவி வேளாண்மை அலுவலர் / உதவி தோட்டக்கலை அலுவலர்/ உதவி வேளாண்மை அலுவலர் (வேளாண் வணிகம்).<br>**<u>வட்டார அளவில்</u>**<br>உதவி விதை அலுவலர்/ துணை வேளாண்மை அலுவலர்/ வேளாண்மை அலுவலர் மற்றும் வேளாண்மை உதவி இயக்குநர்<br>**<u>மாவட்ட அளவில்</u>**<br>வேளாண்மை இணை இயக்குநர் |
| 4. பருத்தியில் பயறு வகைப் பயிர் ஊடுபயிர் சாகுபடி (4 கிலோ/ ஏக்கர்) - 50 சதவீத மானியம் அல்லது ஏக்கர் ஒன்றிற்கு ரூ.250/- இதில் எது குறைவோ | | |
| 5. நுனி கிள்ளுதலுக்கு ஆட்கூலி - 50 சதவீத மானியம் அல்லது ஏக்கர் ஒன்றிற்கு ரூ.720/-இதில் எது குறைவோ | | |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | பயன்களைப் பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| **9.4. வேளாண் காடுகள்** | | |
| இத்திட்டத்தின் கீழ், மரக்கன்றுகள் உற்பத்தி செய்யும் நாற்றங்கால்களை வலுப்படுத்துவதற்காக வேளாண்மை மற்றும் தோட்டக்கலை துறைகளின் கீழ் சிறிய, பெரிய, உயர்-தொழில்நுட்ப நாற்றங்கால்கள் அமைத்தல், ஏற்கனவே உள்ள நாற்றங்கால்களில் மரக்கன்றுகள் உற்பத்தி செய்தல் ஆகிய இனங்களுக்கு நிதி வழங்கப்படுகிறது.<br>இத்திட்டத்தின் கீழ், மானியம் கீழ்கண்டவாறு வழங்கப்படும்<br>1. ஏற்கனவே உள்ள நாற்றங்கால்களில் மரக்கன்றுகள் உற்பத்தி செய்தல் - ரூ. 5 இலட்சம். (அரசு நிறுவனம்)<br>2. ஏற்கனவே உள்ள நாற்றங்கால்களில் மரக்கன்றுகள் உற்பத்தி செய்தல் (தனியார்) - ரூ.2.5 இலட்சம் (50 சதவீத மானியம்).<br>3. சிறிய நாற்றங்கால்கள் அமைத்தல் – ரூ. 10 இலட்சம். (அரசு நிறுவனம்) | சென்னை நீங்கலாக பிற அனைத்து மாவட்டங்களில் உள்ள<br>1. நாற்றங்கால்கள் வைத்திருக்கும் விவசாயிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்<br>2. நாற்றங்கால் அமைக்கும் செயல்பாடுகளில் ஈடுபட விரும்பும் அனைத்து விவசாயிகளும் தகுதியானவர்கள் | **கிராம அளவில்**<br>உதவி வேளாண்மை அலுவலர் / உதவி தோட்டக்கலை அலுவலர் / உதவி வேளாண்மை அலுவலர் (வேளாண் வணிகம்).<br>**வட்டார அளவில்**<br>துணை வேளாண்மை அலுவலர்/ வேளாண்மை அலுவலர் மற்றும் வேளாண்மை உதவி இயக்குநர்<br>**மாவட்ட அளவில்**<br>வேளாண்மை இணை இயக்குநர் |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | பயன்களைப் பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| 4. சிறிய நாற்றங்கால்கள் (தனியார்) அமைத்தல் - ரூ.5 இலட்சம் (50 சதவீத மானியம்).<br>5. பெரிய நாற்றங்கால்கள் அமைத்தல் – ரூ. 16 இலட்சம். (அரசு நிறுவனம்)<br>6. பெரிய நாற்றங்கால்கள் (தனியார்) அமைத்தல் – ரூ.8 இலட்சம் (50 சதவீத மானியம்) | | |
| **X. தேசிய உணவு பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து இயக்கம்** | | |
| சிறு / குறு விவசாயிகளுக்கு முன்னுரிமை , மகளிர் விவசாயிகளுக்கு 30 சதவீதம் ஒதுக்கீடு, ஆதிதிராவிடர் விவசாயிகளுக்கு 20 சதவீதம் ஒதுக்கீடு, பழங்குடியின விவசாயிகளுக்கு 1.1 சதவீதம் ஒதுக்கீடு, ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக 5 ஏக்கருக்கு மானியம் வழங்கப்படும். | | |
| **10.1.) தேசிய உணவு பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து இயக்கம் - அரிசி (NFSNM-Rice)** | | |
| **1) தொகுப்பு செயல் விளக்கங்கள்** | | |
| **அ) நேரடி நெல் விதைப்புக்கான தொகுப்பு செயல் விளக்கங்கள்**- ஏக்கர் ஒன்றிற்கு ரூ.3600/-<br>நெல் விதைகள், TNAU நெல் ரீப் (பயிர் ஊக்கி மற்றும் வளர்ச்சி உரம்), நுண்ணூட்ட உரக் கலவை, திரவ உயிர் உரம், உயிரி கட்டுப்பாட்டுக் காரணிகள், நானோ யூரியா, உயிர் பூச்சிக்கொல்லி (அசாடிராக்டின்), இடை உழவுப்பணி மற்றும் வரப்புப் | தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, புதுக்கோட்டை, இராமநாதபுரம், சிவகங்கை, கடலூர், தூத்துக்குடி, விருதுநகர் மற்றும் திருவண்ணாமலை மாவட்ட விவசாயிகள் | <u>**கிராம அளவில்**</u><br>உதவி வேளாண்மை அலுவலர் / உதவி தோட்டக்கலை அலுவலர்/ உதவி வேளாண்மை அலுவலர் (வேளாண் வணிகம்). |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | பயன்களைப் பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| பயிர் சாகுபடிக்கு பயறு வகை விதைகள் ஆகியவை அடங்கிய மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பங்கள், தொகுப்பு செயல்விளக்கத்தில் பின்பற்றப்படும் | | **<u>வட்டார அளவில்</u>**<br>துணை வேளாண்மை அலுவலர் / வேளாண்மை அலுவலர் மற்றும் வேளாண்மை உதவி இயக்குநர்<br>**<u>மாவட்ட அளவில்</u>**<br>வேளாண்மை இணை இயக்குநர் |
| **ஆ) வறட்சியைத் தாங்கும் இரகங்கள்/ செறிவூட்டப்பட்ட நெல் இரகங்கள் சாகுபடிக்கான தொகுப்பு செயல் விளக்கங்கள்** - ஏக்கர் ஒன்றிற்கு ரூபாய் 3,600/-<br><br>நெல் விதைகள், உயர் பூச்சிக்கொல்லி (அசாடிராக்டின்), திரவ உயிர் உரம், நெல் நுண்ணூட்டச் சத்து கலவை, உயிரி கட்டுப்பாட்டுக் காரணிகள், காப்பர் சல்பேட் இடுதல், TNAU நெல் ரீப் (பயிர் ஊக்கி மற்றும் வளர்ச்சி உரம்) மற்றும் வரப்புப் பயிர் சாகுபடிக்கு பயறு வகை விதைகள் ஆகியவை | தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, புதுக்கோட்டை, இராமநாதபுரம், சிவகங்கை, கடலூர், தூத்துக்குடி, விருதுநகர் மற்றும் திருவண்ணாமலை மாவட்ட விவசாயிகள் | **<u>கிராம அளவில்</u>**<br>உதவி வேளாண்மை அலுவலர் / உதவி தோட்டக்கலை அலுவலர்/ உதவி வேளாண்மை அலுவலர் (வேளாண் வணிகம்).<br>**<u>வட்டார அளவில்</u>**<br>துணை வேளாண்மை அலுவலர் / வேளாண்மை அலுவலர் மற்றும் |

| **நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும்** | **பயன்களைப் பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும்** | **தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர்** |
|---|---|---|
| அடங்கிய மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பங்கள், தொகுப்பு செயல் விளக்கத்தில் பின்பற்றப்படும். | | வேளாண்மை உதவி இயக்குநர் <br> **<u>மாவட்ட அளவில்</u>** <br> வேளாண்மை இணை இயக்குநர் |
| **இ) பயிர் சாகுபடி முறை (நெல்-பயறுவகை) சார்ந்த செயல் விளக்கங்கள்**- ஏக்கர் ஒன்றிற்கு ரூ.5000/- <br> நெல் விதைகள், வரப்பு பயிர் சாகுபடிக்கு பயறு விதைகள், உயிரி கட்டுப்பாட்டுக் காரணிகள், நெல் நுண்ணூட்ட உரக் கலவை, TNAU நெல் ரீப் (பயிர் ஊக்கி மற்றும் வளர்ச்சி உரம்), நெல்லிற்கான திரவ உயிர் உரம், ஆகியவை அடங்கிய மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பங்கள் நெல்லுக்கும், இதேபோல், பயறு வகை விதைகள் , பயறு வகைக்கான திரவ உயிர் உரங்கள், விதை நேர்த்தி மற்றும் இலைவழி ஊட்டச்சத்து தெளிப்பு ஆகியவை அடங்கிய மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பங்கள் பயறுக்கும் சேர்த்து, தொகுப்பு செயல் விளக்கத்தில் பின்பற்றப்படும் | தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, புதுக்கோட்டை, இராமநாதபுரம், சிவகங்கை, கடலூர், தூத்துக்குடி, விருதுநகர் மற்றும் திருவண்ணாமலை மாவட்ட விவசாயிகள் | **<u>கிராம அளவில்</u>** <br> உதவி வேளாண்மை அலுவலர் / உதவி தோட்டக்கலை அலுவலர் / உதவி வேளாண்மை அலுவலர் (வேளாண் வணிகம்). <br> **<u>வட்டார அளவில்</u>** <br> துணை வேளாண்மை அலுவலர் / வேளாண்மை அலுவலர் மற்றும் வேளாண்மை உதவி இயக்குநர் <br> **<u>மாவட்ட அளவில்</u>** <br> வேளாண்மை இணை இயக்குநர் |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | பயன்களைப் பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| **2)பயிர் மற்றும் மண்வள பாதுகாப்பு மேலாண்மை** | | |
| **அ) நுண்ணூட்ட உரக்கலவை விநியோகம்**<br>50 சதவீத மானியம் அல்லது ஏக்கர் ஒன்றிற்கு ரூ.147.6/-இதில் எது குறைவோ அது. | தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, புதுக்கோட்டை, இராமநாதபுரம், சிவகங்கை, கடலூர், தூத்துக்குடி, விருதுநகர் மற்றும் திருவண்ணாமலை மாவட்ட விவசாயிகள் | |
| **ஆ) திரவ உயிர் உரங்கள் விநியோகம்.**<br>50 சதவீத மானியம் அல்லது ஏக்கர் ஒன்றிற்கு ரூபாய் 60/- இதில் எது குறைவோ அது. | தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, புதுக்கோட்டை, இராமநாதபுரம், சிவகங்கை, கடலூர், தூத்துக்குடி, விருதுநகர் மற்றும் திருவண்ணாமலை மாவட்ட விவசாயிகள் | **<u>கிராம அளவில்</u>**<br>உதவி வேளாண்மை அலுவலர் / உதவி தோட்டக்கலை அலுவலர் / உதவி வேளாண்மை அலுவலர் (வேளாண் வணிகம்).<br>**<u>வட்டார அளவில்</u>**<br>துணை வேளாண்மை அலுவலர் / வேளாண்மை அலுவலர் மற்றும் வேளாண்மை உதவி இயக்குநர்<br>**<u>மாவட்ட அளவில்</u>**<br>வேளாண்மை இணை இயக்குநர் |
| **இ) களைக்கொல்லிகள் மற்றும் உயிரி கட்டுப்பாட்டுக் காரணிகளுக்கான உதவித்தொகை**:<br>50 சதவீத மானியம் அதிகபட்சமாக ஏக்கர் ஒன்றிற்கு ரூ.560/-இதில் எது குறைவோ அது. | | |
| **3) இதர இனங்கள்**<br>**அ) பசுந்தாள் உரவிதை விநியோகம்**<br>50 சதவீத மானியம் அல்லது ஏக்கர் ஒன்றிற்கு ரூபாய் 1200/- | | |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | பயன்களைப் பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| **10.2. தேசிய உணவு பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து இயக்கம் - மக்காச்சோளம் (NFSNM-Maize)** | | |
| 1) **தொகுப்பு செயல்விளக்கங்கள்**<br>அ) **தொகுப்பு செயல்விளக்கங்கள் - மக்காச்சோளம் -** ஒரு ஏக்கருக்கு ரூபாய் 4,600/-<br>**ஆ) ஊடுபயிர் தொகுப்பு செயல்விளக்கங்கள்**<br>**(மக்காச்சோளம் + உளுந்து)**<br>**(மக்காச்சோளம் + பச்சைப்பயறு)**<br>ஒரு ஏக்கருக்கு ரூபாய் 3,000/-<br><br>2) **வீரிய ஒட்டு இரகங்கள் விதை விநியோகம் - மக்காச்சோளம்.**<br>வீரிய ஒட்டு இரகங்களுக்கு ஒரு குவிண்டாலுக்கு மானியம் ரூபாய் 10,000/- அல்லது முழு விலையில் 50 %, இதில் எது குறைவோ | அனைத்து மாவட்ட விவசாயிகள் (சென்னை, கன்னியாகுமரி மற்றும் நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக) | உழவர் செயலியில் இடுபொருள் முன்பதிவு செய்து திட்டப்பயன்கள் பெறலாம்.<br>**கிராம அளவில்**<br>உதவி வேளாண்மை அலுவலர் / உதவி தோட்டக்கலை அலுவலர் / உதவி வேளாண்மை அலுவலர் (வேளாண் வணிகம்).<br>**வட்டார அளவில்**<br>துணை வேளாண்மை அலுவலர் / வேளாண்மை அலுவலர் மற்றும் வேளாண்மை உதவி இயக்குநர்<br>**மாவட்ட அளவில்**<br>வேளாண்மை இணை இயக்குநர் |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | பயன்களைப் பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| 3) **ஒருங்ணைந்த பூச்சி நிர்வாகம் உயிரி கட்டுப்பாட்டு காரணிகள் விநியோகம்**<br>ஒரு ஏக்கருக்கு மானியம் ரூபாய் 560/- அல்லது முழு விலையில் 50%, இதில் எது குறைவோ.<br><br>4) **ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து நிர்வாகம்**<br>**அ) உயிர் உரங்கள் விநியோகம்**<br>ஒரு ஏக்கருக்கு மானியம் ரூபாய் 60/- அல்லது முழு விலையில் 50%, இதில் எது குறைவோ<br><br>**ஆ) நுண்ணூட்ட உரக்கலவை விநியோகம்**<br>ஒரு ஏக்கருக்கு மானியம் ரூபாய் 270/- அல்லது முழு விலையில் 50%, இதில் எது குறைவோ | அனைத்து மாவட்ட விவசாயிகள் (சென்னை, கன்னியாகுமரி மற்றும் நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக) | உழவர் செயலியில் இடுபொருள் முன்பதிவு செய்து திட்டப்பயன்கள் பெறலாம்.<br><br>**கிராம அளவில்**<br>உதவி வேளாண்மை அலுவலர் / உதவி தோட்டக்கலை அலுவலர்/ உதவி வேளாண்மை அலுவலர் (வேளாண் வணிகம்).<br>**வட்டார அளவில்**<br>துணை வேளாண்மை அலுவலர் / வேளாண்மை அலுவலர் மற்றும் வேளாண்மை உதவி இயக்குநர்<br>**மாவட்ட அளவில்**<br>வேளாண்மை இணை இயக்குநர் |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | பயன்களைப் பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| **10.3. தேசிய உணவு பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து இயக்கம் – ஊட்டச்சத்துமிக்க சிறுதானியங்கள்** | | |
| 1) **சிறுதானியப் பயிர்களில் தொகுப்பு செயல் விளக்கங்கள்**<br>(சோளம், கம்பு, கேழ்வரகு, குதிரைவாலி, சாமை, தினை, வரகு)<br>ஒரு ஏக்கருக்கு ரூ. 3000/- | கோயம்புத்தூர், தருமபுரி, திண்டுக்கல், ஈரோடு, கரூர், கிருஷ்ணகிரி, மதுரை, நாமக்கல், சேலம், தூத்துக்குடி, திருச்சி, திருப்பூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, கடலூர், வேலூர், அரியலூர், திருபத்தூர், திருவண்ணாமலை, தேனி, தென்காசி, புதுக்கோட்டை, பெரம்பலூர், இராமநாதபுரம், சிவகங்கை மற்றும் விருதுநகர் மாவட்ட விவசாயிகள் | உழவர் செயலியில் இடுபொருள் முன்பதிவு செய்து திட்டப்பயன்கள் பெறலாம்.<br>**கிராம அளவில்**<br>உதவி வேளாண்மை அலுவலர் / உதவி தோட்டக்கலை அலுவலர்/ உதவி வேளாண்மை அலுவலர் (வேளாண் வணிகம்).<br>**வட்டார அளவில்**<br>துணை வேளாண்மை அலுவலர் / வேளாண்மை அலுவலர் மற்றும் வேளாண்மை உதவி இயக்குநர்<br>**மாவட்ட அளவில்**<br>வேளாண்மை இணை இயக்குநர் |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | பயன்களைப் பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| 2) **விதை விநியோகம்**<br>**அ) 10 வருடங்களுக்குட்பட்ட உயர் விளைச்சல் இரகங்கள் விதை விநியோகம் - (சோளம், கம்பு, கேழ்வரகு, குதிரைவாலி, சாமை, தினை, வரகு)**<br>10 வருடங்களுக்குட்பட்ட உயர் விளைச்சல் சிறுதானிய இரகங்களுக்கு குவிண்டாலுக்கு மானியம் ரூபாய் 3,000/- அல்லது முழு விலையில் 50 %, இதில் எது குறைவோ<br><br>**ஆ) 10 வருடங்களுக்கு மேற்பட்ட உயர் விளைச்சல் இரகங்கள் விதை விநியோகம் - (கேழ்வரகு,)**<br>10 வருடங்களுக்கு மேற்பட்ட உயர் விளைச்சல் சிறுதானிய இரகங்களுக்கு குவிண்டாலுக்கு மானியம் ரூபாய் 1,500/- அல்லது முழு விலையில் 50 %, இதில் எது குறைவோ | கோயம்புத்தூர், தருமபுரி, திண்டுக்கல், ஈரோடு, கரூர், கிருஷ்ணகிரி, மதுரை, நாமக்கல், சேலம், தூத்துக்குடி, திருச்சி, திருப்பூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, கடலூர், வேலூர், அரியலூர், திருபத்தூர், திருவண்ணாமலை, தேனி, தென்காசி, புதுக்கோட்டை, பெரம்பலூர், இராமநாதபுரம், சிவகங்கை மற்றும் விருதுநகர் மாவட்ட விவசாயிகள் | உழவர் செயலியில் இடுபொருள் முன்பதிவு செய்து திட்டப்பயன்கள் பெறலாம்.<br>**கிராம அளவில்**<br>உதவி வேளாண்மை அலுவலர் / உதவி தோட்டக்கலை அலுவலர்/ உதவி வேளாண்மை அலுவலர் (வேளாண் வணிகம்).<br>**வட்டார அளவில்**<br>துணை வேளாண்மை அலுவலர் / வேளாண்மை அலுவலர் மற்றும் வேளாண்மை உதவி இயக்குநர்<br>**மாவட்ட அளவில்**<br>வேளாண்மை இணை இயக்குநர் |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | பயன்களைப் பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| 3) **சிறுதானியப் பயிர்களில் சான்று விதை உற்பத்தியை ஊக்குவித்தல் (சோளம், கம்பு, கேழ்வரகு, குதிரைவாலி, சாமை, தினை, வரகு)** –சிறுதானிய பயிர்களில் 8 வருடங்களுக்குட்பட்ட இரகங்களின் சான்று விதை உற்பத்திக்கு ஒரு குவிண்டாலுக்கு ரூபாய் 3,000/- மானியம் வழங்குதல்<br>4) **ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து நிர்வாகம்**<br>**அ) நுண்ணூட்ட உரக்கலவை** – ஒரு ஏக்கருக்கு மானியம் ரூபாய் 270/- அல்லது முழு விலையில் 50 %, இதில் எது குறைவோ<br>**ஆ) உயிர் உரங்கள்** – ஒரு ஏக்கருக்கு மானியம் ரூபாய் 60/- அல்லது முழு விலையில் 50 %, இதில் எது குறைவோ<br>5) **ஒருங்கிணைந்த பூச்சி நிர்வாகம்** பயிர் பாதுகாப்பு மருந்துகள் மற்றும் உயிரி கட்டுப்பாட்டு காரணிகள் ஒரு ஏக்கருக்கு மானியம் ரூபாய் 560/- அல்லது முழு விலையில் 50 %, இதில் எது குறைவோ<br>6) **இதர இனங்கள்**<br>**சிறுதானிய உணவு திருவிழா/ விளம்பரம்** - ஒரு அலகிற்கு ரூபாய் 2 இலட்சம் | கோயம்புத்தூர், தருமபுரி, திண்டுக்கல், ஈரோடு, கரூர், கிருஷ்ணகிரி, மதுரை, நாமக்கல், சேலம், தூத்துக்குடி, திருச்சி, திருப்பூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, கடலூர், வேலூர், அரியலூர், திருப்பத்தூர், திருவண்ணாமலை, தேனி, தென்காசி, புதுக்கோட்டை, பெரம்பலூர், இராமநாதபுரம், சிவகங்கை மற்றும் விருதுநகர் மாவட்ட விவசாயிகள் | உழவர் செயலியில் இடுபொருள் முன்பதிவு செய்து திட்டப்பயன்கள் பெறலாம்.<br>**<u>கிராம அளவில்</u>**<br>உதவி வேளாண்மை அலுவலர் / உதவி தோட்டக்கலை அலுவலர்/ உதவி வேளாண்மை அலுவலர் (வேளாண் வணிகம்).<br>**<u>வட்டார அளவில்</u>**<br>துணை வேளாண்மை அலுவலர் / வேளாண்மை அலுவலர் மற்றும் வேளாண்மை உதவி இயக்குநர்<br>**<u>மாவட்ட அளவில்</u>**<br>வேளாண்மை இணை இயக்குநர் |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | பயன்களைப் பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| **10.4. பயறு வகைகள் தன்னிறைவுக்கான இயக்கம்** | | |
| **1) பயறு வகைகள் தன்னிறைவுக்கான இயக்கம் வல்லுநர் விதைகளுக்கான 100% மானியம்.**<br>5 ஆண்டிற்கு உட்பட்ட பயறு வகை வல்லுநர் விதைகளுக்கு 100 சதவீதம் மானியம். (5 ஆண்டு என்பது அறிவிக்கை செய்யப்பட்ட தேதியில் இருந்து 3 ஆண்டுகள் பின்னர் கணக்கிடப்படும்)<br>(துவரை - ரூ.230/கிலோ<br>உளுந்து - ரூ.247/கிலோ<br>பச்சைபயறு - ரூ.250/கிலோ<br>தட்டைபயறு - ரூ.150/கிலோ) | சென்னை, சிவகங்கை மற்றும் நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக அனைத்து மாவட்ட விதைப்பண்ணை விவசாயிகள்<br>**ஒரு விதைப்பண்ணை விவசாயிக்கு அதிகபட்சமாக** 5 **எக்டர்** | **<u>கிராம அளவில்</u>**<br>உதவி விதை அலுவலர்<br>**<u>வட்டார அளவில்</u>**<br>துணை வேளாண்மை அலுவலர் / வேளாண்மை அலுவலர் மற்றும் வேளாண்மை உதவி இயக்குநர்<br>**<u>மாவட்ட அளவில்</u>**<br>வேளாண்மை இணை இயக்குநர். |
| **2) சான்று விதைகள் உற்பத்தி மானியம்**<br>5 வருடங்களுக்கு உட்பட்ட துவரை, பச்சைப்பயறு, உளுந்து மற்றும் காராமணி (அறிவிக்கை செய்யப்பட்ட ஆண்டிலிருந்து 3 ஆண்டுகளுக்கு பின் 5 ஆண்டுகள் என கணக்கில் கொள்ள வேண்டும்) ஆகிய சான்று விதைகளுக்கு விதை உற்பத்திக்காக ஊக்கத் தொகை.<br>i) துவரை - ரூ.45/கிலோ<br>ii) பச்சைப்பயறு, உளுந்து மற்றும் காராமணி - ரூ.30/கிலோ | கன்னியாகுமாரி, காஞ்சிபுரம், பெரம்பலூர், சென்னை மற்றும் நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக இதர மாவட்ட விவசாயிகள் | விவசாயிகள் உழவர் செயலியில் இடுபொருள் முன்பதிவு செய்து திட்ட பலன்களை பெறலாம்<br>**<u>கிராம அளவில்</u>**<br>உதவி வேளாண்மை அலுவலர் / உதவி தோட்டக்கலை அலுவலர்/ உதவி வேளாண்மை அலுவலர் (வேளாண் வணிகம்). |

| **நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும்** | **பயன்களைப் பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும்** | **தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர்** |
|---|---|---|
| | | **<u>வட்டார அளவில்</u>**<br>துணை வேளாண்மை அலுவலர்/ வேளாண்மை அலுவலர் மற்றும் வேளாண்மை உதவி இயக்குநர்<br>**<u>மாவட்ட அளவில்</u>**<br>வேளாண்மை இணை இயக்குநர் |
| 3) **விநியோக மானியம்.**<br>i) **5 வருடங்களுக்கு உட்பட்ட** துவரை, பச்சைப்பயறு, உளுந்து மற்றும் காராமணி (அறிவிக்கை செய்யப்பட்ட ஆண்டிலிருந்து 3 ஆண்டுகளுக்கு பின் 5 ஆண்டுகள் என கணக்கில் கொள்ள வேண்டும்) ஆகிய உயர் விளைச்சல் சான்று விதைகளுக்கு 50 சதவீத மானியம் அதிகபட்சமாக கிலோ ஒன்றிற்கு ரூபாய் 60/-<br>ii) **5 வருடங்களுக்கு மேற்பட்ட ஆனால் 10 வருடங்களுக்கு உட்பட்ட** உளுந்து (அறிவிக்கை செய்யப்பட்ட ஆண்டிலிருந்து 3 ஆண்டுகளுக்கு பின் 5 ஆண்டுகள் என கணக்கில் கொள்ள வேண்டும்) உயர் விளைச்சல் சான்று விதைகளுக்கு 50 சதவீத | சிறு, குறு மற்றும் இதர விவசாயிகள்.<br>ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக 2 எக்டர்.<br>கன்னியாகுமாரி, காஞ்சிபுரம், பெரம்பலூர், சென்னை மற்றும் நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக இதர மாவட்ட விவசாயிகள். | விவசாயிகள் உழவர் செயலியில் இடுபொருள் முன்பதிவு செய்து திட்ட பலன்களை பெறலாம்<br>**<u>கிராம அளவில்</u>**<br>உதவி வேளாண்மை அலுவலர் / உதவி தோட்டக்கலை அலுவலர்/ உதவி வேளாண்மை அலுவலர் (வேளாண் வணிகம்).<br>**<u>வட்டார அளவில்</u>**<br>துணை வேளாண்மை அலுவலர்/ வேளாண்மை அலுவலர் மற்றும் |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | பயன்களைப் பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| மானியம் அதிகபட்சமாக கிலோ ஒன்றிற்கு ரூபாய் 30/- | | வேளாண்மை உதவி இயக்குநர்<br>**<u>மாவட்ட அளவில்</u>**<br>வேளாண்மை இணை இயக்குநர் |
| 4) **வட்டார அளவிலான செயல் விளக்கத்திடல்கள்**<br>துவரை, உளுந்து, பச்சைப்பயறு மற்றும் காராமணி ஏக்கர் ஒன்றிற்கு ரூபாய் 4,000/- | சிறு, குறு மற்றும் இதர விவசாயிகள்.<br>ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக 1 எக்டர்.<br>கன்னியாகுமாரி, காஞ்சிபுரம், பெரம்பலூர், சென்னை மற்றும் நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக இதர மாவட்ட விவசாயிகள். | விவசாயிகள் உழவர் செயலியில் இடுபொருள் முன்பதிவு செய்து திட்ட பலன்களை பெறலாம்<br>**<u>கிராம அளவில்</u>**<br>உதவி வேளாண்மை அலுவலர் / உதவி தோட்டக்கலை அலுவலர் / உதவி வேளாண்மை அலுவலர் (வேளாண் வணிகம்).<br>**<u>வட்டார அளவில்</u>**<br>துணை வேளாண்மை அலுவலர்/ வேளாண்மை அலுவலர் மற்றும் வேளாண்மை உதவி இயக்குநர்<br>**<u>மாவட்ட அளவில்</u>**<br>வேளாண்மை இணை இயக்குநர் |

| **நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும்** | **பயன்களைப் பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும்** | **தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர்** |
|---|---|---|
| 5) **விதை சிறுதளைகள் விநியோகம்** 100% மானியம் | சிறு, குறு மற்றும் இதர விவசாயிகள். ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக 1 ஏக்கர். கன்னியாகுமாரி, காஞ்சிபுரம், பெரம்பலூர், சென்னை மற்றும் நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக இதர மாவட்ட விவசாயிகள். | விவசாயிகள் உழவர் செயலியில் இடுபொருள் முன்பதிவு செய்து திட்ட பலன்களை பெறலாம் **<u>கிராம அளவில்</u>** உதவி வேளாண்மை அலுவலர் / உதவி தோட்டக்கலை அலுவலர்/ உதவி வேளாண்மை அலுவலர் (வேளாண் வணிகம்). **<u>வட்டார அளவில்</u>** துணை வேளாண்மை அலுவலர்/ வேளாண்மை அலுவலர் மற்றும் வேளாண்மை உதவி இயக்குநர் **<u>மாவட்ட அளவில்</u>** வேளாண்மை இணை இயக்குநர் |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | பயன்களைப் பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| 6) **பயறுவகைகள் பதப்படுத்தும் நிலையங்கள் அமைத்தல்**<br>33% அதிகபட்சமாக ரூ. 25 இலட்சம் வரை மானியம் (இவற்றில் குறைவானது) | கன்னியாகுமாரி, காஞ்சிபுரம், பெரம்பலூர், சென்னை மற்றும் நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக இதர மாவட்ட பயனாளிகள். | **<u>கிராம அளவில்</u>**<br>வேளாண்மை உதவி அலுவலர்<br>**<u>வட்டார அளவில்</u>**<br>துணை வேளாண்மை அலுவலர்/ வேளாண்மை அலுவலர் மற்றும் வேளாண்மை உதவி இயக்குநர்<br>**<u>மாவட்ட அளவில்</u>**<br>வேளாண்மை இணை இயக்குநர் |
| **10.5. தேசிய உணவு எண்ணெய் இயக்கம் - எண்ணெய் வித்துக்கள்** | | |
| **1) வல்லுநர் விதைகளுக்கான மானியம்**<br>**5 ஆண்டிற்கு உட்பட்ட எண்ணெய் வித்து பயிர் இரக வல்லுநர் விதைகளுக்கு 100 சதவீத மானியம்,**<br><br>( நிலக்கடலை - ரூ.204/கிலோ<br>எள் - ரூ.306/ கிலோ<br>சூரியகாந்தி A லைன் – ரூ.785/ கிலோ<br>சூரியகாந்தி R லைன் / B லைன் – ரூ.380/ கிலோ<br>சோயாபீன்ஸ் – ரூ.154/ கிலோ | சென்னை, சிவகங்கை, கன்னியாகுமாரி மற்றும் நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக அனைத்து மாவட்ட சிறு, குறு மற்றும் இதர விதைப்பண்ணை விவசாயிகள்.<br><br>**ஒரு விதைப்பண்ணை விவசாயிக்கு அதிகபட்சமாக 5 எக்டர்** | **<u>கிராம அளவில்</u>**<br>உதவி விதை அலுவலர்<br>**<u>வட்டார அளவில்</u>**<br>துணை வேளாண்மை அலுவலர் / வேளாண்மை அலுவலர் மற்றும் வேளாண்மை உதவி இயக்குநர்<br>**<u>மாவட்ட அளவில்</u>**<br>வேளாண்மை இணை இயக்குநர் |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | பயன்களைப் பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| 2) **தொகுப்புகளில் விதை விநியோகம்**<br>அ) **நிலக்கடலை விதை விநியோகம்**<br>அதிகபட்சமாக ரூ.12,500/- குவிண்டால் (8 வருடங்களுக்கு உட்பட்ட இரகங்கள்) | **(24 மாவட்டங்கள்)**<br>திருவண்ணாமலை, நாமக்கல் விழுப்புரம், சேலம், ஈரோடு, தர்மபுரி, கிருஷ்ணகிரி, வேலூர், அரியலூர், திருப்பத்தூர், புதுக்கோட்டை, கடலூர், ராணிப்பேட்டை, தஞ்சாவூர், திருப்பூர், திருச்சிராப்பள்ளி, கள்ளக்குறிச்சி, செங்கல்பட்டு திருவள்ளூர், திண்டுக்கல் விருதுநகர், கோயம்புத்தூர், கரூர் மற்றும் காஞ்சிபுரம். | **<u>கிராமஅளவில்</u>**<br>உதவி வேளாண்மை அலுவலர் / உதவி தோட்டக்கலை அலுவலர்/ உதவி வேளாண்மை அலுவலர் (வேளாண் வணிகம்).<br>**<u>வட்டாரஅளவில்</u>**<br>துணை வேளாண்மை அலுவலர் / வேளாண்மை அலுவலர் மற்றும் வேளாண்மை உதவி இயக்குநர்.<br>**<u>மாவட்டஅளவில்</u>**<br>வேளாண்மை இணை இயக்குநர் |
| ஆ) **எள்விதை விநியோகம்**<br>அதிகபட்சமாக ரூ.19,700/- குவிண்டால் (8 வருடங்களுக்கு உட்பட்ட இரகங்கள்) | **(8 மாவட்டங்கள்)**<br>தஞ்சாவூர், கள்ளக்குறிச்சி ஈரோடு, கரூர், கடலூர் நாகப்பட்டினம், சேலம் மற்றும் திருவள்ளூர் | |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | பயன்களைப் பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| இ) **சூரியகாந்தி விதை விநியோகம்** அதிகபட்சமாக ரூ.47,400/ குவிண்டால் (8 வருடங்களுக்கு உட்பட்ட இரகங்கள் / வீரிய ஒட்டு இரகங்கள்) | **(4 மாவட்டங்கள்)** விருதுநகர், தூத்துக்குடி திண்டுக்கல், கரூர். | |
| 3) **தொகுப்பு செயல் விளக்கத் திடல்கள் அமைத்தல்** | | |
| **அ) நிலக்கடலை** அதிகபட்சமாக ஒரு ஏக்கருக்கு ரூ.5,600/- | திருவண்ணாமலை, நாமக்கல், விழுப்புரம், சேலம், ஈரோடு, தர்மபுரி, கிருஷ்ணகிரி, வேலூர், அரியலூர், திருப்பத்தூர், புதுக்கோட்டை, கடலூர், ராணிப்பேட்டை, தஞ்சாவூர், திருப்பூர், திருச்சிராப்பள்ளி, கள்ளக்குறிச்சி, செங்கல்பட்டு, திருவள்ளூர், திண்டுக்கல், விருதுநகர், கோயம்புத்தூர், கரூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் நிலக்கடலை பயிரிடும் விவசாயிகள் | **கிராமஅளவில்** உதவி வேளாண்மை அலுவலர் / உதவி தோட்டக்கலை அலுவலர் / உதவி வேளாண்மை அலுவலர் (வேளாண் வணிகம்). **வட்டாரஅளவில்** துணை வேளாண்மை அலுவலர் / வேளாண்மை அலுவலர் மற்றும் வேளாண்மை உதவி இயக்குநர். **மாவட்டஅளவில்** வேளாண்மை இணை இயக்குநர் |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | பயன்களைப் பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| **ஆ) எள்**<br>அதிகபட்சமாக ஒரு ஏக்கருக்கு ரூ.3,200/- | தஞ்சாவூர், கள்ளக்குறிச்சி, ஈரோடு, கரூர், கடலூர், நாகப்பட்டினம், சேலம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் எள் பயிரிடும் விவசாயிகள் | **கிராமஅளவில்**<br>உதவி வேளாண்மை அலுவலர் / உதவி தோட்டக்கலை அலுவலர்/ உதவி வேளாண்மை அலுவலர் (வேளாண் வணிகம்)<br>**வட்டாரஅளவில்**<br>துணை வேளாண்மை அலுவலர் / வேளாண்மை அலுவலர் மற்றும் வேளாண்மை உதவி இயக்குநர்.<br>**மாவட்டஅளவில்**<br>வேளாண்மை இணை இயக்குநர் |
| **இ) சூரியகாந்தி**<br>அதிகபட்சமாக ஒரு ஏக்கருக்கு ரூ.3,600/- | விருதுநகர், தூத்துக்குடி, திண்டுக்கல், கரூர், மாவட்டங்களில் சூரியகாந்தி பயிரிடும் விவசாயிகள் | |
| **ஈ) ஆமணக்கு**<br>அதிகபட்சமாக ஒரு ஏக்கருக்கு ரூ.3,200/- | சேலம், திருச்சி, நாமக்கல், மாவட்டங்களில் ஆமணக்கு பயிரிடும் விவசாயிகள் | |
| **உ) சோயா பீன்ஸ்**<br>அதிகபட்சமாக ஒரு ஏக்கருக்கு ரூ.4,000/- | சோயா பீன்ஸ் பயிரிடும் அனைத்து தஞ்சாவூர் மாவட்ட விவசாயிகள் | |
| **4) விவசாயிகள் பயிற்சி மற்றும் பண்ணைப் பள்ளி** | | |
| **அ) விவசாயிகள் பயிற்சி**<br>ஒரு பயிற்சிக்கு ரூ.30,000/- | தேசிய உணவு எண்ணெய் இயக்கம் செயல்படுத்தப்படும் மாவட்டங்களில் எண்ணெய் வித்துப்பயிர் | **கிராமஅளவில்**<br>உதவி வேளாண்மை அலுவலர் / உதவி தோட்டக்கலை |
| **ஆ) விவசாயிகள் பண்ணை பள்ளி**<br>**ரூ.35,000/- ஒரு பண்ணை பள்ளிக்கு.** | | |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | பயன்களைப் பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| 5) **மண்வள அட்டை வழங்குதல்** திட்ட பயனாளர்கள் மண் பரிசோதனை அடிப்படையில் பயிரிட ஏதுவாக ஒரு மண்வள அட்டைக்கு ரூ.110/- | சாகுபடி செய்யும் விவசாயிகள். | அலுவலர்/ உதவி வேளாண்மை அலுவலர் (வேளாண் வணிகம்). **<u>வட்டார அளவில்</u>** |
| 6) **கிரிஷி மேப்பர்** எக்டருக்கு ரூ.30/- வழங்கப்படும். | பதிவேற்றம் செய்யும் களப்பணியாளர்களுக்கு மதிப்பூதியம் | துணை வேளாண்மை அலுவலர்/ |
| 7) **அறுவடை மற்றும் பின் அறுவடை சார் மானியம்** மொத்த திட்ட மதிப்பில் 33% மானியம் அல்லது அதிகபட்சமாக ரூ.9,99,000 / அலகு மானியம். | நிலக்கடலை, எள் மற்றும் சூரியகாந்தி விதை விநியோக தொகுப்பு மற்றும் செயல்விளக்கத்திடல் அமைக்கப்படும் மாவட்டங்களுக்கு மட்டும் | வேளாண்மை அலுவலர் மற்றும் வேளாண்மை உதவி இயக்குநர். **<u>மாவட்ட அளவில்</u>** வேளாண்மை இணை இயக்குநர் |
| 8) **தேனீப் பெட்டிகள் அமைத்தல்** ரூ.1600/அலகு | விருதுநகர், தூத்துக்குடி, திண்டுக்கல், கரூர் மாவட்டங்களில் சூரியகாந்தி பயிரிடும் விவசாயிகள் | |
| 9) **உற்பத்தி மானியம்** ரூ. 2,500/குவிண்டால் | நிலக்கடலை பயிரிடும் 24 மாவட்ட விவசாயிகளுக்க | |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | பயன்களைப் பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| **10.6. பருத்தி உற்பத்தித்திறனுக்கான இயக்கம்** | | |
| 1) **நெருக்க நடவு சாகுபடி செயல் விளக்கம்** - எக்டர் ஒன்றிற்கு ரூ.14,000/- | திருவாரூர், சேலம், தர்மபுரி, தேனி, திண்டுக்கல், விருதுநகர், பெரம்பலூர், திருச்சி, மதுரை, அரியலூர், தூத்துக்குடி, நாமக்கல், கோவை, கடலூர், கள்ளக்குறிச்சி, மயிலாடுதுறை, நாகப்பட்டினம், இராமநாதபுரம், தென்காசி, தஞ்சாவூர், திருப்பத்தூர், கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களில் உள்ள பருத்திசாகுபடி செய்யும் விவசாயிகள் | **கிராம அளவில்** உதவி வேளாண்மை அலுவலர் / உதவி தோட்டக்கலை அலுவலர்/ உதவி வேளாண்மை அலுவலர் (வேளாண் வணிகம்). **வட்டார அளவில்** உதவி விதை அலுவலர் / துணை வேளாண்மை அலுவலர்/ வேளாண்மை அலுவலர் மற்றும் வேளாண்மை உதவி இயக்குநர் **மாவட்ட அளவில்** வேளாண்மை இணை இயக்குநர் |
| 2) **அடர் நடவு சாகுபடி செயல் விளக்கம்** - எக்டர் ஒன்றிற்கு ரூ.18,500/- | | **கிராம அளவில்** உதவி வேளாண்மை |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | பயன்களைப் பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் |
| --- | --- | --- |
| 3) **மிக நீண்ட இழை பருத்தி உற்பத்தி செயல்விளக்கம்** - எக்டர் ஒன்றிற்கு ரூ.9,500/-<br>4) **ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை செயல்விளக்கம்** - எக்டர் ஒன்றிற்கு ரூ.7,500/-<br>5) **பயிர் மேலாண்மை சார்ந்த விவசாயிகளுக்கான பயிற்சிகள்** - ரூ.15,000/ பயிற்சி (2 பயிற்சிகள் – 30 விவசாயிகள் @ரூ.250/ விவசாயி/நாள்)<br>6) **டிரோன் மூலம் பூச்சிக்கொல்லிகள் தெளிப்பதற்கான வாடகைக் கட்டணம்**<br>50% மானியம் அல்லது எக்டர் ஒன்றிற்கு ரூ. 1500/- | | அலுவலர் / உதவி தோட்டக்கலை அலுவலர்/ உதவி வேளாண்மை அலுவலர் (வேளாண் வணிகம்).<br>**<u>வட்டார அளவில்</u>**<br>உதவி விதை அலுவலர் / துணை வேளாண்மை அலுவலர்/ வேளாண்மை அலுவலர் மற்றும் வேளாண்மை உதவி இயக்குநர்<br>**<u>மாவட்ட அளவில்</u>**<br>வேளாண்மை இணை இயக்குநர் |
| **10.7. தேசிய உணவு பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து இயக்கம் – வணிகப்பயிர்கள் (கரும்பு)** | | |
| **i. கரும்பில் பயறு வகை ஊடுபயிர் சாகுபடி முறை செயல் விளக்கங்கள்**- 100 சதவீத மானியம் அதிகபட்சமாக ஏக்கர் ஒன்றிற்கு ரூ.3,600/- | கடலூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, சேலம், நாமக்கல், தர்மபுரி, ஈரோடு, பெரம்பலூர், அரியலூர், | **<u>கிராம அளவில்</u>**<br>உதவி வேளாண்மை அலுவலர் / உதவி தோட்டக்கலை அலுவலர் / உதவி வேளாண்மை |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | பயன்களைப் பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| | தஞ்சாவூர், விருதுநகர், சிவகங்கை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் உள்ள கரும்பு சாகுபடி செய்யும் விவசாயிகள் மற்றும் கள்ளக்குறிச்சி - I கூட்டுறவு சர்க்கரை ஆலை. | அலுவலர் (வேளாண் வணிகம்). **<u>வட்டார அளவில்</u>** உதவி விதை அலுவலர் / துணை வேளாண்மை அலுவலர்/ வேளாண்மை அலுவலர் மற்றும் வேளாண்மை உதவி இயக்குநர் **<u>மாவட்ட அளவில்</u>** வேளாண்மை இணை இயக்குநர் |
| **திசு வளர்ப்பு நாற்று உற்பத்தி** – ரூ. 3.5/நாற்று<br>**உயிரி கட்டுப்பாட்டுக் காரணிகளான டிரைக்கோடர்மா விரிடி, டிரைக்கோகிரம்மா கைலோனிஸ்**, என்.பி.வி. கரைசல்- 50 சதவீத மானியம் அல்லது ஏக்கர் ஒன்றிற்கு ரூ.200/- இதில் எது குறைவோ.<br>**சோகை உரித்தலுக்கான ஆட்கூலி** – 50 சதவீத மானியம் அல்லது ஏக்கர் ஒன்றிற்கு ரூ.1800/- இதில் எது குறைவோ. | கடலூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, சேலம், நாமக்கல், தர்மபுரி, ஈரோடு, பெரம்பலூர், அரியலூர், தஞ்சாவூர், விருதுநகர், சிவகங்கை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் உள்ள கரும்பு சாகுபடி செய்யும் விவசாயிகள் மற்றும் | **<u>கிராம அளவில்</u>** உதவி வேளாண்மை அலுவலர் / உதவி தோட்டக்கலை அலுவலர் / உதவி வேளாண்மை அலுவலர் (வேளாண் வணிகம்). **<u>வட்டார அளவில்</u>** உதவி விதை அலுவலர் / துணை |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | பயன்களைப் பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| | கள்ளக்குறிச்சி - I கூட்டுறவு சர்க்கரை ஆலை. | வேளாண்மை அலுவலர்/ வேளாண்மை அலுவலர் மற்றும் வேளாண்மை உதவி இயக்குநர் <u>**மாவட்ட அளவில்**</u> வேளாண்மை இணை இயக்குநர் |
| **XI) வேளாண் விரிவாக்கம் மற்றும் தொழில்நுட்பத்திற்கான தேசிய இயக்கம்** | | |
| **I. வேளாண் விரிவாக்கத்திற்கான துணை இயக்கம் மாநில விரிவாக்கத் திட்டங்களின் – உறுதுணை சீரமைப்புத் திட்டம்** | | |
| **1) விவசாயிகள் பயிற்சி** | | |
| **அ) வெளி மாநில பயிற்சி**: நாள் ஒன்றிற்கு ஒரு விவசாயிக்கு (ரூ.1,500/-) 7 நாட்கள் | அனைத்து விவசாயிகள், ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின விவசாயிகள், மகளிர் சுய உதவிக்குழு, உழவர் ஆர்வலர் குழுக்கள், விளைபொருள் ஆர்வலர் குழுக்கள், பண்ணை மகளிர் குழுக்கள் மற்றும் விவசாய சங்கங்கள் | <u>**வட்டார அளவில்**</u> வேளாண்மை உதவி இயக்குநர், (வட்டார தொழில்நுட்ப குழு ஒருங்கிணைப்பாளர்) / வட்டார தொழில்நுட்பக்குழு / வட்டார விவசாயிகள் ஆலோசனைக் குழு / வட்டார தொழில்நுட்ப மேலாளர் மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் |
| **ஆ) மாநிலத்திற்குள் பயிற்சி**: நாள் ஒன்றிற்கு ஒரு விவசாயிக்கு (ரூ.1,250/-) 3 நாட்கள் | | |
| **இ) மாவட்டத்திற்குள் பயிற்சி** : நாள் ஒன்றிற்கு ஒரு விவசாயிக்கு (ரூ.500/- 1 நாள் பயிற்சி) | | |
| **2. செயல் விளக்கங்கள் அமைத்தல்** – செயல்விளக்கம் அமைக்க ஒன்றிக்கு ரூ.6,000 /- ஏக்கர் ஒன்றிற்கு ஒரு விவசாயிக்கு . | | |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | பயன்களைப் பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| | | <u>மாவட்ட அளவில்</u><br>வேளாண்மை இணை இயக்குநர் / மாவட்ட திட்ட இயக்குநர் (வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை) |
| **3. விவசாயிகளுக்கான கண்டுணர் பயணம்**<br>1) **வெளி மாநிலத்திற்கு** - ஒரு விவசாயிக்கு நாள் ஒன்றிற்கு ரூ.1500/- 5 நாட்கள்<br>2) **மாநிலத்திற்குள்** - ஒரு விவசாயிக்கு நாள் ஒன்றிற்கு ரூ.1000/- 2 நாட்கள்<br>3) **மாவட்டத்திற்குள்** - ஒரு விவசாயிக்கு நாள் ஒன்றிற்கு ரூ.500/-1 நாள்<br><br>**4. உழவர் ஆர்வலர் குழுக்கள், விளைபொருள் ஆர்வலர் குழுக்கள் மற்றும் விவசாயிகள் கூட்டுறவு சங்கம் போன்றவற்றை உருவாக்குதல்.**<br>• **திறன் மேம்பாடு மற்றும் உதவுதல். ஒரு குழுவிற்கு** – வருடத்திற்கு ரூ. 10,000 /-<br>• **விதை நிதி/ சூழல் நிதி** - உழவர் | அனைத்து விவசாயிகள், ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின விவசாயிகள், மகளிர் சுய உதவிக்குழு, உழவர் ஆர்வலர் குழுக்கள், விளைபொருள் ஆர்வலர் குழுக்கள், பண்ணை மகளிர் குழுக்கள் மற்றும் விவசாய சங்கங்கள் | <u>வட்டார அளவில்</u><br>வேளாண்மை உதவி இயக்குநர், (வட்டார தொழில்நுட்ப குழு ஒருங்கிணைப்பாளர்) / வட்டார தொழில்நுட்பக்குழு / வட்டார விவசாயிகள் ஆலோசனைக் குழு / வட்டார தொழில்நுட்ப மேலாளர் மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர்கள்<br><u>மாவட்ட அளவில்</u><br>வேளாண்மை இணை இயக்குநர் / |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | பயன்களைப் பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| ஆர்வலர் குழு, விளை பொருள் ஆர்வலர் குழு, மகளிர் உணவு பாதுகாப்பு குழு போன்றவற்றிக்கு ரூ.25,000/- | | மாவட்ட திட்ட இயக்குநர் (வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை) |
| **5. மாவட்ட அளவில் விவசாயிகள் மற்றும் விஞ்ஞானிகள் கருத்து பரிமாற்றம்** 25 – விவசாயிகள் பங்கு பெறும் ஒரு கருத்து பரிமாற்ற கூட்டத்திற்கு 2 நாட்களுக்கு ரூ30,000/- | | |
| **6. பண்ணைப் பள்ளிகள் அமைத்தல்** – முன்னோடி விவசாயிகளின் வயல்களில் தொகுப்பு அணுகுமுறையில் வட்டாரம் ஒன்றிற்கு அதிகபட்சமாக ஆண்டிற்கு 3 பண்ணைப் பள்ளிகள் அமைத்தல். பண்ணைப் பள்ளி ஒன்றிற்கு ரூ 32,400-/ வீதம் 25 விவசாயிகள் கொண்ட பண்ணைப் பள்ளி பயிரின் முக்கிய பருவங்களில் (பயிற்சிகள் 4) நடத்தப்படும். | | |
| **XII) பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டம் (PMFBY)** | | |
| **பயிர்க் காப்பீட்டுக்காக விவசாயிகளுக்கு வழங்கப்படும் உதவிகள்** | | |
| – நிர்ணயம் செய்யப்படும் காப்பீட்டுக் கட்டண விகிதம் கணக்கீடு செய்யப்படுகிறது.<br>– விவசாயிகளுக்கான காப்பீட்டுக் | 1. நெல், சிறுதானியங்கள், பயறு வகைகள், எண்ணெய் | **<u>கிராம அளவில்</u>** உதவி வேளாண்மை அலுவலர் / உதவி |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | பயன்களைப் பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் |
| --- | --- | --- |
| கட்டண விகிதம் ஒன்றிய அரசால் வரையறுக்கப்பட்டுள்ளது.<br>– மீதமுள்ள காப்பீட்டுக் கட்டணம், அதிகபட்சமாக இறவை மாவட்டங்களுக்கு 25 சதவீதம் வரையும், மானாவாரி மாவட்டங்களுக்கு 30 சதவீதம் வரையும் ஒன்றிய மற்றும் மாநில அரசுகளால் சரிசமமாக பகிர்ந்து கொள்ளப்படுகிறது. அதற்கு மேல் கூடுதலாக ஏற்படும் காப்பீட்டுக் கட்டண மானியம் முழுவதும் மாநில அரசால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.<br>– விதைப்பு முதல் அறுவடை வரையில் ஏற்படும் மகசூல் இழப்பிற்கு காப்பீடு செய்யப்படுகிறது.<br>– விதைப்பு / நடவு செய்ய இயலாமை/ விதைப்புபொய்த்தல்/ முளைப்பு இல்லாமை, இடைப்பருவ கால இடர்பாடுகள், அறுவடைக்குப் பின் ஏற்படும் இழப்பு மற்றும் பகுதிசார்ந்த இடர்பாடுகளால் ஏற்படும் இழப்பிற்கு கூடுதலாக காப்பீடு (Add on Cover) செய்யப்படுகிறது. | வித்துக்கள், கரும்பு, பருத்தி மற்றும் வருடாந்திர / பல்லாண்டு தோட்டக்கலைப் பயிர்களை அறிவிக்கை செய்யப்பட்ட பகுதிகளில் சாகுபடி செய்யும் அனைத்து விவசாயிகள்.<br>2. பயிர்க்கடன் பெறும் விவசாயிகள் மற்றும் பயிர்க்கடன் பெறாத விவசாயிகள் விருப்பத்தின் பேரில் சேர்க்கப்படுவர்.<br>3. இணை சாகுபடியாளர்கள் மற்றும் குத்தகைதாரர்கள் தகுதியுடையவர். | தோட்டக்கலை அலுவலர் / உதவி வேளாண்மை அலுவலர் (வேளாண் வணிகம்).<br>**<u>வட்டார அளவில்</u>**<br>துணை வேளாண்மை அலுவலர் / வேளாண்மை அலுவலர் மற்றும் வேளாண்மை உதவி இயக்குநர்<br>**<u>மாவட்ட அளவில்</u>**<br>வேளாண்மை இணை இயக்குநர் |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | பயன்களைப் பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| **விவசாயிகளுக்கான காப்பீட்டுக் கட்டண விகிதம்**<br>– காரீப் பருவப் பயிர்கள் – காப்பீட்டுத் தொகையில் 2%<br>– ராபி பருவப் பயிர்கள் - காப்பீட்டுத் தொகையில் 1.5%<br>– பருத்தி, கரும்பு மற்றும் வருடாந்திர / பல்லாண்டு தோட்டக்கலைப் பயிர்கள் - காப்பீட்டுத் தொகையில் 5% (காரீப் மற்றும் ராபி பருவம்) | | |
| **XIII) விரிவாக்கம், பயிற்சி மற்றும் சிறப்பான செயல்பாட்டிற்காக விவசாயிகளுக்கு வழங்கப்படும் உதவிகள்** | | |
| **i). உழவர் பயிற்சி நிலையங்கள்** | | |
| **1) கிராம அளவிலான பயிற்சி -ஆண்/ பெண் விவசாயிகளுக்கு** - 2 நாட்கள் நடத்தப்படும் கிராம அளவிலான பயிற்சிகளுக்கு விவசாயி ஒருவருக்கு நாள் ஒன்றிற்கு ரூபாய் 250/- வீதம் உதவித் தொகை. | உழவர் பயிற்சி நிலையங்கள் அமைந்திருக்கும் 22 மாவட்டங்களில் உள்ள அனைத்து விவசாயிகள் (ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின, பெண் விவசாயிகள்).<br>சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். | மாவட்டத்தில் உள்ள சம்பந்தப்பட்ட வேளாண்மை துணை இயக்குநர் (உபநி) / வேளாண்மை அலுவலர் (உபநி) |
| **2) கிராம அளவிலான உழவர் விவாதக் குழு அமைப்பாளர் பயிற்சி** - 2 நாட்கள் நடத்தப்படும் பயிற்சிக்கு விவசாயி ஒருவருக்கு நாள் ஒன்றிற்கு ரூபாய் 250/- வீதம் உதவித் தொகை. | | |
| 3) **கிராம அளவிலான பயிற்சி மற்றும் செயல் விளக்கம்** - ஒன்றிற்கு ரூபாய் 150/- | | |
| 4) **களப் பயிற்சி செயல் விளக்கம்** ஒன்றிற்கு ரூபாய் 150/- | | |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | பயன்களைப் பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| **XIV) விவசாயிகளுக்கு சிறப்பு விருதுகள் மற்றும் பரிசுகள் வழங்குதல்** | | |
| **14.1. பாரத ரத்னா டாக்டர். எம்.ஜி.ஆர் பாரம்பரிய நெல் பாதுகாவலர் விருது** | | |
| பாரம்பரிய நெல் இரகங்களைப் பாதுகாத்துப் பயிரிட்டு மாநில அளவில் அதிக விளைச்சல் பெறும் முதல் ஐந்து விவசாயிகளுக்கு ரொக்கப் பரிசாக தலா ரூபாய் ஒரு இலட்சம் வழங்கப்படும். | சென்னை மற்றும் நீலகிரி மாவட்டங்களை தவிர்த்து அனைத்து மாவட்டங்களிலும் போட்டியில் கலந்து கொள்ளலாம்.<br>பதிவுக் கட்டணம் :<br>ஒரு பயிர் பதிவிற்கு - ரூபாய் 150/- | **<u>கிராம அளவில்</u>**<br>உதவி வேளாண்மை அலுவலர் / உதவி தோட்டக்கலை அலுவலர்/ உதவி வேளாண்மை அலுவலர் (வேளாண் வணிகம்).<br>**<u>வட்டார அளவில்</u>**<br>துணை வேளாண்மை அலுவலர்/ வேளாண்மை அலுவலர் மற்றும் வேளாண்மை உதவி இயக்குநர்.<br>**<u>மாவட்ட அளவில்</u>**<br>வேளாண்மை இணை இயக்குநர் |
| **14.2. திரு. சி. நாரயணசாமி நாயுடு நெல் உற்பத்தித் திறனுக்கான விருது** | | |
| திருந்திய நெல் சாகுபடி தொழில் நுட்பம்/ இயந்திர நடவு மேற்கொண்டு, பயிர் விளைச்சல் போட்டியில் மாநில அளவில் அதிக உற்பத்தித் திறன் பெறும் விவசாயிக்கு ரூ.5 இலட்சம் பரிசுத் தொகையும், தங்க முலாம் பூசப்பட்ட | சென்னை மற்றும் நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக அனைத்து மாவட்ட விவசாயிகளும் ரூ.150/- பதிவுக் கட்டணம் செலுத்தி திருந்திய நெல்சாகுபடி/ | **<u>கிராம அளவில்</u>**<br>உதவி வேளாண்மை அலுவலர்/உதவி தோட்டக்கலை அலுவலர்/உதவி வேளாண்மை |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | பயன்களைப் பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| வெள்ளி பதக்கம் மற்றும் சான்றிதழ் ஆகியவை, **குடியரசு தின** விழாவில் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்** அவர்களால் வழங்கப்படும். | இயந்திர நடவு பயிர் விளைச்சல் போட்டியில் கலந்து கொள்ளலாம்.<br>• குறைந்தபட்சம் 2 ஏக்கர் குத்தகை அல்லது சொந்த நிலத்தில் சாகுபடி செய்திருக்க வேண்டும்.<br>• அறிவிக்கை செய்யப்பட்ட சன்ன இரக நெல் சாகுபடி செய்திருக்க வேண்டும்.<br>• வேறு மாநில மற்றும் மாவட்ட அளவிலான பயிர்விளைச்சல் போட்டியில் கலந்து கொள்ளக்கூடாது.<br>• கடந்த 3 ஆண்டுகளில் பரிசு பெற்றிருக்கக் கூடாது.<br>• 3 ஆண்டுகள் தொடர் திருந்திய நெல் சாகுபடி முறை/ இயந்திர நடவு கடைபிடித்திருக்க வேண்டும். | அலுவலர்(வேளாண் வணிகம்<br>**<u>வட்டார அளவில்</u>**<br>துணை வேளாண்மை அலுவலர்/ வேளாண்மை அலுவலர் மற்றும் வேளாண்மை உதவி இயக்குநர்<br>**<u>மாவட்ட அளவில்</u>**<br>வேளாண்மை இணை இயக்குநர் |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | பயன்களைப் பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| **XV) பயிர் சாகுபடிக்கு தேவையான இடு பொருட்களை கொள்முதல் செய்வதற்கான உதவித்தொகை** | | |
| **பிரதம மந்திரி கிசான் சம்மான் நிதித் திட்டம்** | | |
| இத்திட்டத்தின் கீழ் விவசாய குடும்பங்களுக்கு பயிர் சாகுபடிக்கு தேவையான இடுபொருட்களை கொள்முதல் செய்வதற்கான உதவித் தொகை நான்கு மாதங்களுக்கு ஒருமுறை ரூபாய்.2000/- வீதம் ஆண்டிற்கு ரூபாய் 6000/- என மூன்று தவணைகளில் விவசாயிகளின் வங்கிக் கணக்குகளில் நேரடி பணபரிமாற்றம் மூலமாக வழங்கப்பட்டு வருகிறது. | திட்ட வழிகாட்டுதலின்படி கீழ்க்கண்ட பிரிவைச் சார்ந்த விவசாயிகளை தவிர மற்ற அனைத்து விவசாயிகளும் இத்திட்டத்தின் கீழ் நிதியுதவி பெற தகுதியுடையவர்கள்:<br>1. 1.2.2019 க்குப் பிறகு நிலவுடைமைதாரர்கள்.<br>2. உயர் வருவாய் பிரிவினர்<br>3.நிறுவனத்தின் பெயரில் நிலம் உள்ளவர்கள்<br>4.கீழ்க்காணும் விவசாய குடும்ப உறுப்பினர்கள்<br>அ) முந்நாள் மற்றும் இந்நாள் அரசியலமைப்பில் பதவி வகித்தவர்/ வகிப்பவர்.<br>ஆ) இந்நாள் மத்திய/ மாநில அமைச்சர்கள் மக்களவை, மாநிலங்களவை மற்றும் | ஒன்றிய அரசினுடைய பி.எம்.கிசான் வலைதளத்தில் பதிவு செய்து கொள்ளலாம் www.pmkisan.gov.in.<br>**<u>கிராம அளவில்</u>**<br>உதவி வேளாண்மை அலுவலர் / உதவி தோட்டக்கலை அலுவலர்<br>**<u>வட்டார அளவில்</u>**<br>துணை வேளாண்மை அலுவலர்/ துணை தோட்டக்கலை அலுவலர் /வேளாண்மை அலுவலர் /தோட்டக்கலை அலுவலர் மற்றும் வேளாண்மை உதவி இயக்குநர்/ தோட்டக்கலை |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | பயன்களைப் பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| | சட்டமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி மேயர்கள் மற்றும் மாவட்ட ஊராட்சி தலைவர்கள்.<br>இ) மத்திய / மாநில அரசு அமைச்சகங்கள்/ துறைகள்/ அலுவலகங்கள் அல்லது அதன் கள பிரிவுகளில் பணியாற்றும் அல்லது ஓய்வு பெற்ற அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள், மத்திய/மாநில பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் அரசின் கீழ் உள்ள அலுவலகங்கள் / தன்னாட்சி நிறுவனங்கள், உள்ளாட்சி அமைப்பின் நிரந்தர பணியாளர்கள் (பல்பணி பணியாளர்கள் வகுப்பு IV / குரூப் D பணியாளர்களை தவிர்த்து).<br>ஈ) மாதத்திற்கு ரூ.10000/- மேல் ஓய்வூதியம் பெறும் | உதவி இயக்குநர்<br>**<u>மாவட்ட அளவில்</u>**<br>வேளாண்மை துணை இயக்குநர் (மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்)/ தோட்டக்கலை துணை இயக்குநர், வேளாண்மை இணை இயக்குநர் /தோட்டக்கலை இணை இயக்குநர் |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | பயன்களைப் பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| | ஓய்வூதியதாரர்கள் (பல்பணி பணியாளர்கள் வகுப்பு IV / குரூப்-D பணியாளர்களை தவிர்த்து).<br>உ) கடந்த ஐந்து மதிப்பீட்டு ஆண்டுகளில் குறைந்தது மூன்று ஆண்டுகள் தொடர்ச்சியாக இரண்டு ஆண்டுகள் உட்பட வருமான வரி செலுத்திய நபர்கள்.<br>ஊ) தொழில்முறை அமைப்புகளுடன் பதிவு செய்து தங்கள் தொழிலை பயிற்சி செய்யும் மருத்துவர்கள், பொறியாளர்கள், வழக்கறிஞர்கள், பட்டயகணக்காளர்கள், மற்றும் கட்டிடக் கலைஞர்கள் போன்ற தொழில் வல்லுநர்கள்.<br>எ) வருமான வரி சட்டம் 1961ன்படி வெளிநாடுவாழ் இந்தியர்கள். | ஒன்றிய அரசினுடைய பி.எம்.கிசான் வலைதளத்தில் பதிவு செய்து கொள்ளலாம் www.pmkisan.gov.in.<br>**கிராம அளவில்**<br>உதவி வேளாண்மை அலுவலர் / உதவி தோட்டக்கலை அலுவலர்<br>**வட்டார அளவில்**<br>துணை வேளாண்மை அலுவலர்/ துணை தோட்டக்கலை அலுவலர் /வேளாண்மை அலுவலர் /தோட்டக்கலை அலுவலர் மற்றும் வேளாண்மை உதவி இயக்குநர்/ தோட்டக்கலை உதவி இயக்குநர் |

| **நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும்** | **பயன்களைப் பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும்** | **தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர்** |
|---|---|---|
| | ஏ)அனைத்து தகுதியான பயனாளிகளும் கட்டாயமாக பி.எம்.கிசான் வலைதளத்தில் பின்வரும் விவரங்களை பதிவேற்றம் செய்ய வேண்டும்:-<br>(i) நில விவரம் பதிவேற்றம்.<br>(ii) ஆண்டுதோறும் ஏப்ரல் மாதத்தில் e-KYC பதிவேற்றம் செய்ய வேண்டும்.<br>(iii) ஆதார் எண் உறுதி படுத்துதல் மற்றும் வங்கி கணக்குடன் ஆதார் எண் (DBT) இணைக்க வேண்டும்.<br>(iv) நிலவுடைமையை பதிவு செய்து விவசாய அடையாள எண் பெற்றிருக்க வேண்டும் | <u>மாவட்ட அளவில்</u><br>வேளாண்மை துணை இயக்குநர் (மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்)/ தோட்டக்கலை துணை இயக்குநர், வேளாண்மை இணை இயக்குநர் /தோட்டக்கலை இணை இயக்குநர் |

# 2. சர்க்கரைத் துறை

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | | பயன்களை பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்புகொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|---|
| 1. பிரதான் மந்திரி ராஷ்டிரிய கிரிஷி விகாஷ் யோஜனா ( PMRKVY) கரும்பு சாகுபடி மேம்பாட்டுத்திட்டம் | | | |
| 1. | வல்லுநர் விதைக்கரணைகள் வாங்கிட உதவித்தொகை. ஒரு எக்டருக்கு ரூ.15,625 (50 சதவீத மானியம்) | தமிழ்நாட்டில் கரும்பு சாகுபடி செய்யும் விவசாயிகள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட கூட்டுறவு, பொதுத்துறை மற்றும் தனியார் சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பை பதிவு செய்து வழங்கவேண்டும். மேலும் அரசு ஆணைகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளின்படி விவசாயிகள் பயன்களைப்பெற தகுதியுடையவர்கள் | கூட்டுறவு, பொதுத்துறை மற்றும் தனியார் சர்க்கரை ஆலைகளின் மேலாண்மை இயக்குநர் / தலைமை நிர்வாகி / பொது மேலாளர். மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர். |
| 2. | திசுவளர்ப்பு நாற்றுக்கள் வாங்கிட உதவித்தொகை. ஒரு எக்டருக்கு ரூ.1,50,000 (50 சதவீத மானியம்) | | |
| 3. | பருசீவல் நாற்றுக்கள் நடவுக்கு உதவித்தொகை. ஒரு எக்டருக்கு ரூ.15,625 (50 சதவீத மானியம்) | | |
| 4. | ஒருபரு விதைக்கரணைகள் நடவுக்கு உதவித்தொகை. ஒரு எக்டருக்கு ரூ.5,000 (50 சதவீத மானியம்) | | |
| 5. | சோகை தூளாக்குதல் மற்றும் நிலப்போர்வை அமைத்தலுக்கு உதவித்தொகை ஒரு எக்டருக்கு ரூ. 3,000 (50 சதவீதம் மானியம்) | | |
| 6. | அகலப்பார் முறையில் நடவு செய்ய ஒரு எக்டருக்கு ரூ. 3,000 (50% மானியம்) | | |
| ரூ.4,500/- வீதம், அதிக பட்சமாக ஒரு பயனாளிக்கு 2 எக்டருக்கு வழங்கப்படும்.<br>6. **மண்புழு உரப்படுக்கை** - 90 சதவீத மானியத்தில் 12'x4'x2' அளவுள்ள (96 கன அடி) கூடம் அமைப்பதற்கு அதிகபட்சமாக ஒரு அலகிற்கு ரூ.14,400/- வரை மானியம் வழங்கப்படும்.<br>7. **தேனீக் கூட்டங்களுடனான தேனீப் பெட்டிகள்** - 90 சதவீத மானியத்தில் அதிக பட்சமாக ஒரு தேனீக் கூட்டத்துடன் உள்ள தேனீப் பெட்டிக்கு ரூ.3,600/- வீதம் வழங்கப்படும்.<br>8. **தேன் பிரித்தெடுக்கும் கருவி** - 90 சதவீத மானியத்தில் ரூ.18,000/- வீதம் அதிக பட்சமாக ஒரு பயனாளிக்கு ஒரு கருவி வழங்கப்படும். | வன உரிமைச் சட்ட (FRA) பட்டா பெற்றவர்கள் | **கிராம அளவில்**<br>உதவி தோட்டக்கலை அலுவலர்<br>**வட்டார அளவில்**<br>தோட்டக்கலை உதவி இயக்குநர்/ தோட்டக்கலை அலுவலர் / துணை தோட்டக்கலை அலுவலர்<br>**மாவட்ட அளவில்**<br>தோட்டக்கலை இணை இயக்குநர் / தோட்டக்கலை துணை இயக்குநர் |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | பயன்களை பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| 9. **நகரும் விற்பனை வண்டி** - 90 சதவீத மானியத்தில் அதிக பட்சமாக ரூ.27,000/- வரை ஒரு அலகிற்கு வழங்கப்படும்.<br>10. **பண்ணை மேம்பாட்டு உபகரணங்கள்**- 90 சதவீத மானியத்தில் ஒரு விவசாயிக்கு ரூ.3,600/- வீதம் மானியம் வழங்கப்படும். | வன உரிமைச் சட்ட (FRA) பட்டா பெற்றவர்கள் | **<u>கிராம அளவில்</u>**<br>உதவி தோட்டக்கலை அலுவலர்<br>**<u>வட்டார அளவில்</u>**<br>தோட்டக்கலை உதவி இயக்குநர்/ தோட்டக்கலை அலுவலர் / துணை தோட்டக்கலை அலுவலர்<br>**<u>மாவட்ட அளவில்</u>**<br>தோட்டக்கலை இணை இயக்குநர் / தோட்டக்கலை துணை இயக்குநர் |
| 3. **தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டம் – விரிவான திட்ட அறிக்கை (PM – RKVY -DPR)**<br>**ஒன்றிய மற்றும் மாநில பங்களிப்பு திட்டம்** (60:40) | | |
| **I தோட்டக்கலை பயிர்களின் உற்பத்தியை அதிகரிக்க துணை கட்டமைப்புகள் அமைத்து சாகுபடி செய்தல்** | | |
| **1. நிரந்தர பந்தல் அமைப்பு** - 50 சதவீத மானியத்தில் எக்டருக்கு ரூ.3 இலட்சம் வரை ஒரு பயனாளிக்கு அதிக பட்சமாக ஒரு எக்டர் வரை நிரந்தர பந்தல் அமைத்து சாகுபடி செய்ய மானியம் வழங்கப்படும். | சென்னை மாவட்டம் தவிர அனைத்து மாவட்டங்களும்<br><br>சிறு / குறு விவசாயிகள் மற்றும் ஆதி திராவிடர் / பழங்குடியின/பெண் விவசாயிகளுக்கு | **<u>கிராம அளவில்</u>**<br>உதவி தோட்டக்கலை அலுவலர்<br>**<u>வட்டார அளவில்</u>**<br>தோட்டக்கலை உதவி இயக்குநர்/ தோட்டக்கலை அலுவலர் / துணை |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | பயன்களை பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| | மற்றும் மாற்றுதிறனாளி விவசாயிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். | தோட்டக்கலை அலுவலர்<br>**<u>மாவட்ட அளவில்</u>**<br>தோட்டக்கலை இணை இயக்குநர் / தோட்டக்கலை துணை இயக்குநர். |
| **II. தொகுப்பு அடிப்படையில் ஏற்றுமதிக்காக மா, கொய்யா, தக்காளி, முருங்கை மற்றும் சின்ன வெங்காயம் ஆகியவற்றின் தரத்தினை மேம்படுத்தும் திட்டம்** | | |
| **<u>மா தொகுப்பு</u>** :<br>ஒரு பயனாளிக்கு அதிகபட்சம் 1 எக்டருக்கு, 50 சதவீதம் அல்லது அதிகபட்சமாக ரூ.66,450/- வரை மானியமாக வழங்கப்படும்.<br>(மாம்பழ உறைகள், பழ அறுவடைக்கருவி, நீளக் கைப்பிடி கொண்ட கவாத்து கத்தரி, மெத்தில் யூஜினால் பூச்சிப் பொறி, நெகழி கூடைகள், 500 சதுர அடியில் குறைந்த செலவிலான குளிரூட்டும் சேமிப்புக் கூடம், ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை மற்றும் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை உயிர் உரங்கள் மற்றும் உயிர் இடுபொருட்கள் நுண்ணூட்டக் கலவைகள்) | கும்மிடிப்பூண்டி (திருவள்ளூர் மாவட்டம்), காரிமங்கலம் (தர்மபுரி மாவட்டம்), பர்கூர், காவேரிப்பட்டினம் (கிருஷ்ணகிரி மாவட்டம்) மற்றும் நத்தம் (திண்டுக்கல் மாவட்டம்) வட்டாரங்களைச் சேர்ந்த அனைத்து விவசாயிகளும். | **<u>கிராம அளவில்</u>**<br>உதவி தோட்டக்கலை அலுவலர்<br>**<u>வட்டார அளவில்</u>**<br>தோட்டக்கலை உதவி இயக்குநர்/ தோட்டக்கலை அலுவலர் / துணை தோட்டக்கலை அலுவலர்<br>**<u>மாவட்ட அளவில்</u>**<br>தோட்டக்கலை இணை இயக்குநர் / தோட்டக்கலை துணை இயக்குநர். |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | பயன்களை பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| **கொய்யா தொகுப்பு** : ஒரு பயனாளிக்கு அதிகபட்சம் 1 எக்டருக்கு, 50 சதவீதம் அல்லது அதிகபட்சமாக ரூ61,750/- வரை மானியமாக வழங்கப்படும் (கொய்யாப்பழ உறைகள் , ஒளிப் பொறி, மெத்தில் யூஜினால் கவர்ச்சி பூச்சிப் பொறி, நெகிழி கூடைகள் , 500 சதுர அடியில் குறைந்த செலவிலான குளிரூட்டும் சேமிப்புக் கூடம், நீளக் கைப்பிடி கொண்டகவாத்து கத்தரி, ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை மற்றும் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை உயிர் உரங்கள் மற்றும் உயிர் இடுபொருட்கள்) | பழனி (திண்டுக்கல் மாவட்டம்), அணைக்கட்டு (வேலூர் மாவட்டம்) மற்றும் அலங்காநல்லூர் (மதுரை மாவட்டம்) வட்டாரங்களைச் சேர்ந்த அனைத்து விவசாயிகளும். | **கிராம அளவில்** உதவி தோட்டக்கலை அலுவலர் **வட்டார அளவில்** தோட்டக்கலை உதவி இயக்குநர்/ தோட்டக்கலை அலுவலர் / துணை தோட்டக்கலை அலுவலர் **மாவட்ட அளவில்** தோட்டக்கலை இணை இயக்குநர் / தோட்டக்கலை துணை இயக்குநர். |
| **தக்காளி தொகுப்பு** : ஒரு பயனாளிக்கு அதிகபட்சம் 1 எக்டருக்கு, 50 சதவீதம் அல்லது அதிகபட்சமாக ரூ68,250/- வரை மானியமாக வழங்கப்படும். (வீரிய ஒட்டு தக்காளி நாற்றுகள், காய்கறிப் | பாலக்கோடு, காரிமங்கலம் (தர்மபுரி மாவட்டம்), கெலமங்கலம் (கிருஷ்ணகிரி மாவட்டம்), பெத்தநாயக்கன்பாளையம் (சேலம் மாவட்டம்) , | |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | பயன்களை பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| பயிர்களுக்கான தாங்கு அமைப்பு, நெகிழி கூடைகள், 500 சதுர அடியில் குறைந்த செலவிலான சுற்றுச்சூழல் நட்பு குளிரூட்டும் சேமிப்புக் கூடம், ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை மற்றும் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை உயிர் உரங்கள் மற்றும் உயிர் இடுபொருட்கள், இன கவர்ச்சி பொறிகள் மற்றும் மஞ்சள் ஒட்டுப் பொறிகள்) | ஒட்டன்சத்திரம் (திண்டுக்கல் மாவட்டம்), உத்தமபாளையம் (தேனி மாவட்டம்) மற்றும் உடுமலைப்பேட்டை (திருப்பூர் மாவட்டம்) வட்டாரங்களைச் சேர்ந்த அனைத்து விவசாயிகளும். | **கிராம அளவில்**<br>உதவி தோட்டக்கலை அலுவலர்<br>**வட்டார அளவில்**<br>தோட்டக்கலை உதவி இயக்குநர்/ தோட்டக்கலை அலுவலர் / துணை தோட்டக்கலை அலுவலர்<br>**மாவட்ட அளவில்**<br>தோட்டக்கலை இணை இயக்குநர் / தோட்டக்கலை துணை இயக்குநர். |
| **முருங்கை தொகுப்பு** :<br>ஒரு பயனாளிக்கு அதிகபட்சம் 1 எக்டருக்கு, 50 சதவீதம் அல்லது அதிகபட்சமாக ரூ19,100/- வரை மானியமாக வழங்கப்படும்.<br>(முருங்கை விதைகள், ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை மற்றும் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை உயிர் உரங்கள் மற்றும் உயிர் இடுபொருட்கள், ஒளிப் பொறிகள், மண்புழு உரப்படுக்கை, விசை தெளிப்பான்கள், பீப்பாய்கள்- 100 லிட்டர் அளவுள்ள பஞ்சகவ்யா, தசகவ்யா தயாரித்தல்) | தொப்பம்பட்டி (திண்டுக்கல் மாவட்டம்), கே. பரமத்தி, அரவக்குறிச்சி (கரூர் மாவட்டம்), உடன்குடி மற்றும் சாத்தான்குளம் (தூத்துகுடி மாவட்டம்) வட்டாரங்களைச் சேர்ந்த அனைத்து விவசாயிகளும் | |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | பயன்களை பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| **சின்ன வெங்காயம் தொகுப்பு** : ஒரு பயனாளிக்கு அதிகபட்சம் 1 எக்டருக்கு, 50 சதவீதம் அல்லது அதிகபட்சமாக ரூ40,000/- வரை மானியமாக வழங்கப்படும். (சின்ன வெங்காய விதைக் கிழங்குகள், பசுந்தாள் உரப் பயிர் விதைகள் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை மற்றும் சுற்றுச்சூழல் பூச்சி மேலாண்மை முறைகள், ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை உயிர் உரங்கள் மற்றும் உயிர் இடுபொருட்கள் பயிர் வளர்ச்சி ஊக்கி, இனக்கவர்ச்சி பொறிகள், மஞ்சள் ஒட்டுப் பொறிகள், மண்புழு உரப்படுக்கை மற்றும் சோளம் – கவர்ச்சி பயிர். | ஆலத்தூர், பெரம்பலூர் (பெரம்பலூர் மாவட்டம்), துறையூர், உப்பிலியாபுரம் (திருச்சி மாவட்டம்) ராசிபுரம், வெண்ணந்தூர் (நாமக்கல் மாவட்டம்), ஒட்டன்சத்திரம், ரெட்டியார்சத்திரம் ( திண்டுக்கல் மாவட்டம்) மற்றும் குண்டடம் (திருப்பூர் மாவட்டம்) வட்டாரங்களைச் சேர்ந்த அனைத்து விவசாயிகளும். | **கிராம அளவில்** உதவி தோட்டக்கலை அலுவலர் **வட்டார அளவில்** தோட்டக்கலை உதவி இயக்குநர்/ தோட்டக்கலை அலுவலர் / துணை தோட்டக்கலை அலுவலர் **மாவட்ட அளவில்** தோட்டக்கலை இணை இயக்குநர் / தோட்டக்கலை துணை இயக்குநர். |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | பயன்களை பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| **4. மாற்றுப் பயிர் சாகுபடி திட்டம்**<br>**ஒன்றிய மற்றும் மாநில பங்களிப்பு திட்டம்** (60:40) | | |
| 1. புகையிலை பயிருக்கு மாற்றாக காய்கறிகள் பரப்பு விரிவாக்கம் – 40 சதவீத மானியம் எக்டருக்கு ரூ.20,000/- வீதம் ஒரு பயனாளிக்கு அதிகபட்சமாக 2 எக்டருக்கு நடவுச்செடிகளுக்கு வழங்கப்படும். | கோயம்புத்தூர், ஈரோடு, திண்டுக்கல், சேலம், நாகப்பட்டினம், திருப்பூர் மாவட்ட புகையிலை விவசாயிகள்<br>சிறு / குறு விவசாயிகள் மற்றும் ஆதி திராவிடர் / பழங்குடியின/பெண் விவசாயிகளுக்கு மற்றும் மாற்றுதிறனாளி விவசாயிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். | **கிராம அளவில்**<br>உதவி தோட்டக்கலை அலுவலர்<br>**வட்டார அளவில்**<br>தோட்டக்கலை உதவி இயக்குநர்/ தோட்டக்கலை அலுவலர் / துணை தோட்டக்கலை அலுவலர்<br>**மாவட்ட அளவில்**<br>தோட்டக்கலை இணை இயக்குநர் / தோட்டக்கலை துணை இயக்குநர் |
| **5. வேளாண் காடுகள்** (Agroforestry)<br>**ஒன்றிய மற்றும் மாநில பங்களிப்பு திட்டம்** (60:40) | | |
| **1. சிறிய நாற்றங்கால்** (0.50 ha) – 100 சதவீதம் மானியம் (ரூ. 10.00 இலட்சம்) அரசு தோட்டக்கலைப் பண்ணைகளுக்கு சிறிய நாற்றங்கால் அமைக்க வழங்கப்படும்.<br>**2. பெரிய நாற்றங்கால்** (1.00 ha) – 100 சதவீதம் மானியம் | சென்னை மாவட்டம் தவிர அனைத்து மாவட்ட அரசு தோட்டக்கலைப் பண்ணைகள் மற்றும் மாநில தென்னை நாற்றுப்பண்ணைகள்<br>சிறு / குறு விவசாயிகள் மற்றும் ஆதி திராவிடர் / | **கிராம அளவில்**<br>உதவி தோட்டக்கலை அலுவலர்<br>**வட்டார அளவில்**<br>தோட்டக்கலை உதவி இயக்குநர்/ தோட்டக்கலை அலுவலர் / துணை தோட்டக்கலை அலுவலர் |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | பயன்களை பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| (ரூ.16.00 இலட்சம்) அரசு தோட்டக்கலை பண்ணைகளுக்கு பெரிய நாற்றாங்கால் அமைக்க வழங்கப்படும்.<br>3. **ஏற்கெனவே உள்ள நாற்றங்கால் பண்ணைகளில் மரக்கன்றுகளை உற்பத்தி செய்து வழங்குதல்** – 100 சதவீத மானியம் (ரூ.5.00 இலட்சம்) - அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் தோட்டக்கலை சார்ந்த வேளாண் மரக்கன்றுகள் உற்பத்தி செய்யப்படும்.<br>100 % மானியத்தில் வேளாண் காடுகளை ஊக்குவிக்க அரசு தோட்டக்கலை பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்ட மர செடிகளை ஒரு விவசாயிக்கு வரப்போரங்களில் நடுவதற்கு ஒரு எக்டருக்கு 160 செடிகளும் குறைந்த அடர்த்தி நடவுக்கு ஒரு எக்டருக்கு 500 செடிகளும் வழங்கப்படுகிறது. | பழங்குடியின/பெண் விவசாயிகளுக்கு மற்றும் மாற்றுதிறனாளி விவசாயிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். | **மாவட்ட அளவில்**<br>தோட்டக்கலை இணை இயக்குநர் / தோட்டக்கலை துணை இயக்குநர் |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | பயன்களை பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| **6. பாரம்பரிய வேளாண் வளர்ச்சி திட்டம் (PKVY)**<br>**ஒன்றிய மற்றும் மாநில பங்களிப்பு திட்டம்** (60:40) | | |
| தோட்டக்கலை பயிர்களில் அங்கக வேளாண்மையை ஊக்குவிக்க PGS சான்றிதழ் பெற ஒரு பயனாளிக்கு ரூ.5000/- வீதம் எக்டருக்கு ஊக்கத்தொகை வழங்கப்படும் | சென்னை மாவட்டம் தவிர அனைத்து மாவட்டங்களும் சிறு / குறு விவசாயிகள் மற்றும் ஆதி திராவிடர் / பழங்குடியின/பெண் விவசாயிகளுக்கு மற்றும் மாற்றுதிறனாளி விவசாயிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். | **<u>கிராம அளவில்</u>**<br>உதவி தோட்டக்கலை அலுவலர்<br>**<u>வட்டார அளவில்</u>**<br>தோட்டக்கலை உதவி இயக்குநர்/ தோட்டக்கலை அலுவலர் / துணை தோட்டக்கலை அலுவலர்<br>**<u>மாவட்ட அளவில்</u>**<br>தோட்டக்கலை இணை இயக்குநர் / தோட்டக்கலை துணை இயக்குநர். |
| **7. இயற்கை வேளாண்மைக்கான தேசிய இயக்கம் (NMNF)**<br>**ஒன்றிய மற்றும் மாநில பங்களிப்பு திட்டம்** (60:40) | | |
| 50 எக்டர் பரப்பளவு கொண்ட, தோராயமாக 125 விவசாயிகளை உள்ளடக்கிய குழுக்கள் (Clusters) அமைக்கப்படும். இதில், ஒரு ஏக்கரில் இயற்கை வேளாண்மை மேற்கொள்ளும் ஒவ்வொரு விவசாயிக்கும் ரூ.4,000 ஊக்கத்தொகை வழங்கப்படும். | அரியலூர், கோயம்புத்தூர், கடலூர், கிருஷ்ணகிரி, திண்டுக்கல், தர்மபுரி, திருவள்ளூர், தேனி, தூத்துக்குடி, இராமநாதபுரம், நாமக்கல், திருவண்ணாமலை, திருப்பத்தூர், சேலம், மதுரை, தென்காசி, விருதுநகர், | **<u>கிராம அளவில்</u>**<br>உதவி தோட்டக்கலை அலுவலர்<br>**<u>வட்டார அளவில்</u>**<br>தோட்டக்கலை உதவி இயக்குநர்/ தோட்டக்கலை அலுவலர் / துணை தோட்டக்கலை அலுவலர் |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | பயன்களை பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| | புதுக்கோட்டை, சிவகங்கை, விழுப்புரம் மற்றும் நீலகிரி மாவட்டங்களைச் சேர்ந்த அனைத்து விவசாயிகளும்.<br>சிறு / குறு விவசாயிகள் மற்றும் ஆதி திராவிடர் / பழங்குடியின/பெண் விவசாயிகளுக்கு மற்றும் மாற்றுதிறனாளி விவசாயிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். | **<u>மாவட்ட அளவில்</u>**<br>தோட்டக்கலை இணை இயக்குநர் / தோட்டக்கலை துணை இயக்குநர். |
| **8. தேசிய மூங்கில் இயக்கம் (NBM)**<br>**ஒன்றிய மற்றும் மாநில அரசு பங்களிப்பு திட்டம்** (60:40) | | |
| 1. **வனம் அல்லாத பகுதிகளில் மூங்கில் பரப்பு விரிவாக்கம் – அரசு நிலங்கள்/ பஞ்சாயத்து நிலங்கள்/சமூக நிலங்கள்** - 100 சதவீத மானியத்தில் நடவுச் செடிகள் கொள்முதல் செய்வதற்கு எக்டருக்கு ரூ.1,20,000/- இரண்டு ஆண்டுகளில் (60:40) வழங்கப்படும். | அனைத்து மாவட்டங்கள் (அரசு நிலங்கள், ஊராட்சி நிலங்கள் போன்றவை). | **<u>கிராம அளவில்</u>**<br>உதவி தோட்டக்கலை அலுவலர்<br>**<u>வட்டார அளவில்</u>**<br>தோட்டக்கலை உதவி இயக்குநர்/ தோட்டக்கலை அலுவலர் / துணை தோட்டக்கலை அலுவலர்<br>**<u>மாவட்ட அளவில்</u>**<br>தோட்டக்கலை இணை இயக்குநர் / தோட்டக்கலை துணை இயக்குநர் |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | பயன்களை பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| 2. **வனம் அல்லாத பகுதிகளில் மூங்கில் பரப்பு விரிவாக்கம்** - **தனியார் நிலங்களுக்கு** - 50 சதவீத மானியத்தில் நடவுச் செடிகள் கொள்முதல் செய்வதற்கு எக்டருக்கு ரூ.60,000/- இரண்டு ஆண்டுகளில் (60:40) வழங்கப்படும். | அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படும். | **கிராம அளவில்**<br>உதவி தோட்டக்கலை அலுவலர்<br>**வட்டார அளவில்**<br>தோட்டக்கலை உதவி இயக்குநர்/ தோட்டக்கலை அலுவலர் / துணை தோட்டக்கலை அலுவலர்<br>**மாவட்ட அளவில்**<br>தோட்டக்கலை இணை இயக்குநர் / தோட்டக்கலை துணை இயக்குநர். |
| **9. தேசிய சமையல் எண்ணெய் இயக்கம் - எண்ணெய்ப் பனை (NMEO - OP) ஒன்றிய மற்றும் மாநில அரசு பங்களிப்பு திட்டம் (60:40)** | | |
| 1. **பரப்பு விரிவாக்கம்** - 100 சதவீத மானியத்தில் அதிகபட்சமாக எக்டருக்கு ரூ.20,000/- (உள்நாட்டு), ரூ.29,000/- (இறக்குமதி செய்யப்பட்ட), மதிப்பில் நடவு பொருள் வழங்கப்படும்.<br>2. **பராமரிப்பு மானியம்** (4 **ஆண்டுகள்** வரை) - | அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படும். | **கிராம அளவில்**<br>உதவி தோட்டக்கலை அலுவலர்<br>**வட்டார அளவில்**<br>தோட்டக்கலை உதவி இயக்குநர்/ தோட்டக்கலை அலுவலர் / துணை தோட்டக்கலை அலுவலர் |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | பயன்களை பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| 50 சதவீத மானியம். எக்டருக்கு ரூ.5,250/- மானியமாக 4 ஆண்டுகளுக்கு வழங்கப்படும்.<br>3. **எண்ணெய்ப் பனையில் ஊடுபயிர் சாகுபடிக்கு மானியம் வழங்குதல்** - 50 சதவீத மானியம் எக்டருக்கு ரூ.5,250/- மானியமாக வழங்கப்படும்.<br>4. **இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள்** பழக்குலை வெட்டும் கருவி, எண்ணெய்ப் பனை கன்றுகளை பாதுகாக்கும் கம்பிவலை, பழக்குலை அறுவடை செய்யும் இயந்திரம், சிறிய அளவிலான அலுமினிய ஏணி, இலை வெட்டும் கருவி, சிறிய அளவிலான உழுவை இயந்திரம் ஆகிய இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களுக்கு 50 சதவீதம் பின்னேற்பு மானியமாக விவசாயிகளுக்கு வழங்கப்படும். | அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படும். | <u>**மாவட்ட அளவில்**</u><br>தோட்டக்கலை இணை இயக்குநர் / தோட்டக்கலை துணை இயக்குநர் |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | பயன்களை பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| **5. உற்பத்தி ஊக்கத்தொகை**<br>5 அல்லது அதற்கு மேல் வயதுடைய எண்ணெய் பனையிலிருந்து 8 அல்லது 8 மெ.டன்னிற்கு மேல் எண்ணெய்ப் பனை பழக்குலை உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு மெ.டன் ஒன்றிற்கு ரூ.1,000/- ஊக்கத்தொகையாக வழங்கப்படும். | | **<u>கிராம அளவில்</u>**<br>உதவி தோட்டக்கலை அலுவலர்<br>**<u>வட்டார அளவில்</u>**<br>தோட்டக்கலை உதவி இயக்குநர்/ தோட்டக்கலை அலுவலர் / துணை தோட்டக்கலை அலுவலர்<br>**<u>மாவட்ட அளவில்</u>**<br>தோட்டக்கலை இணை இயக்குநர் / தோட்டக்கலை துணை இயக்குநர். |
| **10. மாநில தோட்டக்கலை வளர்ச்சி திட்டம்** (SHDS) | | |
| **I. தோட்டக்கலைப் பயிர்களின் பரப்பு விரிவாக்கம்** | | |
| **1. மூலிகை பயிர்களின் பரப்பு விரிவாக்கம்**<br>**1.1. மருந்து கூர்க்கன்** – 50 சதவீத மானியம் எக்டருக்கு ரூ. 24,000/- வீதம் ஒரு பயனாளிக்கு அதிகபட்சமாக 2 எக்டருக்கு பின்னேற்பு மானியமாக வழங்கப்படும்.<br>**1.2. நித்திய கல்யாணி** – 50 சதவீத மானியம் எக்டருக்கு | சென்னை தவிர, எல்லா மாவட்ட விவசாயிகளும்.<br><br>சிறு / குறு விவசாயிகள், பெண் விவசாயிகள், தாழ்த்தப்பட்ட / பழங்குடி விவசாயிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும் | **<u>கிராம அளவில்</u>**<br>உதவி தோட்டக்கலை அலுவலர்<br>**<u>வட்டார அளவில்</u>**<br>தோட்டக்கலை உதவி இயக்குநர்/ தோட்டக்கலை அலுவலர் / துணை தோட்டக்கலை அலுவலர் |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | பயன்களை பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| ரூ. 13,000/- வீதம் ஒரு பயனாளிக்கு அதிகபட்சமாக 2 எக்டருக்கு பின்னேற்பு மானியமாக வழங்கப்படும்.<br>1.3. **முள் சீத்தா** – 40 சதவீத மானியம் எக்டருக்கு ரூ.18,000/- வீதம் ஒரு பயனாளிக்கு அதிகபட்சமாக 2 எக்டர் வரை வழங்கப்படும். | | **<u>மாவட்ட அளவில்</u>**<br>தோட்டக்கலை இணை இயக்குநர் / தோட்டக்கலை துணை இயக்குநர் |
| 2. **பாரம்பரிய காய்கறி இரகங்களின் பரப்பு விரிவாக்கம்** - 40 சதவீத மானியம் எக்டருக்கு ரூ.24,000/- வீதம் ஒரு பயனாளிக்கு அதிகபட்சமாக 2 எக்டர் வரை வழங்கப்படும். | சென்னை தவிர, அனைத்து மாவட்ட விவசாயிகளும்.<br>சிறு / குறு விவசாயிகள், பெண் விவசாயிகள், தாழ்த்தப்பட்ட / பழங்குடி விவசாயிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். | |
| 3. **பாரம்பரிய பழ இரகங்களின் பரப்பு விரிவாக்கம்** - 40 சதவீத மானியம் எக்டருக்கு ரூ.28,000/- வீதம் ஒரு பயனாளிக்கு அதிகபட்சமாக 2 எக்டர் வரை வழங்கப்படும். | சென்னை தவிர, அனைத்து மாவட்ட விவசாயிகளும்.<br>சிறு / குறு விவசாயிகள், பெண் விவசாயிகள், தாழ்த்தப்பட்ட / பழங்குடி விவசாயிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். | |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | பயன்களை பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| 4. **தர்பூசணி பரப்பு விரிவாக்கம்** - 40 சதவீத மானியம் எக்டருக்கு ரூ.10,000/- வீதம் ஒரு பயனாளிக்கு அதிகபட்சமாக 2 எக்டர் வரை வழங்கப்படும். | சென்னை மற்றும் நீலகிரி தவிர, அனைத்து மாவட்ட விவசாயிகளும். சிறு / குறு விவசாயிகள், பெண் விவசாயிகள், தாழ்த்தப்பட்ட/பழங்குடி விவசாயிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். | **<u>கிராம அளவில்</u>** உதவி தோட்டக்கலை அலுவலர் **<u>வட்டார அளவில்</u>** தோட்டக்கலை உதவி இயக்குநர்/ தோட்டக்கலை அலுவலர் / துணை தோட்டக்கலை அலுவலர் **<u>மாவட்ட அளவில்</u>** தோட்டக்கலை இணை இயக்குநர் / தோட்டக்கலை துணை இயக்குநர் |
| 5. **சுவைதாளிதப்பயிர்கள் பரப்பு விரிவாக்கம்** 5.1 **செடி மிளகு பரப்பு விரிவாக்கம்** - 40 சதவீத மானியம் எக்டருக்கு ரூ.40,000/- வீதம் ஒரு பயனாளிக்கு அதிகபட்சமாக 2 எக்டர் வரை வழங்கப்படும். | செடி மிளகு சாகுபடி செய்யும் மாவட்டங்கள் (தர்மபுரி, தேனி, கோயம்புத்தூர், கன்னியாகுமரி, திண்டுக்கல், சேலம், கிருஷ்ணகிரி, திருவள்ளூர், கள்ளக்குறிச்சி மற்றும் நாமக்கல்) சிறு / குறு விவசாயிகள், பெண் விவசாயிகள், தாழ்த்தப்பட்ட / பழங்குடி விவசாயிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். | |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | பயன்களை பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| **5.2. புளி பரப்பு விரிவாக்கம்** - 40 சதவீத மானியம் எக்டருக்கு ரூ.20,000/- வீதம் ஒரு பயனாளிக்கு அதிகபட்சமாக 2 எக்டர் வரை வழங்கப்படும். | சென்னை மற்றும் நீலகிரி தவிர, அனைத்து மாவட்ட விவசாயிகள். சிறு / குறு விவசாயிகள், பெண் விவசாயிகள், தாழ்த்தப்பட்ட / பழங்குடி விவசாயிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். | **<u>கிராம அளவில்</u>**<br>உதவி தோட்டக்கலை அலுவலர்<br>**<u>வட்டார அளவில்</u>**<br>தோட்டக்கலை உதவி இயக்குநர்/ தோட்டக்கலை அலுவலர் / துணை தோட்டக்கலை அலுவலர்<br>**<u>மாவட்ட அளவில்</u>**<br>தோட்டக்கலை இணை இயக்குநர் / தோட்டக்கலை துணை இயக்குநர் |
| **5.3 அதிக காரத்தன்மையுடைய மிளகாய் பரப்பு விரிவாக்கம்** – 40% மானியம் எக்டருக்கு ரூ.20,000/- வீதம் ஒரு பயனாளிக்கு அதிகபட்சமாக 2 எக்டர் வரை வழங்கப்படும். | தூத்துக்குடி, விருதுநகர், இராமநாதபுரம், சிவகங்கை, தென்காசி, திருநெல்வேலி மாவட்ட விவசாயிகள். சிறு / குறு விவசாயிகள், பெண் விவசாயிகள், தாழ்த்தப்பட்ட / பழங்குடி விவசாயிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். | |
| **6. மலர் பயிர்களின் பரப்பு விரிவாக்கம்**<br>**6.1 உதிரி மலர்கள் - மல்லிகை)** - 40 சதவீத மானியம் எக்டருக்கு ரூ. 12,000/- வீதம் ஒரு பயனாளிக்கு அதிகபட்சமாக 2 எக்டருக்கு மானியம் வழங்கப்படும். | சென்னை தவிர, அனைத்து மாவட்ட விவசாயிகள். சிறு / குறு விவசாயிகள், பெண் விவசாயிகள், தாழ்த்தப்பட்ட / பழங்குடி விவசாயிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். | |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | பயன்களை பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| 6.2. **உதிரி மலர்கள் - நறுமண ரோஜா** - 40 சதவீத மானியம் எக்டருக்கு ரூ. 12,000/- வீதம் ஒரு பயனாளிக்கு அதிகபட்சமாக 2 எக்டருக்கு மானியம் வழங்கப்படும். | | **<u>கிராம அளவில்</u>**<br>உதவி தோட்டக்கலை அலுவலர்<br>**<u>வட்டார அளவில்</u>**<br>தோட்டக்கலை உதவி இயக்குநர்/ தோட்டக்கலை அலுவலர் / துணை தோட்டக்கலை அலுவலர்<br>**<u>மாவட்ட அளவில்</u>**<br>தோட்டக்கலை இணை இயக்குநர் / தோட்டக்கலை துணை இயக்குநர் |
| **7. தோட்டப்பயிர்களின் பரப்பு விரிவாக்கம்**<br>**7.1 தென்னை பரப்பு விரிவாக்கம்**- 50 சதவீத மானியம் எக்டருக்கு ரூ.14,000/- வீதம் ஒரு பயனாளிக்கு அதிகபட்சமாக 2 எக்டர் வரை வழங்கப்படும் | சென்னை தவிர, அனைத்து மாவட்ட விவசாயிகளும்.<br>சிறு / குறு விவசாயிகள், பெண் விவசாயிகள், தாழ்த்தப்பட்ட / பழங்குடி விவசாயிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். | **<u>கிராம அளவில்</u>**<br>உதவி தோட்டக்கலை அலுவலர்<br>**<u>வட்டார அளவில்</u>**<br>தோட்டக்கலை உதவி இயக்குநர்/ தோட்டக்கலை அலுவலர் / துணை தோட்டக்கலை அலுவலர்<br>**<u>மாவட்ட அளவில்</u>**<br>தோட்டக்கலை இணை இயக்குநர் / தோட்டக்கலை துணை இயக்குநர் |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | பயன்களை பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| II. "**வெற்றி இல்லத்தரசி வீட்டுத்தோட்டம்**" | | |
| 1. **மாடித்தோட்ட தளைகள் விநியோகம்** - 6 வகையான காய்கறி விதைகள் கொண்ட தளைகள், செடி வளர்ப்பு பைகள், தென்னை நார்க்கழிவு கட்டிகள், உயிர் உரங்கள், உயிரியல் கட்டுபாட்டு காரணிகள், வேப்ப எண்ணெய் அடங்கிய தளைகள் 50 சதவீத மானியத்தில் தளை ஒன்றிற்கு ரூ.750/- வீதம் ஒரு நபருக்கு அதிகபட்சமாக இரண்டு தளைகள் வரை வழங்கப்படும்.<br>2. **நிழல்வலைகுடில் அமைப்புகள்** (100 சதுர அடி)- 50 சதவீத மானியத்தில் ரூ.3,500/அலகு என்ற வீதத்தில் ஒரு நபருக்கு அதிகபட்சமாக ஒரு அலகிற்கு பின்னேற்பு மானியம் வழங்கப்படும். | அனைத்து மாவட்டங்களில் செயல்படுத்தப்படும். | **<u>கிராம அளவில்</u>**<br>உதவி தோட்டக்கலை அலுவலர்<br>**<u>வட்டார அளவில்</u>**<br>தோட்டக்கலை உதவி இயக்குநர்/ தோட்டக்கலை அலுவலர் / துணை தோட்டக்கலை அலுவலர்<br>**<u>மாவட்ட அளவில்</u>**<br>தோட்டக்கலை இணை இயக்குநர் / தோட்டக்கலை துணை இயக்குநர் |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | பயன்களை பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| 3. **ஹைட்ரோபோனிக்ஸ் அலகுகள்**– 50 சதவீத மானியத்தில் 15,000/அலகு என்ற வீதத்தில் ஒரு நபருக்கு அதிகபட்சமாக ஒரு அலகிற்கு பின்னேற்பு மானியம் வழங்கப்படும்.<br>4. **செங்குத்து தோட்ட அலகுகள்** - 50 சதவீத மானியத்தில் 15,000/அலகு என்ற வீதத்தில் ஒரு நபருக்கு அதிகபட்சமாக ஒரு அலகிற்கு பின்னேற்பு மானியம் வழங்கப்படும்.<br>5. **காய்கறி விதை தளைகள் விநியோகம்** - 6 வகையான காய்கறி விதைகள் (தக்காளி, கத்தரி, மிளகாய், வெண்டை, கொத்தவரை மற்றும் கீரை வகைகள்) அடங்கிய தொகுப்பு 75 சதவீத மானியத்தில் தொகுப்பு ஒன்றிற்கு ரூ.45/- வீதம் ஒரு பயனாளிக்கு ஒரு தொகுப்பு மட்டும் வழங்கப்படும். | அனைத்து மாவட்டங்களில் செயல்படுத்தப்படும். | **கிராம அளவில்**<br>உதவி தோட்டக்கலை அலுவலர்<br>**வட்டார அளவில்**<br>தோட்டக்கலை உதவி இயக்குநர்/ தோட்டக்கலை அலுவலர் / துணை தோட்டக்கலை அலுவலர்<br>**மாவட்ட அளவில்**<br>தோட்டக்கலை இணை இயக்குநர் / தோட்டக்கலை துணை இயக்குநர் |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | பயன்களை பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| 6. **பழச்செடிகள் தொகுப்பு விநியோகம்** - 2 அல்லது 3 வகையான பழச்செடிகள் அடங்கிய தொகுப்பு (மா, கொய்யா, எலுமிச்சை, பப்பாளி) **75** சதவீத மானியத்தில் தொகுப்பு ஒன்றிற்கு ரூ.75/- வீதம் ஒரு பயனாளிக்கு ஒரு தொகுப்பு மட்டும் வழங்கப்படும். | அனைத்து மாவட்டங்களில் செயல்படுத்தப்படும் | **கிராம அளவில்** உதவி தோட்டக்கலை அலுவலர் **வட்டார அளவில்** தோட்டக்கலை உதவி இயக்குநர்/ தோட்டக்கலை அலுவலர் / துணை தோட்டக்கலை அலுவலர் **மாவட்ட அளவில்** தோட்டக்கலை இணை இயக்குநர் / தோட்டக்கலை துணை இயக்குநர் |
| **III. தளிர் கீரைகள் வளர்ப்பை ஊக்குவித்தல்** | | |
| 1. **தளிர் கீரைகள் வளர்ப்பை ஊக்குவித்தல்** - 12 வகையான விதைகள் அடங்கிய தொகுப்பு (சிவப்பு தண்டுக்கீரை, வெந்தயம், பச்சைப் பட்டாணி, கொண்டைக்கடலை, பச்சைப்பயறு, கொள்ளு, எள். கோதுமை, பாலக் கீரை, ஆளி விதைகள், | அனைத்து மாவட்டங்களில் செயல்படுத்தப்படும் | **கிராம அளவில்** உதவி தோட்டக்கலை அலுவலர் **வட்டார அளவில்** தோட்டக்கலை உதவி இயக்குநர்/ தோட்டக்கலை அலுவலர் / துணை தோட்டக்கலை அலுவலர் |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | பயன்களை பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| வெங்காயம், தண்டுக்கீரை) வளர்ப்பு தட்டுகள், தென்னை நார் கழிவு, நீர் தெளிப்பு கருவி மற்றும் வழிமுறை கையேடு அடங்கிய தொகுப்பு, 50 சதவீத மானியத்தில் தொகுப்பு ஒன்றிற்கு ரூ.600/- வீதம் ஒரு பயனாளிக்கு ஒரு தொகுப்பு மட்டும் வழங்கப்படும். | | <u>**மாவட்ட அளவில்**</u><br>தோட்டக்கலை இணை இயக்குநர் / தோட்டக்கலை துணை இயக்குநர் |
| **IV. தோட்டக்கலைப் பயிர்களில் ஊடுபயிர் சாகுபடி** | | |
| 1. **தென்னையில் வாழை ஊடுபயிர் சாகுபடி** – 50 சதவீத மானியம் எக்டருக்கு ரூ. 10,000/- வீதம் ஒரு பயனாளிக்கு அதிகபட்சமாக 2 எக்டர் வரை வழங்கப்படும். | சென்னை மற்றும் நீலகிரி தவிர தென்னை சாகுபடி செய்யும் அனைத்து மாவட்டங்கள் சிறு / குறு விவசாயிகள், பெண் விவசாயிகள், தாழ்த்தப்பட்ட / பழங்குடியின விவசாயிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். | <u>**கிராம அளவில்**</u><br>உதவி தோட்டக்கலை அலுவலர்<br><u>**வட்டார அளவில்**</u><br>தோட்டக்கலை உதவி இயக்குநர்/ தோட்டக்கலை அலுவலர் / துணை தோட்டக்கலை அலுவலர்<br><u>**மாவட்ட அளவில்**</u><br>தோட்டக்கலை இணை இயக்குநர் / தோட்டக்கலை துணை இயக்குநர் |
| 2. **தென்னந்தோப்புகளில் ஜாதிக்காய் ஊடுபயிர் சாகுபடி** – 50 சதவீத மானியம் எக்டருக்கு ரூ.10,000/- வீதம் ஒரு பயனாளிக்கு அதிகபட்சமாக 2 எக்டர் வரை வழங்கப்படும். | | |
| 3. **தென்னந்தோப்புகளில் செடிமிளகு ஊடுபயிர் சாகுபடி** – 50 சதவீத மானியம் எக்டருக்கு | | |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | பயன்களை பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| ரூ.10,000/- வீதம் ஒரு பயனாளிக்கு அதிகபட்சமாக 2 எக்டர் வரை வழங்கப்படும். | | |
| 4. **புதியதாக நடவு செய்த தென்னையில் காய்கறி/சுவைதாளித பயிர்கள் ஊடுபயிர் சாகுபடி** – 50 சதவீத மானியம் எக்டருக்கு ரூ.10,000/- வீதம் ஒரு பயனாளிக்கு அதிகபட்சமாக 2 எக்டர் வரை வழங்கப்படும். | | |
| **V. தோட்டக்கலைப் பயிர்களுக்கு தேவை அடிப்படையிலான திட்ட இனங்கள்** | | |
| 1. **இயற்கை இடுபொருள் உற்பத்தி மையம்** – 50 சதவீத மானியத்தில் ஒரு அலகிற்கு 50,000/- வீதம் அதிகபட்சம் ஒரு பயனாளிக்கு ஒரு அலகு வழங்கப்படும். | அனைத்து மாவட்டங்களும் சிறு / குறு விவசாயிகள் மற்றும் ஆதி திராவிடர் / பழங்குடியின/பெண் விவசாயிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். | **கிராம அளவில்** உதவி தோட்டக்கலை அலுவலர் **வட்டார அளவில்** தோட்டக்கலை உதவி இயக்குநர்/ தோட்டக்கலை அலுவலர் / துணை தோட்டக்கலை அலுவலர் **மாவட்ட அளவில்** தோட்டக்கலை இணை இயக்குநர் / தோட்டக்கலை துணை இயக்குநர். |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | பயன்களை பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| 2. **வெங்காய தோல் உரிக்கும் இயந்திரம்** – 50 சதவீத மானியத்தில் ஒரு அலகிற்கு 97,500/- வீதம் அதிகபட்சம் ஒரு பயனாளிக்கு ஒரு அலகு வழங்கப்படும். | நாமக்கல் மாவட்டம் | **கிராம அளவில்**<br>உதவி தோட்டக்கலை அலுவலர்<br>**வட்டார அளவில்**<br>தோட்டக்கலை உதவி இயக்குநர்/ தோட்டக்கலை அலுவலர் / துணை தோட்டக்கலை அலுவலர்<br>**மாவட்ட அளவில்**<br>தோட்டக்கலை இணை இயக்குநர் / தோட்டக்கலை துணை இயக்குநர். |
| 3. **வெங்காயத்தாள் வெட்டும் இயந்திரம்** – 50 சதவீத மானியத்தில் ஒரு அலகிற்கு 4,75,000/- வீதம் அதிகபட்சம் ஒரு பயனாளிக்கு ஒரு அலகு வழங்கப்படும். | நாமக்கல் மாவட்டம் | **கிராம அளவில்**<br>உதவி தோட்டக்கலை அலுவலர்<br>**வட்டார அளவில்**<br>தோட்டக்கலை உதவி இயக்குநர்/ தோட்டக்கலை அலுவலர் / துணை தோட்டக்கலை அலுவலர்<br>**மாவட்ட அளவில்**<br>தோட்டக்கலை இணை இயக்குநர் / தோட்டக்கலை துணை இயக்குநர் |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | பயன்களை பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| 4. **தரமான சாமந்தி உற்பத்திக்கான ஒளி மேலாண்மை** – 20 சதவீத மானியம் எக்டருக்கு ரூ.50,000/- வீதம் பின்னேற்பு மானியமாக ஒரு பயனாளிக்கு அதிகபட்சமாக 1 எக்டர் வரை வழங்கப்படும். | கிருஷ்ணகிரி மாவட்டம் | **<u>கிராம அளவில்</u>**<br>உதவி தோட்டக்கலை அலுவலர்<br>**<u>வட்டார அளவில்</u>**<br>தோட்டக்கலை உதவி இயக்குநர்/ தோட்டக்கலை அலுவலர் / துணை தோட்டக்கலை அலுவலர்<br>**<u>மாவட்ட அளவில்</u>**<br>தோட்டக்கலை இணை இயக்குநர் / தோட்டக்கலை துணை இயக்குநர் |
| 5. **ஒருங்கிணைந்த பூச்சி/நோய் மேலாண்மை - தென்னை சுருள் வெள்ளை ஈ** - மஞ்சள் ஒட்டுப்பொறி, ஒட்டுண்ணி மற்றும் இரை விழுங்கிகள் **50** சதவீத மானியம் எக்டருக்கு ரூ.1790/- வீதம் ஒரு பயனாளிக்கு அதிகபட்சமாக 2 எக்டர் வரை வழங்கப்படும். | சென்னை மற்றும் நீலகிரி தவிர தென்னை சாகுபடி செய்யும் அனைத்து மாவட்டங்கள்<br><br>சிறு / குறு விவசாயிகள், பெண் விவசாயிகள், தாழ்த்தப்பட்ட / பழங்குடியின விவசாயிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். | **<u>கிராம அளவில்</u>**<br>உதவி தோட்டக்கலை அலுவலர்<br>**<u>வட்டார அளவில்</u>**<br>தோட்டக்கலை உதவி இயக்குநர்/ தோட்டக்கலை அலுவலர் / துணை தோட்டக்கலை அலுவலர்<br>**<u>மாவட்ட அளவில்</u>**<br>தோட்டக்கலை இணை இயக்குநர் / தோட்டக்கலை துணை இயக்குநர் |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | பயன்களை பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| 6. **வாழைக்கு முட்டுக் கொடுத்தல்** – 50 சதவீத மானியம் எக்டருக்கு ரூ.25000/- வீதம் பின்னேற்பு மானியமாக ஒரு பயனாளிக்கு அதிகபட்சமாக 1 எக்டர் வரை வழங்கப்படும். | சென்னை மற்றும் நீலகிரி தவிர அனைத்து மாவட்டங்கள்<br><br>சிறு / குறு விவசாயிகள், பெண் விவசாயிகள், தாழ்த்தப்பட்ட / பழங்குடியின விவசாயிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். | **கிராம அளவில்**<br>உதவி தோட்டக்கலை அலுவலர்<br>**வட்டார அளவில்**<br>தோட்டக்கலை உதவி இயக்குநர்/ தோட்டக்கலை அலுவலர் / துணை தோட்டக்கலை அலுவலர்<br>**மாவட்ட அளவில்**<br>தோட்டக்கலை இணை இயக்குநர் / தோட்டக்கலை துணை இயக்குநர் |
| 7. **வெற்றிலையில் ஒருங்கிணைந்த உரம் மற்றும் பயிர் பாதுகாப்பு** - 50 சதவீத மானியம் எக்டருக்கு ரூ.10000/- வீதம் ஒரு பயனாளிக்கு அதிகபட்சமாக 2 எக்டர் வரை வழங்கப்படும். | சென்னை மற்றும் நீலகிரி தவிர வெற்றிலை சாகுபடி செய்யும் அனைத்து மாவட்டங்கள்<br><br>சிறு / குறு விவசாயிகள், பெண் விவசாயிகள், தாழ்த்தப்பட்ட / பழங்குடியின விவசாயிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். | **கிராம அளவில்**<br>உதவி தோட்டக்கலை அலுவலர்<br>**வட்டார அளவில்**<br>தோட்டக்கலை உதவி இயக்குநர்/ தோட்டக்கலை அலுவலர் / துணை தோட்டக்கலை அலுவலர்<br>**மாவட்ட அளவில்**<br>தோட்டக்கலை இணை இயக்குநர் / தோட்டக்கலை துணை இயக்குநர். |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | பயன்களை பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| 8. **தென்னையில் உற்பத்தித் திறனை அதிகரிக்க தென்னை டானிக் வழங்குதல்** – 75 சதவீத மானியம் எக்டருக்கு ரூ.1800/- வீதம் ஒரு பயனாளிக்கு அதிகபட்சமாக 2 எக்டர் வரை வழங்கப்படும். | சென்னை மற்றும் நீலகிரி தவிர தென்னை சாகுபடி செய்யும் அனைத்து மாவட்டங்கள் சிறு/ குறு விவசாயிகள், பெண் விவசாயிகள், தாழ்த்தப்பட்ட / பழங்குடியின விவசாயிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். | **கிராம அளவில்** உதவி தோட்டக்கலை அலுவலர் **வட்டார அளவில்** தோட்டக்கலை உதவி இயக்குநர்/ தோட்டக்கலை அலுவலர் / துணை தோட்டக்கலை அலுவலர் **மாவட்ட அளவில்** தோட்டக்கலை இணை இயக்குநர் / தோட்டக்கலை துணை இயக்குநர் |
| 9. **தென்னையில் வேர்வாடல் நோய் மற்றும் சுருள் வெள்ளை ஈ கட்டுப்படுத்த உயிரி கட்டுப்பாட்டுப் பொருட்கள் வழங்குதல்** 'அபெர்டோகிரைசா' என்ற இரைவிழுங்கிப் பூச்சிகள் மற்றும் 'கோகோகான்' நுண்ணுயிர் கலவை 75 சதவீத மானியத்தில் ஏக்கருக்கு ரூ.7400/- வீதம் ஒரு பயனாளிக்கு அதிகபட்சமாக 2 ஏக்கர் வரை வழங்கப்படும். | சென்னை மற்றும் நீலகிரி தவிர தென்னை சாகுபடி செய்யும் அனைத்து மாவட்டங்கள் சிறு / குறு விவசாயிகள், பெண் விவசாயிகள், தாழ்த்தப்பட்ட / பழங்குடியின விவசாயிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். | **கிராம அளவில்** உதவி தோட்டக்கலை அலுவலர் **வட்டார அளவில்** தோட்டக்கலை உதவி இயக்குநர்/ தோட்டக்கலை அலுவலர் / துணை தோட்டக்கலை அலுவலர் **மாவட்ட அளவில்** தோட்டக்கலை இணை இயக்குநர் / தோட்டக்கலை துணை இயக்குநர். |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | பயன்களை பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| **10. சமவெளிப் பகுதிகளில் புதிய ஆப்பிள் ரகங்களை அறிமுகப்படுத்துதல்**<br>KLD, HRMN – 99 போன்ற புதிய ஆப்பிள் இரக கன்றுகளை 100 சதவீத மானியத்தில் ரூ.300/செடி வீதம் ஒரு பயனாளிக்கு அதிகபட்சமாக 20 செடிகள் வரை வழங்கப்படும். | கிருஷ்ணகிரி, சேலம், திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, ஈரோடு, நீலகிரி, கோயமுத்தூர், திண்டுக்கல், தேனி, தென்காசி, திருநெல்வேலி, கன்னியாகுமரி, மற்றும் இதர மாவட்ட விவசாயிகள்<br>சிறு / குறு விவசாயிகள், பெண் விவசாயிகள், தாழ்த்தப்பட்ட / பழங்குடியின விவசாயிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். | **கிராம அளவில்**<br>உதவி தோட்டக்கலை அலுவலர்<br>**வட்டார அளவில்**<br>தோட்டக்கலை உதவி இயக்குநர்/ தோட்டக்கலை அலுவலர் / துணை தோட்டக்கலை அலுவலர்<br><br>**மாவட்ட அளவில்**<br>தோட்டக்கலை இணை இயக்குநர் / தோட்டக்கலை துணை இயக்குநர். |
| **11. தாய்லாந்து இனிப்பு புளி இரகத்தை அறிமுப்படுத்துதல்**<br>100 சதவீத மானியத்தில் ரூ.200/செடி வீதம் ஒரு பயனாளிக்கு அதிகபட்சமாக 20 செடிகள் வரை வழங்கப்படும். | சென்னை தவிர அனைத்து மாவட்டங்கள் சிறு / குறு விவசாயிகள், பெண் விவசாயிகள், தாழ்த்தப்பட்ட / பழங்குடியின விவசாயிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். | **கிராம அளவில்**<br>உதவி தோட்டக்கலை அலுவலர்<br>**வட்டார அளவில்**<br>தோட்டக்கலை உதவி இயக்குநர்/ தோட்டக்கலை அலுவலர் / துணை தோட்டக்கலை அலுவலர்<br>**மாவட்ட அளவில்**<br>தோட்டக்கலை இணை இயக்குநர் / தோட்டக்கலை துணை இயக்குநர். |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | பயன்களை பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| VI. முருங்கை ஏற்றுமதி மண்டலம் | | |
| 1. **அங்கக சாகுபடி ஊக்குவிப்பு** - மூன்றாம் ஆண்டு உதவித்தொகை எக்டர் ஒன்றுக்கு ரூ.3000/- வழங்கப்படும். | கரூர் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்கள். | **<u>கிராம அளவில்</u>** உதவி தோட்டக்கலை அலுவலர் **<u>வட்டார அளவில்</u>** தோட்டக்கலை உதவி இயக்குநர்/ தோட்டக்கலை அலுவலர் / துணை தோட்டக்கலை அலுவலர் **<u>மாவட்ட அளவில்</u>** தோட்டக்கலை இணை இயக்குநர் / தோட்டக்கலை துணை இயக்குநர். |
| 11. பனை பாதுகாப்பு இயக்கம் (PPM) | | |
| 1. **பனை விதை விநியோகம்** – 100 சதவீத மானியம் ஒரு பனை விதை ரூ. 3/- வீதம் பயனாளிக்கு (தனிநபர்) அதிகபட்சமாக 50 விதைகளும், பொது இடங்களில் தொண்டு நிறுவனங்கள்/ ஊராட்சி மன்றங்கள் மூலம் நடுவதற்கு அதிகபட்சமாக 100 விதைகளும் வழங்கப்படும். | அனைத்து மாவட்டங்களும் (நீலகிரி மற்றும் சென்னை தவிர). | **<u>கிராம அளவில்</u>** உதவி தோட்டக்கலை அலுவலர் **<u>வட்டார அளவில்</u>** தோட்டக்கலை உதவி இயக்குநர்/ தோட்டக்கலை அலுவலர் / துணை தோட்டக்கலை அலுவலர் **<u>மாவட்ட அளவில்</u>** தோட்டக்கலை இணை / துணை இயக்குநர் |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | பயன்களை பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| 2. **பனங்கன்றுகள் விநியோகம்** - பனங்கன்றுகள் அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்டு, விநியோகிக்கப்படும். 100 சதவீத மானியத்தில் ஒரு பனங்கன்று ரூ. 100/- வீதம் பயனாளிக்கு (தனிநபர்) அதிகபட்சமாக 15 பனங்கன்றுகளும், பொது இடங்களில் நடுவதற்கு அதிகபட்சமாக 30 பனங்கன்றுகளும் வழங்கப்படும். | அனைத்து மாவட்டங்களும் (நீலகிரி மற்றும் சென்னை தவிர). | **கிராம அளவில்**<br>உதவி தோட்டக்கலை அலுவலர்<br>**வட்டார அளவில்**<br>தோட்டக்கலை உதவி இயக்குநர்/ தோட்டக்கலை அலுவலர் / துணை தோட்டக்கலை அலுவலர்<br>**மாவட்ட அளவில்**<br>தோட்டக்கலை இணை இயக்குநர் / தோட்டக்கலை துணை இயக்குநர் |
| 3. **பனை மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிக்கும் கூடம் அமைத்தல்** - 50 சதவீத பின்னேற்பு மானியத்தில் ஒரு அலகிற்கு ரூ.50,000/- வீதம் மானியமாக அதிகபட்சமாக ஒருவருக்கு ஓர் அலகு வழங்கப்படும். | தூத்துக்குடி, விருதுநகர், திருநெல்வேலி, இராமநாதபுரம், கன்னியாகுமரி, தென்காசி மாவட்ட பனை மதிப்பு கூட்டும் தொழில் செய்பவர்கள். | |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | பயன்களை பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| **12. ஒருங்கிணைந்த தென்னை வளர்ச்சித் திட்டம்**<br>**தென்னை வளர்ச்சி வாரியத்தின் நிதி உதவி பெறும் திட்டங்கள்** | | |
| **1. தென்னந்தோப்புகளில் மறு நடவு மற்றும் புத்தாக்கம்**<br>**1.1. காய்ப்பு அற்ற, வயதான, பூச்சி மற்றும் நோய் தாக்கிய தென்னை மரங்களை வெட்டி அப்புறப்படுத்துதல்** - மரம் ஒன்றுக்கு ரூ.1,000/- வீதம் மரம் வெட்ட மற்றும் அப்புறப்படுத்த எக்டர் ஒன்றுக்கு அதிகபட்சமாக 32 மரங்களுக்கு மொத்தம் ரூ.32,000/- வரை மானியமாக வழங்கப்படும்.<br>**1.2 தென்னங்கன்றுகள் மறுநடவு செய்தல்** தென்னங்கன்றுகள் ஒன்றுக்கு 50% மானியத்தில் ரூ. 4500/- வீதம் எக்டர் ஒன்றுக்கு அதிகபட்சமாக 100 தென்னங்கன்றுகள் (ரூ. 45 / தென்னங்கன்று) வரை வழங்கப்படும். | தேர்வு செய்யப்பட்ட மாவட்டங்களில் உள்ள தென்னை விவசாயிகள். | <u>கிராம அளவில்</u><br>உதவி தோட்டக்கலை அலுவலர்<br><u>வட்டாரஅளவில்</u><br>தோட்டக்கலை உதவி இயக்குநர்/ தோட்டக்கலை அலுவலர் / துணை தோட்டக்கலை அலுவலர்<br><u>மாவட்ட அளவில்</u><br>தோட்டக்கலை இணை இயக்குநர் / தோட்டக்கலை துணை இயக்குநர். |

| **நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும்** | **பயன்களை பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும்** | **தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர்** |
|---|---|---|
| 1.3 **ஒருங்கிணைந்த மேலாண்மை மூலம் தென்னந்தோப்புகளை புத்தாக்கம் செய்தல்** ஆண்டு ஒன்றிற்கு எக்டருக்கு 25% மானியத்தில் ரூ.8,750/- வீதம் இரு ஆண்டுகளுக்கு மொத்தம் ரூ.17,500/- வரை அதிகபட்சமாக 1 எக்டருக்கு மானியம் வழங்கப்படும். | தேர்வு செய்யப்பட்ட மாவட்டங்களில் உள்ள தென்னை விவசாயிகள் | **கிராம அளவில்** உதவி தோட்டக்கலை அலுவலர் **வட்டார அளவில்** தோட்டக்கலை உதவி இயக்குநர்/ தோட்டக்கலை அலுவலர் / துணை தோட்டக்கலை அலுவலர் **மாவட்ட அளவில்** தோட்டக்கலை இணை இயக்குநர் / தோட்டக்கலை துணை இயக்குநர் |
| 2. **விவசாயிகளின் வயல்களில் செயல் விளக்கத்திடல் அமைத்தல் (இரண்டாம் வருடம்)** தென்னையில் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிக்க ஒருங்கிணைந்த பண்ணையம் அமைத்திட எக்டர் ஒன்றுக்கு ரூ.17,500/- வீதம் (ஒரு பயனாளருக்கு | தேர்வு செய்யப்பட்ட மாவட்டங்களில் உள்ள தென்னை விவசாயிகள். | **கிராம அளவில்** உதவி தோட்டக்கலை அலுவலர் **வட்டார அளவில்** தோட்டக்கலை உதவி இயக்குநர்/ தோட்டக்கலை அலுவலர் / துணை தோட்டக்கலை அலுவலர் |

| நலத்திட்டங்களின் இனங்களும், பயன்களும் | பயன்களை பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| அதிக பட்சம் ஒரு எக்டர் வரை) நிதி உதவி வழங்கப்படும்.<br>3. **தென்னை சார்ந்த சாகுபடி மூலம் உற்பத்தித் திறன் அதிகரித்தல்**<br>தென்னையில் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிக்க ஒருங்கிணைந்த பண்ணையம் அமைத்திட 100% மானியம் வழங்கப்படும். இது ஒரு எக்டருக்கு ரூ.42,000/- என ஒரு பயனாளருக்கு அதிகபட்சம் 2 ஹெக்டேர் வரை வரையறுக்கப்பட்டு, இரண்டு சமமான ஆண்டு தவணைகளாக வழங்கப்படும். | | **மாவட்ட அளவில்**<br>தோட்டக்கலை இணை இயக்குநர் / தோட்டக்கலை துணை இயக்குநர் |

# 4. வேளாண்மைப் பொறியியல் துறை

| **திட்டம் எண் : 1** | |
|---|---|
| திட்டத்தின் பெயர் | **பண்ணைக்குட்டைகளை வேளாண்மைப் பொறியியல் துறையின் இயந்திரங்களைக் கொண்டு தூர்வாருதல்** |
| நிதி ஆதாரம் | மாநில அரசுத் திட்டம் |
| திட்டப்பகுதி | அனைத்து மாவட்டங்கள் (சென்னை நீங்கலாக) |
| நோக்கங்கள் | ஏற்கனவே விவசாயிகளின் நிலங்களில் அமைக்கப்பட்டுள்ள பண்ணைக்குட்டைகளின் மழைநீர் சேமிப்புத் திறனை மேம்படுத்துதல் |
| செயல்படுத்தப்படும் பணிகள், மானியங்களும் சலுகைகளும் | வேளாண்மைப் பொறியியல் துறையின் இயந்திரங்களை பயன்படுத்தி பண்ணைக் குட்டைகளை தூர்வாரிட தனிநபர் விவசாயிகளுக்கு 75% மானியத்தில், ஒரு பண்ணைக் குட்டைக்கு அதிகபட்சமாக ரூ.15,000/- மானியமாக வழங்குதல். |
| தகுதி | ஏற்கனவே பண்ணைக்குட்டை அமைத்துள்ள தனிநபர் விவசாயிகள் |
| திட்ட செயலாக்க கால நிர்ணயம் | நிதியாண்டிற்குள் செயல்படுத்தப்படும். |
| அணுக வேண்டிய அலுவலர் | **வட்டார அளவில்**<br>உதவிப் பொறியாளர் / இளநிலைப் பொறியாளர்,<br>வேளாண்மைப் பொறியியல் துறை.<br>**வருவாய்க் கோட்ட அளவில்**<br>உதவி செயற்பொறியாளர்,<br>வேளாண்மைப் பொறியியல் துறை.<br>**மாவட்ட அளவில்**<br>செயற்பொறியாளர்,<br>வேளாண்மைப் பொறியியல் துறை.<br>**மேலும் தொடர்புக்கு:**<br>**மின்னஞ்சல்**: aedcesolar@gmail.com, aedcewrm@gmail.com |

| **திட்டம் எண் : 2** | |
|---|---|
| திட்டத்தின் பெயர் | **அண்ணல் அம்பேத்கர் வேளாண் உதவித் திட்டம்** |
| நிதி ஆதாரம் | மாநில அரசுத் திட்டம் |
| திட்டப்பகுதி | தமிழ்நாடு முழுவதும் (சென்னை மற்றும் நீலகிரி நீங்கலாக) உள்ள மாவட்டங்கள். |
| நோக்கங்கள் | • புதிய நீர் ஆதாரங்களை உருவாக்குதல்.<br>• நிகர சாகுபடிப் பரப்பினை அதிகரித்தல். |
| செயல்படுத்தப்படும் பணிகள் | பாசன வசதி இல்லாத ஆதிதிராவிடர், பழங்குடியினர் விவசாயிகளின் நிலங்களில் நீர் ஆதாரங்களான ஆழ்துளை அல்லது குழாய்க் கிணறுகள் அமைத்து அவற்றிற்கு நீர் இறைக்கும் அமைப்பு ஏற்படுத்தித் தருதல். |
| மானியங்களும் சலுகைகளும் | 100% மானிய அடிப்படையில் அதிகபட்சமாக ரூ.8 இலட்சம். |
| தகுதி | திட்டப்பகுதியில் உள்ள நீர்ப்பாசன வசதி இல்லாத ஆதிதிராவிடர், பழங்குடியினர் விவசாயிகள். |
| திட்ட செயலாக்க கால நிர்ணயம் | நிதியாண்டிற்குள் செயல்படுத்தப்படும். |
| அணுக வேண்டிய அலுவலர் | **வட்டார அளவில்**<br>உதவிப் பொறியாளர் / இளநிலைப் பொறியாளர்,<br>வேளாண்மைப் பொறியியல் துறை.<br>**வருவாய்க் கோட்ட அளவில்**<br>உதவி செயற்பொறியாளர்,<br>வேளாண்மைப் பொறியியல் துறை.<br>**மாவட்ட அளவில்**<br>செயற்பொறியாளர்,<br>வேளாண்மைப் பொறியியல் துறை.<br>**மேலும் தொடர்புக்கு:**<br>**மின்னஞ்சல்**: aedcepmksy@gmail.com |

| **திட்டம் எண் : 3** | |
|---|---|
| திட்டத்தின் பெயர் | **ஆயிரம் ஏக்கர் பாசனப் பரப்பை உருவாக்கிட நீர் ஆதாரங்களை ஏற்படுத்துதல்** |
| நிதி ஆதாரம் | மாநில அரசுத் திட்டம் |
| திட்டப்பகுதி | மாநிலம் முழுவதும் உள்ள நிலத்தடி நீர் பாதுகாப்பான குறுவட்டங்கள் கொண்ட மாவட்டங்கள். |
| நோக்கங்கள் | புதிய நீர் ஆதாரங்களை உருவாக்கி, நிகர சாகுபடி பரப்பினை அதிகரித்தல். |
| செயல்படுத்தப்படும் பணிகள் | நிலத்தடி நீர் பாதுகாப்பான குறுவட்டங்களிலுள்ள நீர்ப்பாசன வசதியில்லாத தனிநபர் விவசாயிகளின் நிலங்களில், ஆழ்துளை அல்லது குழாய்க் கிணறுகள் அமைத்தல். மேலும், நடைமுறையில் உள்ள சூரிய சக்தி பம்புசெட்டுகள் திட்டம் மற்றும் நுண்ணீர்ப் பாசனத் திட்டங்களுடன் ஒருங்கிணைத்து செயல்படுத்துதல். மேலும், ஆழ்துளை அல்லது குழாய்க்கிணறு அமைத்த பின்பு, விவசாயி நீர் இறைக்கும் அமைப்பினை தனது சொந்த விருப்பத்தின் பேரில் மின் இணைப்பு மூலமாகவோ அல்லது ஆயில் என்ஜினைக் கொண்டோ அமைத்துக்கொள்ளலாம். |
| மானியங்களும் சலுகைகளும் | இதரப் பிரிவைச் சார்ந்த சிறு, குறு மற்றும் பெண் விவசாயிகளுக்கு 60% அல்லது அதிகபட்சமாக ரூ.1.20 இலட்சம் மானியம் மற்றும் இதர விவசாயிகளுக்கு 50% அல்லது அதிகபட்சமாக ரூ.1.00 இலட்சம் மானியம். |
| தகுதி | திட்டப்பகுதியில் உள்ள நீர்ப்பாசன வசதியில்லாத இதரப் பிரிவைச் சார்ந்த தனிநபர் விவசாயிகள். |
| திட்ட செயலாக்க கால நிர்ணயம் | நிதியாண்டிற்குள் செயல்படுத்தப்படும். |
| அணுக வேண்டிய அலுவலர் | **வட்டார அளவில்**<br>உதவிப் பொறியாளர் / இளநிலைப் பொறியாளர்,<br>வேளாண்மைப் பொறியியல் துறை.<br>**வருவாய்க் கோட்ட அளவில்**<br>உதவி செயற்பொறியாளர்,<br>வேளாண்மைப் பொறியியல் துறை.<br>**மாவட்ட அளவில்**<br>செயற்பொறியாளர்,<br>வேளாண்மைப் பொறியியல் துறை.<br>**மேலும் தொடர்புக்கு:**<br>**மின்னஞ்சல்:** aedcepmksy@gmail.com |

| **திட்டம் எண் : 4** | |
|---|---|
| திட்டத்தின் பெயர் | **சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்** |
| நிதி ஆதாரம் | மாநில அரசுத் திட்டம் |
| திட்டப் பகுதி | • நீலகிரி, கோயம்புத்தூர், ஈரோடு, திருப்பூர், திண்டுக்கல், மதுரை, தேனி, விருதுநகர், திருநெல்வேலி, தென்காசி, கன்னியாகுமரி மாவட்டங்களின் மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதிகள், அதன் வனப்பகுதிக்கு அருகே உள்ள கிராமங்கள்.<br>• தருமபுரி, கிருஷ்ணகிரி, சேலம், நாமக்கல், ஈரோடு, கள்ளக்குறிச்சி, திண்டுக்கல், திருச்சிராப்பள்ளி, திருப்பத்தூர், வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் உள்ள கிழக்குத் தொடர்ச்சி மலைப்பகுதிகள், அதன் வனப்பகுதிக்கு அருகே உள்ள கிராமங்கள். |
| நோக்கங்கள் | ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண்மை அணுகுமுறை மூலம் சுற்றுச்சூழலை மறு சீரமைத்து, பாதுகாத்து, வேளாண் உற்பத்தியினைப் பெருக்கி, நீடித்த நிலையான வாழ்வாதாரத்தை உருவாக்குதல். |
| செயல்படுத்தப்படும் பணிகள் | • கம்பிவலை தடுப்பணைகள்<br>• தடுப்பணைகள்<br>• ஓடை பராமரிப்பு பணிகள்<br>• நிலச்சரிவு தடுப்பு பணிகள்<br>• புதிய நீர் ஆதாரங்களை உருவாக்கி பாசன வசதிகளை மேம்படுத்துதல்<br>• நீர் அறுவடை கட்டமைப்புக்களை புனரமைத்தல் |
| மானியங்களும் சலுகைகளும் | 1) சமுதாய பணிகள் – 100% மானியம்<br>2) தனிநபர் விவசாயிகளுக்கு<br>அ) பழங்குடியினருக்கு - 90% மானியம்<br>ஆ) ஆதி திராவிடருக்கு - 80% மானியம்<br>இ) இதர வகுப்பினருக்கு - 50% மானியம் |

| | |
|---|---|
| தகுதி | திட்டம் செயல்படுத்தப்படும் பகுதிகளில் உள்ள அனைத்து விவசாயிகள். |
| திட்ட செயலாக்க கால நிர்ணயம் | நிதியாண்டிற்குள் செயல்படுத்தப்படும். |
| அணுக வேண்டிய அலுவலர் | **வட்டார அளவில்**<br>இத்திட்டம் செயல்படுத்தப்படும் வட்டாரங்களில் உள்ள<br>உதவிப் பொறியாளர் / இளநிலைப் பொறியாளர்,<br>வேளாண்மைப் பொறியியல் துறை.<br>**வருவாய்க் கோட்ட அளவில்**<br>உதவி செயற் பொறியாளர்,<br>சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் (SADP),<br>கோயம்புத்தூர், மதுரை, திண்டுக்கல் மற்றும் திருநெல்வேலி.<br>உதவி செயற் பொறியாளர்,<br>உதகமண்டலம், கூடலூர், தருமபுரி, அரூர், கிருஷ்ணகிரி,<br>ஓசூர், சேலம், ஆத்தூர், நாமக்கல், கள்ளக்குறிச்சி, முசிறி,<br>திருப்பத்தூர், வேலூர், திருவண்ணாமலை<br>**மாவட்ட அளவில்**<br>செயற்பொறியாளர்,<br>உதகமண்டலம், தருமபுரி, கிருஷ்ணகிரி, சேலம், நாமக்கல்,<br>கள்ளக்குறிச்சி, திருச்சிராப்பள்ளி, திருப்பத்தூர் , வேலூர்,<br>திருவண்ணாமலை.<br>செயற்பொறியாளர்,<br>சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம், மதுரை.<br>**மேலும் தொடர்புக்கு:**<br>**மின்னஞ்சல் :** aedcepmksy@gmail.com |

| **திட்டம் எண் : 5** | |
|---|---|
| திட்டத்தின் பெயர் | **அணை புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டம்** |
| நிதி ஆதாரம் | மாநில அரசுத் திட்டம் - உலக வங்கி நிதி |
| திட்டப் பகுதி | தேனி மாவட்டத்தில் வைகை அணையின் தேர்ந்தெடுக்கப்பட்ட நீர்ப்பிடிப்பு பகுதிகள். |
| நோக்கங்கள் | நீர்த்தேக்கங்களின் நீர்பிடிப்புப் பகுதிகளிலிருந்து மழைக்காலங்களில் ஓடைகளின் வழியே அடித்துச் செல்லப்படும் வளம் மிக்க வண்டல் மண் ஆங்காங்கே தடுத்து நிறுத்தப்பட்டு பல்நோக்கு நீர்த்தேக்கங்களின் கொள்ளளவு குறைவது கட்டுப்படுத்தப்பட்டு, அணைகளின் நீர் சேமிக்கும் திறனை நிலைப்படுத்துதல். |
| செயல்படுத்தப்படும் பணிகள் | • தாவரப் போர்வையுடன் கூடிய வயல் வரப்புகள்<br>• ஓடை பராமரிப்பு பணிகள்<br>• கம்பிவலை தடுப்பணைகள்<br>• தடுப்பணைகள்<br>• வண்டல் படிவு கண்காணிப்பு நிலையங்கள் |
| மானியங்களும் சலுகைகளும் | அனைத்து பணிகளுக்கும் 100% மானியம். |
| தகுதி | திட்டம் செயல்படுத்தப்படும் பகுதிகளில் உள்ள அனைத்து விவசாயிகள். |
| திட்ட செயலாக்க கால நிர்ணயம் | நிதியாண்டிற்குள் செயல்படுத்தப்படும். |
| அணுக வேண்டிய அலுவலர் | **வட்டார அளவில்**<br>இத்திட்டம் செயல்படுத்தப்படும் வட்டாரங்களில் உள்ள உதவிப் பொறியாளர் / இளநிலைப் பொறியாளர், வேளாண்மைப் பொறியியல் துறை.<br>**வருவாய்க் கோட்ட அளவில்**<br>உதவி செயற் பொறியாளர்,<br>தேனி, உத்தமபாளையம்.<br>**மாவட்ட அளவில்**<br>செயற்பொறியாளர்,<br>தேனி.<br>மேலும் தொடர்புக்கு:<br>**மின்னஞ்சல்**: aedcepmksy@gmail.com |

| **திட்டம் எண் : 6** | |
|---|---|
| திட்டத்தின் பெயர் | **கடற்கரையோர தோட்டக்கலைத் திட்டம்** |
| நிதி ஆதாரம் | மாநில அரசுத் திட்டம் |
| திட்டப் பகுதி | மாநிலம் முழுவதும் உள்ள கடலோர மாவட்டங்கள். |
| நோக்கங்கள் | கடலோரப் பகுதிகளில் உவர்நீருக்கு மேலிருக்கும் நன்னீரினை பாசனத்திற்கு பயன்படுத்துதல். |
| செயல்படுத்தப்படும் பணிகள் | நன்னீர் சேமிப்புக் கிணறுகள் அமைத்து, சூரிய சக்தி பம்புசெட்டுகள் திட்டம் மற்றும் நுண்ணீர் பாசனத் திட்டங்களுடன் ஒருங்கிணைத்து செயல்படுத்துதல். |
| மானியங்களும் சலுகைகளும் | நன்னீர் சேமிப்புக் கிணறு அமைப்பதற்கு 75% மானியம் அல்லது அதிகபட்சமாக ரூ. 1.50 இலட்சம் இவற்றில் எது குறைவோ அத்தொகை சம்பந்தப்பட்ட விவசாயிகளுக்கு பின்னேற்பு மானியமாக வழங்கப்படும். |
| தகுதி | திட்டப்பகுதிகளில் உள்ள அனைத்து விவசாயிகள். |
| திட்டம் செயலாக்க கால நிர்ணயம் | நிதியாண்டிற்குள் செயல்படுத்தப்படும். |
| அணுக வேண்டிய அலுவலர் | **வட்டார அளவில்**<br>கடலோர வட்டாரங்களில் உள்ள<br>உதவிப் பொறியாளர் / இளநிலைப் பொறியாளர்,<br>வேளாண்மைப் பொறியியல் துறை.<br>**வருவாய்க் கோட்ட அளவில்**<br>கடலோர வருவாய் கோட்டங்களில் உள்ள உதவி செயற் பொறியாளர்,<br>வேளாண்மைப் பொறியியல் துறை.<br>**மாவட்ட அளவில்**<br>கடலோர மாவட்டங்களில் உள்ள<br>செயற் பொறியாளர்,<br>வேளாண்மைப் பொறியியல் துறை.<br>**மேலும் தொடர்புக்கு:**<br>**மின்னஞ்சல்**: aedcepmksy@gmail.com |

| **திட்டம் எண்: 7** | |
|---|---|
| திட்டத்தின் பெயர் | **வேளாண்மைப் பொறியியல் துறைக்குச் சொந்தமான இயந்திரங்களைப் பயன்படுத்தி மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை அமைத்தலும், பராமரித்தலும்** |
| நிதி ஆதாரம் | நீர்வடிப்பகுதி மேம்பாட்டு நிதி (WDF) |
| திட்டப் பகுதி | அனைத்து மாவட்டங்கள் (சென்னை, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, கன்னியாகுமரி மற்றும் நீலகிரி நீங்கலாக). |
| நோக்கங்கள் | • நிலத்தடி நீர் மட்டத்தினை அதிகரித்து நீர் பற்றாக்குறையினை எதிர்கொள்ளும் பொருட்டும், மழைநீரை சேமித்திடவும், சமுதாய குளங்கள் போன்ற புதிய மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் அமைத்தல்.<br>• ஏற்கனவே ஏற்படுத்தப்பட்டுள்ள நீர் சேகரிப்பு கட்டமைப்புகளின் கொள்ளளவினை அதிகரிக்கும் பொருட்டு பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளுதல். |
| செயல்படுத்தப்படும் பணிகள் | வேளாண்மைப் பொறியியல் துறையிலுள்ள இயந்திரங்கள் மூலம் புதிய மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் அமைத்தல் மற்றும் தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமையின் மூலம் ஏற்கனவே அமைக்கப்பட்ட நீர் சேகரிப்பு கட்டமைப்புகளை பராமரித்தல். |
| மானியங்களும் சலுகைகளும் | 100% மானியம் |
| தகுதி | தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு நீர்வடிப்பகுதிகளில் புதிய மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் அமைத்தல் மற்றும் மாவட்ட அளவிலான குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவரின் ஒப்புதல் பெறப்பட்ட நீர் சேகரிப்பு கட்டமைப்புகளில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல். |
| திட்ட செயலாக்க கால நிர்ணயம் | நிதியாண்டிற்குள் செயல்படுத்தப்படும். |
| அணுக வேண்டிய அலுவலர் | **வட்டார அளவில்**<br>உதவிப் பொறியாளர் / இளநிலைப் பொறியாளர்,<br>வேளாண்மைப் பொறியியல் துறை.<br>**வருவாய்க் கோட்ட அளவில்**<br>உதவி செயற் பொறியாளர்,<br>வேளாண்மைப் பொறியியல் துறை.<br>**மாவட்ட அளவில்**<br>செயற் பொறியாளர்,<br>வேளாண்மைப் பொறியியல் துறை.<br>**மேலும் தொடர்புக்கு:**<br>**மின்னஞ்சல்**: aedcewrm@gmail.com, aedcesolar@gmail.com |

| **திட்டம் எண் : 8** | |
|---|---|
| திட்டத்தின் பெயர் | **விவசாயிகளுக்கு மானியத்தில் மின்மோட்டார் பம்புசெட்டுகள் வழங்குதல்** |
| நிதி ஆதாரம் | பிரதம மந்திரியின் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் (PMRKVY) – ஒரு துளி நீரில் அதிக பயிர் - துணை நீர் மேலாண்மைத் திட்டம் - இதர செயல்பாடுகள் (ஒன்றிய அரசு – 60%, மாநில அரசு – 40%) |
| திட்டப் பகுதி | அனைத்து மாவட்டங்கள் (சென்னை நீங்கலாக) |
| நோக்கங்கள் | • மின்சார பயன்பாட்டுத் திறனை அதிகரித்தல்.<br>• அதிகமான பாசன நீரினை குறைந்த மின் பயன்பாட்டில் இறைத்தல். |
| செயல்படுத்தப்படும் பணிகள் | பழைய திறன் குறைந்த மின்மோட்டார் பம்புசெட்டுகளுக்கு பதிலாக புதிய 4 நட்சத்திர தரச்சான்றுடைய மின்மோட்டார் பம்புசெட்டுகள் வாங்குவதற்கும், புதியதாக அமைக்கப்படும் கிணறுகளுக்கு 4 நட்சத்திர தரச்சான்றுடைய மின்மோட்டார் பம்புசெட்டுகள் வாங்குவதற்கும் விவசாயிகளுக்கு மானியம் வழங்குதல். |
| மானியங்களும் சலுகைகளும் | மின்மோட்டார் பம்புசெட்டு வாங்கும் மொத்த விலையில் 50% அல்லது அதிகபட்சமாக ரூ.15,000/- இவற்றில் எது குறைவோ அத்தொகை விவசாயிகளுக்கு பின்னேற்பு மானியமாக வழங்கப்படும். |
| தகுதி | சொந்தமாக விவசாய நிலம் மற்றும் பாசனக் கிணறுக்கான மின் இணைப்பு வைத்திருக்கும் அனைத்து விவசாயிகள். |
| திட்டம் செயலாக்க கால நிர்ணயம் | நிதியாண்டிற்குள் செயல்படுத்தப்படும். |
| அணுக வேண்டிய அலுவலர் | **வட்டார அளவில்**<br>உதவிப் பொறியாளர் / இளநிலைப் பொறியாளர்,<br>வேளாண்மைப் பொறியியல் துறை.<br>**வருவாய்க் கோட்ட அளவில்**<br>உதவி செயற்பொறியாளர்,<br>வேளாண்மைப் பொறியியல் துறை.<br>**மாவட்ட அளவில்**<br>செயற்பொறியாளர்,<br>வேளாண்மைப் பொறியியல் துறை.<br>**மேலும் தொடர்புக்கு:**<br>**மின்னஞ்சல்:** aedcepmksy@gmail.com<br>**விண்ணப்பிக்க:** **https://tnhorticulture.tn.gov.in:8080**<br>**(MIMIS portal)** |

| திட்டம் எண் : 9 | |
|---|---|
| திட்டத்தின் பெயர் | **டெல்டா மாவட்டங்களில் 'சி' மற்றும் 'டி' பிரிவு வாய்க்கால்களை தூர் வாருதல்** |
| நிதி ஆதாரம் | மாநில அரசுத் திட்டம் |
| திட்டப் பகுதி | காவேரி, வெண்ணாறு, வெள்ளார் வடிநிலப்பகுதிகள் மற்றும் கல்லணை கால்வாய் பாசனப் பகுதிகளில் உள்ள தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, கடலூர், அரியலூர் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய ஏழு மாவட்டங்களில் உள்ள "சி" மற்றும் "டி" பிரிவு வாய்க்கால்கள். |
| நோக்கங்கள் | பாசன வாய்க்கால்களை தூர்வாரி, வயல் வரப்புகளைப் பலப்படுத்தி, பாசன நீரினை கடைமடை விவசாயிகளின் நிலங்களுக்கும் சென்றடைய செய்தல். |
| செயல்படுத்தப்படும் பணிகள் | "சி" மற்றும் "டி" பிரிவு பாசன வாய்க்கால்களில் உள்ள செடி, கொடிகளை அகற்றி தூர்வாரும் பணிகள். |
| மானியங்களும் சலுகைகளும் | 100% மானியம். |
| தகுதி | திட்டப் பகுதியிலுள்ள அனைத்து விவசாயிகள். |
| திட்டம் செயலாக்க கால நிர்ணயம் | நிதியாண்டிற்குள் செயல்படுத்தப்படும். |
| அணுக வேண்டிய அலுவலர் | **வட்டார அளவில்**<br>இத்திட்டம் செயல்படுத்தப்படும் வட்டாரங்களில் உள்ள உதவிப் பொறியாளர் / இளநிலைப் பொறியாளர், வேளாண்மைப் பொறியியல் துறை.<br>**வருவாய்க் கோட்ட அளவில்**<br>உதவி செயற்பொறியாளர்,<br>வேளாண்மைப் பொறியியல் துறை.<br>(தஞ்சாவூர், கும்பகோணம், பட்டுக்கோட்டை, திருவாரூர், மன்னார்குடி, நாகப்பட்டினம், மயிலாடுதுறை, அரியலூர், ஜெயங்கொண்டம், கடலூர், விருத்தாச்சலம், சிதம்பரம், திருச்சிராப்பள்ளி, லால்குடி மற்றும் முசிறி உபகோட்டங்கள்)<br>**மாவட்ட அளவில்**<br>செயற் பொறியாளர்,<br>வேளாண்மைப் பொறியியல் துறை.<br>(தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, கடலூர், அரியலூர் மற்றும் திருச்சிராப்பள்ளி)<br>**மேலும் தொடர்புக்கு:**<br>**மின்னஞ்சல்:** aedcepmksy@gmail.com |

| திட்டம் எண் : 10 | |
|---|---|
| திட்டத்தின் பெயர் | **வேளாண் இயந்திரமயமாக்குதல் - வேளாண் இயந்திரமயமாக்குதலுக்கான துணை இயக்கத் திட்டம்** |
| நிதி ஆதாரம் | ஒன்றிய அரசு - 60%, மாநில அரசு - 40% |
| திட்டப் பகுதி | அ) 1. தனிநபர் விவசாயிகளுக்கு வேளாண் இயந்திரங்கள், கருவிகள், மதிப்புக்கூட்டும் இயந்திரங்கள் மற்றும் சூரிய கூடார உலர்த்திகள் மானியத்தில் வழங்குதல் – அனைத்து மாவட்டங்கள் (சென்னை நீங்கலாக)<br><br>2. வன உரிமைச் சட்டத்தின் (FRA) கீழ் பட்டா பெற்றுள்ள மலைவாழ் விவசாயிகளுக்கு வேளாண் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் மானியத்தில் வழங்குதல் – தருமபுரி, திருப்பத்தூர், திண்டுக்கல்,நீலகிரி, சேலம், நாமக்கல், திருவண்ணாமலை, வேலூர், விழுப்புரம், கோயம்புத்தூர், கன்னியாகுமரி, தேனி, தென்காசி, கிருஷ்ணகிரி, ஈரோடு, கள்ளக்குறிச்சி, விருதுநகர், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, திருப்பூர் ஆகிய மாவட்டங்கள்.<br><br>ஆ) வட்டார அளவிலான, வேளாண் இயந்திரங்கள் வாடகை மையங்கள் மானியத்தில் அமைத்தல் – அனைத்து மாவட்டங்கள் (சென்னை நீங்கலாக)<br><br>அனைத்து<br><br>இ) கிராம அளவிலான வேளாண் இயந்திர வாடகை மையங்கள் மானியத்தில் அமைத்தல் – மாவட்டங்கள் (சென்னை, விழுப்புரம், திருவண்ணாமலை நீங்கலாக) |

| | |
|---|---|
| நோக்கங்கள் | • வேளாண் பணிகளை குறித்த காலத்தில் செவ்வனே செய்து அதிக மகசூல் பெற வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளை தனிநபர் விவசாயிகளுக்கு மானியத்தில் வழங்கி ஊக்குவித்தல்.<br>• விவசாயிகள் விளைவித்த விளைபொருட்களை பண்ணை அளவிலேயே உலர வைத்து மதிப்புக்கூட்டிட ஏதுவாக சூரிய கூடார உலர்த்திகள் மானியத்தில் அமைத்தல்.<br>• அறுவடைக்குப்பின் சந்தைப்படுத்தும் காலம் வரை ஏற்படும் இழப்பினை குறைத்தல் மற்றும் வேளாண் விளைபொருட்களை சேமித்து வைக்கும் காலத்தை நீட்டித்தல்.<br>• வேளாண் விளைபொருட்களை மதிப்புக்கூட்டி விற்பனைக்கேற்ற வகையில் சந்தைப்படுத்தி இலாபம் ஈட்டுதல்.<br>• வன உரிமைச் சட்டத்தின் கீழ் பட்டா பெற்ற மலைவாழ் விவசாயிகள் வாழ்வாதாரத்தை மேம்படுத்திட, நவீன வேளாண் உபகரணங்கள் மானியத்தில் வழங்கி ஊக்குவித்தல்.<br>• வேளாண் இயந்திரங்கள் பற்றாக்குறையினை குறைத்து சிறு, குறு விவசாயிகள் நவீன தொழில்நுட்பங்கள் கொண்ட உயர்மதிப்பு வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளை வாடகைக்கு பெற, வேளாண் இயந்திர வாடகை மையங்களை ஏற்படுத்துதல். |
| செயல்படுத்தப்படும் பணிகள் | • டிராக்டர், சுழற்கலப்பை, கொத்துக்கலப்பை, சுழலும் சட்டிப்பலுகு, வரப்பு செதுக்கி சேறு பூசும் கருவி, பவர்டில்லர், நெல் நாற்று நடவு செய்யும் இயந்திரம், விதை மற்றும் உரமிடும் கருவி, விசைக்களையெடுப்பான், டிரோன், விசைத் தெளிப்பான், புதர் அகற்றும் கருவி, தட்டை வெட்டும் கருவி, நெல் அறுவடை இயந்திரம், |

| | |
|---|---|
| | பல்வகைப் பயிர் கதிரடிக்கும் இயந்திரம், தென்னை ஓலை துகளாக்கும் கருவி, வைக்கோல் கட்டு கட்டும் இயந்திரம், குழி தோண்டும் கருவி, தேயிலை பறிக்கும் கருவி, நிலப்போர்வை அமைக்கும் கருவி, மஞ்சள் தோண்டும் கருவி, நடமாடும் நெல் உலர்த்தும் இயந்திரம், தொலைவிலிருந்து மின்சார மோட்டார் இயக்கும் கருவி போன்ற வேளாண் இயந்திரங்கள், கருவிகள் மற்றும் சூரிய கூடார உலர்த்திகள், மதிப்புக் கூட்டும் இயந்திரங்கள் மற்றும் வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் உருவாக்கப்பட்டு மேம்படுத்தப்பட்ட புதுமையான வேளாண் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களான எளிதில் நகர்த்தி எடுத்து செல்லக்கூடிய கால்நடை கொட்டகை, மோட்டார் மூலம் இயங்கும் எளிதில் நகர்த்தி செல்லக்கூடிய தானியம் சேகரிக்கும் இயந்திரம், என்ஜின் மூலம் இயங்கக்கூடிய கரும்பு கட்டுகளை லாரியில் ஏற்றும் இயந்திரம் போன்றவற்றினை தனிநபர் விவசாயிகள் வாங்குவதற்கு மானியம் வழங்குதல்.<br>• வட்டார மற்றும் கிராம அளவிலான வேளாண் இயந்திர வாடகை மையங்கள் மானியத்தில் அமைத்தல். |
| மானியங்களும் சலுகைகளும் | • வேளாண் இயந்திரங்கள், கருவிகள், மதிப்புக்கூட்டும் இயந்திரங்கள் வாங்குவதற்கும் மற்றும் சூரிய கூடார உலர்த்திகள் அமைப்பதற்கும் சிறு, குறு, ஆதி திராவிடர், பழங்குடியினர், பெண் விவசாயிகளுக்கு 50% அல்லது அரசால் நிர்ணயம் செய்யப்பட்ட அதிகபட்ச மானியத்தொகை இவற்றில் எது குறைவோ அத்தொகை மானியமாகவும், இதர விவசாயிகளுக்கு 40% அல்லது அரசால் நிர்ணயம் செய்யப்பட்ட அதிகபட்ச மானியத்தொகை இதில் எது குறைவோ அத்தொகையினை மானியமாக வழங்குதல்.<br>• ஆதிதிராவிடர், பழங்குடியினர் பிரிவைச் சார்ந்த சிறு, குறு |

| | |
|---|---|
| | விவசாயிகளுக்கு நடைமுறையிலுள்ள 50% மானியத்துடன் கூடுதலாக 20% மானியம் மாநில நிதியில் இருந்து சேர்த்து, மொத்தமாக 70% மானியம் வழங்குதல்.<br>• பொதுப் பிரிவைச் சார்ந்த சிறு, குறு விவசாயிகள் நெல் நாற்று நடவு செய்யும் இயந்திரங்கள், விசைக்களையெடுப்பான்கள் மற்றும் தட்டை வெட்டும் கருவிகள் ஆகியவற்றினை வாங்கிட நடைமுறையிலுள்ள 50% மானியத்துடன் கூடுதலாக 10% மானியம் மாநில நிதியில் இருந்து சேர்த்து, மொத்தமாக 60% மானியம் வழங்குதல்.<br>• வன உரிமைச் சட்டத்தின் கீழ் பட்டா பெற்ற மலைவாழ் விவசாயிகளுக்கு பவர் டில்லர்கள், விசைக் களையெடுப்பான்கள் மற்றும் புதர் அகற்றும் கருவிகளை வாங்கிட 90% மானியம் வழங்குதல்.<br>• ரூ.25 இலட்சம் வரையிலான வட்டார அளவிலான வேளாண் இயந்திர வாடகை மையம் நிறுவுவதற்கு 40% அதிகபட்சமாக ரூ.10 இலட்சம் மானியம் வழங்குதல்.<br>• ரூ.10 இலட்சம் வரையிலான கிராம அளவிலான வேளாண் இயந்திர வாடகை மையம் ஏற்படுத்திட 80% அதிகபட்சமாக ரூ.8 இலட்சம் மானியம் வழங்குதல்.<br>• வேளாண்மைப் பொறியியல் துறையால் அங்கீகரிக்கப்பட்ட வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் தயாரிக்கும் நிறுவனங்களிடமிருந்து பயனாளிகள் தங்களுக்கு தேவைப்படும் ஒப்புதல் மற்றும் அங்கீகாரம் வழங்கப்பட்ட வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளை தங்கள் சுய விருப்பத்தின்பேரில் தேர்வு செய்து மானியத்தில் வாங்கி பயன்பெறலாம். |
| தகுதி | • தனிநபர் விவசாயிகள் வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளை மானிய உதவியுடன் வாங்குவதற்கு உழவர் செயலி அல்லது இணையதளத்தின் மூலம் விண்ணப்பிக்கும் சொந்த நிலமுள்ள விவசாயிகள். |

| | |
|---|---|
| | • வேளாண் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை மானிய உதவியுடன் வாங்குவதற்கு - வன உரிமைச் சட்டத்தின் (FRA) கீழ் பட்டா பெற்ற அனைத்து மலைவாழ் விவசாயிகள்.<br>• வட்டார அளவில் வேளாண் இயந்திர வாடகை மையங்கள் நிறுவுவதற்கு - தொழில்முனைவோர்களான கிராமப்புர இளைஞர்கள் மற்றும் விவசாயிகள், மகளிர் சுய உதவிக் குழுக்கள் (DAY-NRLM), உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள், ஊராட்சி மற்றும் தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்கள்.<br>• கிராம அளவிலான வேளாண் இயந்திர வாடகை மையங்கள் அமைப்பதற்கு - மகளிர் சுய உதவிக் குழுக்கள் (DAY-NRLM), உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள், ஊராட்சி மற்றும் தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்கள், விவசாய கூட்டுறவு சங்கங்கள். |
| திட்ட செயலாக்க கால நிர்ணயம் | நிதியாண்டிற்குள் செயல்படுத்தப்படும். |
| அணுக வேண்டிய அலுவலர் | **வட்டார அளவில்**<br>உதவிப் பொறியாளர் / இளநிலைப் பொறியாளர்,<br>வேளாண்மைப் பொறியியல் துறை.<br>**வருவாய்க் கோட்ட அளவில்**<br>உதவி செயற் பொறியாளர்,<br>வேளாண்மைப் பொறியியல் துறை.<br>**மாவட்ட அளவில்**<br>செயற் பொறியாளர்,<br>வேளாண்மைப் பொறியியல் துறை.<br>**மேலும் தொடர்புக்கு:**<br>**மின்னஞ்சல்**: aedceam@gmail.com<br>**விண்ணப்பிக்க**: **https://mts.aed.tn.gov.in மற்றும் உழவர் செயலி** |

| **திட்டம் எண் : 11** | |
|---|---|
| திட்டத்தின் பெயர் | **பயிர் சாகுபடி மற்றும் மதிப்புக் கூட்டுதலுக்கான ஒருங்கிணைந்த வேளாண் இயந்திர வாடகை வணிக மையம்** |
| நிதி ஆதாரம் | மாநில அரசுத் திட்டம் |
| திட்டப் பகுதி | அனைத்து மாவட்டங்கள் ( சென்னை நீங்கலாக) |
| நோக்கங்கள் | • வேளாண்மையில் நிலவும் வேலையாட்கள் பற்றாக்குறையை சமாளிக்கும் வகையில், பயிர் சாகுபடி |

| | |
|---|---|
| | மற்றும் மதிப்புக் கூட்டுதல் பணிகளுக்குத் தேவையான வேளாண் இயந்திரங்களை ஒரே மையத்தின் கீழ் வாடகை அடிப்படையில் விவசாயிகளுக்கு வழங்குதல்.<br>• வேளாண் விளைபொருட்களுக்கு மதிப்புக் கூட்டி, விவசாயிகளின் வருவாயை அதிகரிப்பதற்கும், வேளாண் தொழில் முனைவோரை உருவாக்குவதற்கும் படித்த இளைஞர்களுக்கு வேளாண்மை சார்ந்த வேலை வாய்ப்பினை கிராமப்புறங்களில் உருவாக்கிடவும் ஒருங்கிணைந்த வேளாண் இயந்திர வாடகை வணிக மையங்களை ஏற்படுத்துதல். |
| செயல்படுத்தப்படும் பணிகள் | பயிர் சாகுபடி மற்றும் மதிப்புக் கூட்டுதலுக்குத் தேவையான வேளாண் இயந்திரங்களைக் கொண்ட ஒருங்கிணைந்த வேளாண் இயந்திர வாடகை வணிக மையங்கள் நிறுவுதல். |
| மானியங்களும் சலுகைகளும் | ரூ.25 இலட்சம் மற்றும் அதற்கு மேற்பட்ட திட்ட மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த வேளாண் இயந்திர வாடகை வணிக மையம் அமைப்பதற்கு மானியம் பின்வருமாறு வழங்கப்படும்;<br>• ஆதி திராவிடர், பழங்குடியினர், பெண் தொழில் முனைவோர் மற்றும் வேளாண் பொறியியலில் பட்டயம் அல்லது பட்டப்படிப்பு முடித்த இளைஞர்களுக்கு திட்ட மதிப்பீட்டில் 75% அல்லது அதிகபட்சமாக ரூ.18.75 இலட்சம் வரை மானியம் வழங்குதல்.<br>• இதர தொழில்முனைவோர்களுக்கு, திட்ட மதிப்பீட்டில் 50% அல்லது அதிகபட்சம் ரூ.12.50 இலட்சம் வரை மானியம் வழங்குதல்.<br>• இத்திட்டத்தின் கீழ் பயனாளி தொழில்முனைவோர் அறுவடை இயந்திரம் வாங்க முன்வரும் நேர்வுகளில் ஒரு அறுவடை இயந்திரத்திற்கான மானியம் ரூ.2.00 இலட்சம் மட்டுமே வழங்கப்படும். பயனாளி வகைக்குப் பொருந்தக்கூடிய மொத்த மானிய வரம்பிற்கு உட்பட்டு, இத்திட்டத்தில் அடங்கியுள்ள பிற வேளாண் இயந்திரங்கள், கருவிகள் மற்றும் அறுவடைக்குப் பிந்தைய மற்றும் மதிப்புக்கூட்டல் இயந்திரங்களை வாங்குவதற்கு மீதமுள்ள தகுதியான மானியத் தொகையினை பயன்படுத்திக்கொள்ளலாம். |

| | |
|---|---|
| தகுதி | • பயிர் சாகுபடி மற்றும் மதிப்புக் கூட்டுதலுக்கான ஒருங்கிணைந்த வேளாண் இயந்திர வாடகை வணிக மையம் அமைக்க விரும்பும் தொழில் முனைவோர், பதிவு செய்யப்பட்ட விவசாயிகள் சங்கங்கள் மற்றும் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் (FPOs).<br>• ஆதி திராவிடர், பழங்குடியினர், பெண் தொழில் முனைவோர் மற்றும் வேளாண் பொறியியலில் பட்டயம் அல்லது பட்டப்படிப்பு முடித்த இளைஞர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். |
| திட்ட செயலாக்க கால நிர்ணயம் | நிதியாண்டிற்குள் செயல்படுத்தப்படும் |
| அணுக வேண்டிய அலுவலர் | **வட்டார அளவில்**<br>உதவிப் பொறியாளர் / இளநிலைப் பொறியாளர்,<br>வேளாண்மைப் பொறியியல் துறை.<br>**வருவாய்க் கோட்ட அளவில்**<br>உதவி செயற் பொறியாளர்,<br>வேளாண்மைப் பொறியியல் துறை.<br>**மாவட்ட அளவில்**<br>செயற் பொறியாளர்,<br>வேளாண்மைப் பொறியியல் துறை.<br>**மேலும் தொடர்புக்கு:**<br>**மின்னஞ்சல்**: aedcesolar@gmail.com |

| **திட்டம் எண் : 12** | |
|---|---|
| திட்டத்தின் பெயர் | **வேளாண் இயந்திரங்கள் பழுது நீக்கிப் பராமரிக்கும் மையங்கள் அமைத்தல்** |
| நிதி ஆதாரம் | பிரதம மந்திரியின் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம்<br>ஒன்றிய அரசு - 60%, மாநில அரசு - 40% |
| திட்டப் பகுதி | அனைத்து மாவட்டங்கள் (சென்னை நீங்கலாக) |
| நோக்கங்கள் | • வேளாண் இயந்திரங்கள் மற்றும் சூரிய சக்தி பம்புசெட்டுகளை கிராம அளவில், பழுது நீக்கிப் பராமரித்தல்.<br>• விவசாயிகள் வேளாண் பணிகளை குறித்த காலத்தில் மேற்கொண்டு நிகர வருமானத்தை அதிகரித்தல்.<br>• கிராமப்புர இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பினை உருவாக்கி அவர்களுக்கு நிலையான வருமானத்திற்கு வழிவகுத்தல். |

| | |
|---|---|
| செயல்படுத்தப்படும் பணிகள் | வேளாண் இயந்திரங்கள் மற்றும் சூரிய சக்தியால் இயங்கும் பம்புசெட்டுகளைப் பழுது நீக்கி பராமரிக்கும் மையங்கள் கிராம அளவில் அமைத்தல். |
| மானியங்களும் சலுகைகளும் | கிராமப்புர இளைஞர்கள், தொழில்முனைவோர்களுக்கு ரூ.15 இலட்சம் மதிப்பிலான வேளாண் இயந்திரங்கள் பழுது நீக்கிப் பராமரிக்கும் மையங்கள் அமைக்க 50% அல்லது அதிகபட்சமாக ரூ.7.50 இலட்சம் மானியம் வழங்குதல். |
| தகுதி | • தொழில்முனைவோர்கள் மற்றும் கிராமப்புர இளைஞர்கள்.<br>• வேளாண்மைப் பொறியியல் துறையின் அரசு இயந்திரக் கலப்பை பணிமனைகளில் நடத்தப்படும் வேளாண் இயந்திரங்கள் இயக்கம், பழுது நீக்கம் மற்றும் பராமரிப்பு பயிற்சி சான்றிதழ் பெற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். |
| திட்ட செயலாக்க கால நிர்ணயம் | நிதியாண்டிற்குள் செயல்படுத்தப்படும். |
| அணுக வேண்டிய அலுவலர் | **வட்டார அளவில்**<br>உதவிப் பொறியாளர் / இளநிலைப் பொறியாளர்,<br>வேளாண்மைப் பொறியியல் துறை.<br>**வருவாய்க் கோட்ட அளவில்**<br>உதவி செயற் பொறியாளர்,<br>வேளாண்மைப் பொறியியல் துறை.<br>**மாவட்ட அளவில்**<br>செயற் பொறியாளர்,<br>வேளாண்மைப் பொறியியல் துறை.<br>**மேலும் தொடர்புக்கு:**<br>**மின்னஞ்சல்:** aedceam@gmail.com |

| **திட்டம் எண் : 13** | |
|---|---|
| திட்டத்தின் பெயர் | **பயிர் சாகுபடியில் தொடக்கம் முதல் இறுதிவரை இயந்திரமயமாக்கம்** |
| நிதி ஆதாரம் | மாநில அரசுத் திட்டம் |
| திட்டப் பகுதி | அனைத்து மாவட்டங்கள் (சென்னை மற்றும் நீலகிரி நீங்கலாக) |
| நோக்கங்கள் | • வேளாண் பயிர் சாகுபடியில் மேற்கொள்ளப்படும் உழவு முதல் பயிர்க் கழிவு மேலாண்மை வரையிலான வேளாண் பணிகளில் இயந்திரங்களை ஈடுபடுத்தி விவசாயிகளிடையே இயந்திரமயமாக்குதலினை ஊக்குவித்தல்.<br>• விவசாயிகளிடையே வேளாண் இயந்திரங்கள் பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்துதல்.<br>• வேளாண் பணிகளில் இயந்திரமயமாக்குதலில் வேளாண் தொழில்நுட்ப தொழில்முனைவோர்களின் பங்களிப்பினை அதிகப்படுத்துதல். |
| செயல்படுத்தப்படும் பணிகள் | • மக்காச்சோளம், நிலக்கடலை, உளுந்து மற்றும் தென்னை சாகுபடியில் அனைத்து வேளாண் பணிகளிலும் தொடக்கம் முதல் இறுதிவரை இயந்திரமயமாக்குதலை வேளாண் தொழில்நுட்ப தொழில்முனைவோர் மூலம் செயல்படுத்துதல்.<br>• உழவு முதல் பயிர்க்கழிவு மேலாண்மை வரையிலான இயந்திரங்களின் விவரங்கள் மற்றும் அதன் பயன்பாடு ஆகியவற்றினை பார்த்து, புரிந்து கொள்ளும் வகையில் வெவ்வேறு இடங்களில், விவசாயிகளின் நிலங்களில் தொடக்கம் முதல் இறுதிவரை இயந்திரமயமாக்குதலை செயல்படுத்துதல்.<br>• தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள விவசாயிகள் தொடக்கம் முதல் இறுதிவரை இயந்திரமயமாக்குதலை நேரில் கண்டு பயனடையும் வகையில் செயல் விளக்கங்கள் காண்பித்தல். |
| சலுகைகள் | • இத்திட்டத்தின்கீழ், தேர்ந்தெடுக்கப்படும் விவசாயிகளின் நிலத்தில் அதிகபட்சமாக ஒரு ஏக்கர் வரை செயல்விளக்கத் திடல்கள் அமைத்து வேளாண் இயந்திரங்கள் மூலம் மேற்கொள்ளப்படும் பணிகள் 100% மானியத்தில் செயல்படுத்தப்படும்.<br>• அனைத்து விவசாயிகளும் எவ்வித கட்டணமுமின்றி செயல் விளக்கங்களில் கலந்து கொண்டு பயன்பெற இயலும். |
| தகுதி | அனைத்து விவசாயிகள். |

| | |
|---|---|
| அணுக வேண்டிய அலுவலர் | **வட்டார அளவில்**<br>உதவிப் பொறியாளர் / இளநிலைப் பொறியாளர்,<br>வேளாண்மைப் பொறியியல் துறை.<br>**வருவாய்க் கோட்ட அளவில்**<br>உதவி செயற் பொறியாளர்,<br>வேளாண்மைப் பொறியியல் துறை.<br>**மாவட்ட அளவில்**<br>செயற் பொறியாளர்,<br>வேளாண்மைப் பொறியியல் துறை.<br>**மேலும் தொடர்புக்கு:**<br>**மின்னஞ்சல்**: aedceldmi@gmail.com |

| **திட்டம் எண் : 14** | |
|---|---|
| திட்டத்தின் பெயர் | **நவீன வேளாண் இயந்திரங்கள், கருவிகள் குறித்த மாபெரும் கண்காட்சி** |
| நிதி ஆதாரம் | நிதி ஒதுக்கீடு இன்றி செயல்படுத்துதல் |
| திட்டப் பகுதி | தஞ்சாவூர் மாவட்டம் |
| நோக்கங்கள் | பல்வேறு பயிர்கள் மற்றும் வேளாண் பணிகளுக்கு ஏற்ற நவீன மற்றும் புதுமையான வேளாண் இயந்திரங்கள், கருவிகள் மற்றும் உபகரணங்கள் பற்றிய விழிப்புணர்வினை விவசாயிகளுக்கு ஏற்படுத்துதல். |
| செயல்படுத்தப்படும் பணிகள் | புதிய, நவீன வேளாண் இயந்திரங்கள், கருவிகள் மற்றும் உபகரணங்களை விவசாயிகளுக்கு காட்சிப்படுத்துதல். |
| சலுகைகள் | அனைத்து விவசாயிகளும் எவ்வித கட்டணமுமின்றி இக்கண்காட்சியில் கலந்து கொண்டு பயன்பெறலாம். |
| அணுக வேண்டிய அலுவலர் | **மாவட்ட அளவில்**<br>செயற் பொறியாளர்,<br>வேளாண்மைப் பொறியியல் துறை, தஞ்சாவூர் மாவட்டம்.<br>**மாநில அளவில்**<br>கண்காணிப்புப் பொறியாளர் - நில மேம்பாடு,<br>தலைமைப் பொறியாளர் அலுவலகம்,<br>வேளாண்மைப் பொறியியல் துறை, சென்னை.<br>**மேலும் தொடர்புக்கு:**<br>**மின்னஞ்சல்** : aedceldmi@gmail.com |

| **திட்டம் எண் : 15** | |
|---|---|
| திட்டத்தின் பெயர் | **டிராக்டர், அறுவடை இயந்திரம், பிற வேளாண் இயந்திரங்கள் மற்றும் மண் அள்ளும் இயந்திரம் இயக்குவதற்கான திறன் மேம்பாட்டு பயிற்சி** |
| நிதி ஆதாரம் | பிரதம மந்திரியின் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்ட நிதி<br>ஒன்றிய அரசு – 60%, மாநில அரசு – 40% |
| பயிற்சி வளாகம் | வேளாண்மைப் பொறியியல் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள வேலூர், திருச்சிராப்பள்ளி, திருவாரூர், கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி மற்றும் சேலம் ஆகிய ஏழு இடங்களிலுள்ள அரசு இயந்திரக் கலப்பை பணிமனைகள். |
| நோக்கங்கள் | • வேளாண் இயந்திரங்களை இயக்கவும் பழுது நீக்கி பராமரிக்கவும் திறன் வாய்ந்த கிராமப்புர இளைஞர்களை உருவாக்குதல்.<br>• விளைநிலங்களிலேயே வேளாண் இயந்திரங்களை பழுது நீக்கி பராமரித்தல்.<br>• கிராமப்புர இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பினை உருவாக்குதல். |
| பயிற்சி விவரங்கள் | • டிராக்டர், மண் அள்ளும் இயந்திரம் மற்றும் அறுவடை இயந்திரம் ஓட்டுநர் பயிற்சி.<br>• வேளாண் இயந்திரங்கள் இயக்கம், பழுது நீக்கம் மற்றும் பராமரிப்பு தொடர்பான பயிற்சி. |
| சலுகைகள் | கட்டணமில்லா பயிற்சி |
| தகுதி | வயது வரம்பு- 18 வயது முதல் 35 வயது வரை. |
| திட்ட செயலாக்க கால நிர்ணயம் | நிதியாண்டிற்குள் செயல்படுத்தப்படும். |
| அணுக வேண்டிய அலுவலர் | **வட்டார அளவில்**<br>உதவிப் பொறியாளர் / இளநிலைப் பொறியாளர்,<br>வேளாண்மைப் பொறியியல் துறை.<br>**வருவாய்க் கோட்ட அளவில்**<br>உதவி செயற் பொறியாளர்,<br>வேளாண்மைப் பொறியியல் துறை.<br>மாவட்ட அளவில்<br>**செயற் பொறியாளர்,**<br>வேளாண்மைப் பொறியியல் துறை.<br>**மேலும் தொடர்புக்கு:**<br>**மின்னஞ்சல்**: aedcewrm@gmail.com, aedcesolar@gmail.com<br>**விண்ணப்பிக்க**: **https://candidate.tnskill.tn.gov.in/skillwallet/** |

| **திட்டம் எண் : 16** | |
|---|---|
| திட்டத்தின் பெயர் | **"வெற்றி வான்மகள்" திட்டம்** |
| நிதி ஆதாரம் | மாநில அரசுத் திட்டம் |
| திட்டப் பகுதி | அனைத்து மாவட்டங்கள் ( சென்னை நீங்கலாக) |
| நோக்கங்கள் | • வேளாண் ட்ரோன் இயக்குவதில் திறன்மிக்க மனிதவளத்தை உருவாக்குதல்.<br>• விவசாயத்தில் நவீன தொழில்நுட்பங்களின் பயன்பாட்டை ஊக்குவித்தல்.<br>• இடுபொருள் பயன்பாட்டுத் திறனை மேம்படுத்துதல்.<br>• கிராமப்புர இளைஞர்கள் மற்றும் மகளிருக்கு சுயவேலை வாய்ப்புகளை உருவாக்குதல். |
| செயல்படுத்தப்படும் பணிகள் | • வேளாண்மைப் பொறியியல் துறையின் ஒருங்கிணைப்புடன், கோயம்புத்தூரிலுள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் தொலைநிலை விமான பயிற்சி நிறுவனத்தில் (Remote Pilot Training Organization), 100 மகளிர் உட்பட 500 நபர்களுக்கு வேளாண் ட்ரோன் இயக்கப் பயிற்சி வழங்குதல்.<br>• வேளாண் ட்ரோன் இயக்கப் பயிற்சியின் மூலம் பயிற்சி பெற்ற 50 மகளிருக்கு ட்ரோன்கள் மானியத்தில் வழங்குதல். |
| மானியங்களும் சலுகைகளும் | • வேளாண் ட்ரோன் இயக்கப் பயிற்சி கட்டணமின்றி வழங்கப்படும்.<br>• வேளாண் ட்ரோன் இயக்கப் பயிற்சியின் மூலம் பயிற்சி பெற்ற மகளிருக்கு ட்ரோன் வாங்குவதற்கு அதிகபட்சம் 50% மானியம் அல்லது ரூ.5 இலட்சம் இவற்றில் எது குறைவோ அத்தொகை மானியமாக வழங்கப்படும். |
| தகுதி | • 18 வயதிற்கு மேற்பட்ட மற்றும் 65 வயதிற்கு உட்பட்ட வேளாண் ட்ரோன் இயக்க பயிற்சி பெற விரும்பும் நபர்கள்.<br>• குறைந்தபட்ச கல்வித்தகுதி 10 ஆம் வகுப்பு தேர்ச்சி.<br>• ட்ரோன் வாங்குவதற்கு - வேளாண் ட்ரோன் இயக்கப் பயிற்சியின் மூலம் பயிற்சி பெற்ற மகளிர். |
| திட்ட செயலாக்க கால நிர்ணயம் | நிதியாண்டிற்குள் செயல்படுத்தப்படும் |

| | |
|---|---|
| அணுக வேண்டிய அலுவலர் | **வட்டார அளவில்**<br>உதவிப் பொறியாளர் / இளநிலைப் பொறியாளர்,<br>வேளாண்மைப் பொறியியல் துறை.<br>**வருவாய்க் கோட்ட அளவில்**<br>உதவி செயற் பொறியாளர்,<br>வேளாண்மைப் பொறியியல் துறை.<br>**மாவட்ட அளவில்**<br>செயற் பொறியாளர்,<br>வேளாண்மைப் பொறியியல் துறை.<br>**மேலும் தொடர்புக்கு:**<br>**மின்னஞ்சல்**: aedcesolar@gmail.com, aedcewrm@gmail.com |

| **திட்டம் எண்: 17** | |
|---|---|
| திட்டத்தின் பெயர் | **நில மேம்பாட்டிற்கான வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளை உழவர் செயலியில் உள்ள இ-வாடகை 2.0 தளத்தின் மூலம் வாடகைக்கு வழங்குதல்** |
| நிதி ஆதாரம் | மாநில அரசுத் திட்டம் |
| திட்டப்பகுதி | அனைத்து மாவட்டங்கள் (சென்னை நீங்கலாக) |
| நோக்கங்கள் | • விவசாய பணிகளை எளிதாக மேற்கொள்ளும் பொருட்டு நிலம் சமன்படுத்துதல், வடிவமைத்தல் போன்ற பணிகளை செயல்படுத்தி, விவசாயம் செய்வதற்கான நிலப்பரப்பை அதிகப்படுத்தி, குறைந்த செலவில் வேளாண் உற்பத்தியை அதிகரித்தல்.<br>• வேளாண் பணிகளில் வேளாண் இயந்திரங்களை பயன்படுத்தி உரிய நேரத்தில் சாகுபடி பணிகளை மேற்கொண்டு வேலையாட்கள் பற்றாக்குறையினை களைந்து, சாகுபடி செலவினை குறைக்க விவசாயிகளுக்கு உதவுதல். |
| செயல்படுத்தப்படும் பணிகள் | • நிலம் வடிவமைத்தல்.<br>• நிலம் சமன் செய்தல்.<br>• உழுதல், சேறடித்தல், விதைத்தல், களை எடுத்தல், அறுவடை செய்தல், கதிரடித்தல் மற்றும் பயிர்க் கழிவு மேலாண்மை. |

| | |
|---|---|
| மானியங்களும் சலுகைகளும் | மேற்குறிப்பிட்ட பணிகளை மேற்கொள்ள விவசாயிகளுக்கு அரசு நிர்ணயித்த குறைந்த வாடகையில் வேளாண்மைப் பொறியியல் துறையின் இயந்திரங்களை வழங்குதல். |
| தகுதி | வாடகை முன்பணம் செலுத்தும் அனைத்து விவசாயிகளுக்கும் முன்னுரிமை அடிப்படையில் இயந்திரங்கள் வழங்குதல். |
| ஆன்லைன் மூலம் பதிவு செய்யும் வசதி | விவசாயிகள் வேளாண்மைப் பொறியியல் துறை அலுவலகங்களுக்கு செல்லாமல் தாங்கள் இருக்கும் இடத்திலிருந்தே உழவர் செயலியில் உள்ள இ-வாடகை 2.0 தளம் மூலம் வேளாண்மைப் பொறியியல் துறையின் வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளை முன்பதிவு செய்து கொள்ளலாம். மேலும், தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்க வேளாண் இயந்திரங்கள், கருவிகள் மற்றும் தனியாருக்குச் சொந்தமான வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளை அவர்களின் வாடகை நிர்ணயத்திற்கு உட்பட்டு விவசாயிகள் எளிதில் வாடகைக்குப் பெற்று பயன்பெறும் வகையில் இ-வாடகை 2.0 தளத்தில் வசதிகள் செய்யப்பட்டுள்ளது.<br>**விண்ணப்பிக்க: உழவர் செயலி**<br>(https://play.google.com/store/apps/details?id=agri.tnagri) |
| அணுக வேண்டிய அலுவலர் | **வட்டார அளவில்**<br>உதவிப் பொறியாளர் / இளநிலைப் பொறியாளர்,<br>வேளாண்மைப் பொறியியல் துறை.<br>**வருவாய்க் கோட்ட அளவில்**<br>உதவி செயற் பொறியாளர்,<br>வேளாண்மைப் பொறியியல் துறை.<br>**மாவட்ட அளவில்**<br>செயற் பொறியாளர்,<br>வேளாண்மைப் பொறியியல் துறை.<br>**மேலும் தொடர்புக்கு:**<br>**மின்னஞ்சல்**: aedceldmi@gmail.com |

## நில மேம்பாட்டிற்கான இயந்திரங்களின் வாடகை விவரம்

| வ. எண். | இயந்திரங்களின் பெயர் | வாடகை விவரம் டீசல் உள்பட |
|---|---|---|
| 1 | மண் தள்ளும் இயந்திரம் (Bull Dozer) | ரூ.1,230/- மணிக்கு |
| 2 | டிராக்டர் (Tractor) | ரூ. 500/- மணிக்கு |
| 3 | சிறு டிராக்டர் (Mini Tractor) | ரூ.460/- மணிக்கு |
| 4 | சக்கர வகை நெல் அறுவடை இயந்திரம் (Paddy Combine Harvester – Wheel Type) | ரூ.1,160/- மணிக்கு |
| 5 | டிராக் வகை நெல் அறுவடை இயந்திரம் (Paddy Combine Harvester – Track Type) | ரூ.1,880/- மணிக்கு |
| 6 | சக்கர வகை மண் அள்ளும் இயந்திரம் (Backhoe with Front end loader) | ரூ.890/- மணிக்கு |
| 7 | சக்கர வகை சிறிய மண் அள்ளும் இயந்திரம் (Mini Backhoe with Front end loader) | ரூ.650/- மணிக்கு |
| 8 | டிராக் வகை மண் அள்ளும் இயந்திரம் (Crawler Excavator) | ரூ.1,910/- மணிக்கு |
| 9 | வாகனத்துடன் இயங்கக்கூடிய தேங்காய் பறிக்கும் இயந்திரம் (Truck Operated Coconut Hoist) | ரூ.450/- மணிக்கு |
| 10 | கரும்பு அறுவடை செய்யும் இயந்திரம் மற்றும் இன்ஃபீல்டர்கள் (Sugarcane Harvester with infielders) | ரூ.5,120/- மணிக்கு |
| 11 | கனரக மரம் அறுக்கும் கருவி (Heavy duty Chain saw) | ரூ.85/- மணிக்கு (எரிபொருள் மற்றும் ஆட்கூலி |
| 12 | டிராக்டர்களுக்கான இணைப்புக் கருவிகள் (Tractor operated implements) | ரூ.500/- மணிக்கு டிராக்டருடன் |
| 13 | டிராக்டரால் இயங்கக்கூடிய நீர் இறைக்கும் பம்புகள் (Tractor operated pumpsets) | ரூ.500/- மணிக்கு டிராக்டருடன் |

| வ. எண். | இயந்திரங்களின் பெயர் | வாடகை விவரம் டீசல் உள்பட |
|---|---|---|
| 14 | டிராக்டரால் இயங்கக்கூடிய நடமாடும் நெல் உலர்த்தும் இயந்திரங்கள் (Tractor operated paddy mobile dryer) | ரூ.500/- மணிக்கு டிராக்டருடன் (பர்னருக்கு தேவையான எரிபொருள் செலவு மற்றும் கூடுதல் வேலையாட்களுக்கான செலவு நீங்கலாக) |

| **திட்டம் எண்: 18** | |
|---|---|
| திட்டத்தின் பெயர் | **பாசனத்திற்கான நிலத்தடி நீர் ஆதாரங்களை உருவாக்குவதற்காக உழவர் செயலியில் உள்ள இ-வாடகை 2.0 தளத்தின் மூலம் இயந்திரங்களை வாடகைக்கு வழங்குதல்** |
| நிதி ஆதாரம் | மாநில அரசுத் திட்டம் |
| திட்டப்பகுதி | அனைத்து மாவட்டங்கள் (சென்னை நீங்கலாக) |
| நோக்கங்கள் | • புதிய நீர் ஆதாரங்களை உருவாக்குவதன் மூலம் கூடுதல் நிலங்களில் சாகுபடி மேற்கொள்ளுதல்.<br>• தற்போதுள்ள பாசனப்பரப்பை நிலைப்படுத்துதல்.<br>• புதிய கிணறுகள் அமைக்க இடம் தேர்வு செய்வதில் விவசாயிகளுக்கு உதவுதல். |
| செயல்படுத்தப்படும் பணிகள் | • மணற்பாங்கான, வண்டல் மண் நிலங்களில் குழாய்க் கிணறு அமைத்தல்.<br>• கடினப்பாறைப் பகுதியில் உபயோகமற்ற அல்லது வறண்டு போன திறந்தவெளிக் கிணறுகளை மீண்டும் உபயோகிக்க ஏற்பாடு செய்தல்.<br>• குழாய்க் கிணறுகள், திறந்தவெளிக் கிணறுகள் அமைத்திட தகுந்த இடங்களை தேர்ந்தெடுத்தல். |
| மானியங்களும் சலுகைகளும் | மேற்குறிப்பிட்ட பணிகளை மேற்கொள்ள விவசாயிகளுக்கு அரசு நிர்ணயித்த குறைந்த வாடகையில் இயந்திரங்கள் வழங்குதல். |
| தகுதி | வாடகை முன்பணம் செலுத்தும் அனைத்து விவசாயிகளுக்கும் முன்னுரிமை அடிப்படையில் இயந்திரங்கள் வழங்குதல். |

| | |
|---|---|
| ஆன்லைன் மூலம் இயந்திரங்கள் பதிவு செய்யும் வசதி | விவசாயிகள் வேளாண்மைப் பொறியியல் துறை அலுவலகங்களுக்கு செல்லாமல் தாங்கள் இருக்கும் இடத்திலிருந்தே உழவர் செயலியில் உள்ள இ-வாடகை 2.0 தளத்தின் மூலம் வேளாண்மைப் பொறியியல் துறையின் வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளை முன்பதிவு செய்து கொள்ளலாம்.<br>**விண்ணப்பிக்க : உழவர் செயலி**<br>(https://play.google.com/store/apps/details?id=agri.tnagri) |
| அணுக வேண்டிய அலுவலர் | **வட்டார அளவில்**<br>உதவிப் பொறியாளர் / இளநிலைப் பொறியாளர்,<br>வேளாண்மைப் பொறியியல் துறை.<br>**வருவாய்க் கோட்ட அளவில்**<br>உதவி செயற்பொறியாளர்,<br>வேளாண்மைப் பொறியியல் துறை.<br>**மாவட்ட அளவில்**<br>செயற்பொறியாளர்,<br>வேளாண்மைப் பொறியியல் துறை.<br>**மேலும் தொடர்புக்கு:**<br>**மின்னஞ்சல்:** aedceldmi@gmail.com |

### சிறுபாசனத்திற்கான இயந்திரங்களின் வாடகை விவரம்

| வ. எண் | இயந்திரங்களின் பெயர் | வாடகை விவரம் (ரூபாயில்) |
|---|---|---|
| 1 | சுழல் விசைத்துளைக் கருவிகள்<br>(Rotary Drills) | ரூ.130/- ஒரு மீட்டருக்கு |
| 2 | பெர்குஷன் துளைக் கருவி<br>(Percussion Drill) | ரூ.300/- நாள் ஒன்றிற்கு |
| 3 | சிறு விசைத்துளைக் கருவிகள்<br>(Mini Drills) | ரூ.70/- ஒரு மீட்டருக்கு |
| 4 | கைத்துளைக் கருவிகள்<br>(Hand Boring Sets) | ரூ.30/- ஒரு மீட்டருக்கு |
| 5 | பாறை வெடிக் கருவி<br>(Rock Blasting Unit) | ரூ.250/- ஒரு வெடிப்புக்கு |

| வ. எண் | இயந்திரங்களின் பெயர் | வாடகை விவரம் (ரூபாயில்) |
|---|---|---|
| 6 | நிலத்தடி நீர் ஆய்வுக் கருவிகள் (Resistivity Meters) | ரூ.500/- ஒரு ஆய்விற்கு |
| 7 | மின்னியல் ஆய்வுக் கருவிகள் (Electrical Loggers) | ரூ.1,000/- ஒரு குழாய் கிணறுக்கு |

குறிப்பு: மேற்குறிப்பிட்ட இயந்திரங்களுக்கு தேவையான எரிபொருள் (டீசல்), வேலையாட்கள், குழாய்கள், கூழாங்கற்கள் மற்றும் பொருட்களை எடுத்துச்செல்வதற்கான வாகனச் செலவு ஆகியவை சம்பந்தப்பட்ட விவசாயிகளைச் சார்ந்தது.

| **திட்டம் எண் : 19** | |
|---|---|
| திட்டத்தின் பெயர் | **வரப்பு செதுக்கி சேறு பூசும் கருவியின் தொழில்நுட்பத்தை விவசாயிகளிடையே பரவலாக்கம் செய்தல்** |
| நிதி ஆதாரம் | வேளாண் இயந்திரமயமாக்குதலுக்கான துணை இயக்கத் திட்ட நிர்வாக செலவின நிதி (ஒன்றிய அரசு - 60%, மாநில அரசு -40%) |
| திட்டப் பகுதி | அனைத்து மாவட்டங்கள் (சென்னை நீங்கலாக) |
| நோக்கங்கள் | • நெல் சாகுபடியில் நவீன இயந்திரங்களின் பயன்பாட்டை அதிகப்படுத்துதல், இயந்திரமயமாக்குதலினை ஊக்குவித்தல், நெல் வயல்களில் வரப்பு அமைக்கும் பணிகளை எளிதாக்குதல்.<br>• விவசாயிகளிடையே நெல் சாகுபடியில் டிராக்டரால் இயங்கக்கூடிய வரப்பு செதுக்கி சேறு பூசும் கருவி பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்துதல். |
| செயல்படுத்தப்படும் பணிகள் | நெல் வயல்களில் ஒரே மாதிரியான சீரான வரப்புகளை செதுக்கி, சேறு பூசி நீர் தேக்கத் திறனை மேம்படுத்தி, நீர்க் கசிவு மற்றும் மண் அரிப்பைத் தடுத்து திறன்மிகு பாசன மேலாண்மைக்கு உதவிட, உழவர் செயலியில் உள்ள இ-வாடகை 2.0 தளத்தின் மூலம் வேளாண்மைப் பொறியியல் துறையின் டிராக்டரால் இயங்கக்கூடிய வரப்பு செதுக்கி சேறு பூசும் கருவியின் தொழில்நுட்பத்தை பரவலாக்கம் செய்தல். |
| சலுகைகள் | ஒரு ஏக்கருக்கு அதிகபட்சமாக ரூ.500/-. |

| | |
|---|---|
| தகுதி | தேர்வு செய்யப்படும் விவசாயிகள். |
| அணுக வேண்டிய அலுவலர் | **வட்டார அளவில்**<br>உதவிப் பொறியாளர் / இளநிலைப் பொறியாளர்,<br>வேளாண்மைப் பொறியியல் துறை.<br>**வருவாய்க் கோட்ட அளவில்**<br>உதவி செயற் பொறியாளர்,<br>வேளாண்மைப் பொறியியல் துறை.<br>**மாவட்ட அளவில்**<br>செயற் பொறியாளர்,<br>வேளாண்மைப் பொறியியல் துறை.<br>**மேலும் தொடர்புக்கு:**<br>**மின்னஞ்சல்**: aedceldmi@gmail.com |

| **திட்டம் எண் : 20** | |
|---|---|
| திட்டத்தின் பெயர் | **சூரிய சக்தியால் இயங்கும் மின்வேலி அமைப்புகள்** |
| நிதி ஆதாரம் | பிரதம மந்திரியின் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம்<br>ஒன்றிய அரசு – 60 % மற்றும் மாநில அரசு - 40 % |
| திட்டப் பகுதி | அனைத்து மாவட்டங்கள் (சென்னை நீங்கலாக) |
| நோக்கங்கள் | • வேளாண் பயிர்களை சேதப்படுத்தக்கூடிய விலங்குகளிடமிருந்து பயிர்களை பாதுகாத்தல்.<br>• விலங்குகளால் ஏற்படும் பயிர் சேதத்தை குறைத்து, விவசாயிகளின் நிலையான வருமானத்தை உறுதி செய்தல். |
| செயல்படுத்தப்படும் பணிகள் | • தனிநபர் விவசாயிகளின் நிலங்களில் சூரிய மின்வேலி அமைத்தல்.<br>• **யானைகள் தவிர்த்த பிற விலங்குகளுக்கான சூரிய மின்வேலி அமைப்பு** - 5 வரிசை, 7 வரிசை மற்றும் 10 வரிசை சூரிய மின்வேலி கம்பிகளைக் கொண்டது.<br>• **யானைகளை விரட்டிட கூடுதலாக தொங்கும் சூரிய மின்வேலி அமைப்பு** - 5 வரிசை, 7 வரிசை மற்றும் 10 வரிசை சூரிய மின்வேலி கம்பிகளைக் கொண்டது. |

| | |
|---|---|
| மானியங்களும் சலுகைகளும் | • ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக 2 எக்டர் பரப்பிற்கு, 566 மீட்டர் நீளம் வரை மானியம் வழங்கப்படும்.<br>• சூரிய மின்வேலி அமைப்பதற்கு ஆகும் செலவில் 50% மானியமாக விவசாயிகளுக்கு வழங்கப்படும்.<br>• அருகருகே விளை நிலங்கள் உள்ள விவசாயிகள் ஒன்றிணைந்தும் பயன்பெறலாம்.<br>• ஆதிதிராவிடர், பழங்குடியினர் பிரிவைச் சார்ந்த சிறு, குறு விவசாயிகளுக்கு நடைமுறையிலுள்ள 50% மானியத்துடன் கூடுதலாக 20% மானியம் மாநில நிதியில் இருந்து சேர்த்து, மொத்தமாக 70% மானியம் வழங்கப்படும். |
| தகுதி | அனைத்து மாவட்ட விவசாயிகள் (சென்னை நீங்கலாக) |
| திட்டம் செயலாக்க கால நிர்ணயம் | நிதியாண்டிற்குள் செயல்படுத்தப்படும். |
| அணுக வேண்டிய அலுவலர் | **வட்டார அளவில்**<br>உதவிப் பொறியாளர் / இளநிலைப் பொறியாளர்,<br>வேளாண்மைப் பொறியியல் துறை.<br>**வருவாய்க் கோட்ட அளவில்**<br>உதவி செயற் பொறியாளர்,<br>வேளாண்மைப் பொறியியல் துறை.<br>**மாவட்ட அளவில்**<br>செயற் பொறியாளர்,<br>வேளாண்மைப் பொறியியல் துறை.<br>**மேலும் தொடர்புக்கு:**<br>**மின்னஞ்சல்**: aedcesolar@gmail.com, aedcewrm@gmail.com |

| திட்டம் எண் : 21 | |
|---|---|
| திட்டத்தின் பெயர் | **சூரிய சக்தி பம்புசெட்டுகள் அமைக்கும் திட்டம்** |
| நிதி ஆதாரம் | ஒன்றிய அரசின் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறை அமைச்சக நிதி (MNRE) மற்றும் மாநில அரசு நிதி |
| திட்டப்பகுதி | அனைத்து மாவட்டங்கள் (சென்னை நீங்கலாக) |
| நோக்கங்கள் | • விவசாயிகளுக்கு இறவைப் பாசனத்திற்குத் தேவையான நிலையான ஆற்றலை உறுதி செய்தல்.<br>• விவசாயிகளுக்கு இறவைப் பாசன அமைப்புகளின் பராமரிப்பு மற்றும் தொடர்ச்சியான செயல்பாட்டு செலவினங்களை குறைத்தல்.<br>• புதுப்பிக்கத்தக்க ஆற்றல் பயன்பாட்டின் மூலம் வேளாண் உற்பத்தியினை மேம்படுத்துதல்.<br>• மின்சாரச் சார்பைக் குறைத்து, சுற்றுச்சூழலுக்கு உகந்த பசுமை ஆற்றல் பயன்பாட்டை ஊக்குவித்தல். |
| செயல்படுத்தப்படும் பணிகள் | மின்கட்டமைப்புடன் சாராத தனித்து சூரிய சக்தியால் இயங்கும் 3 முதல் 15 குதிரைத் திறன் வரையிலான AC மற்றும் DC வகை மோட்டார் பம்புசெட்டுகள் விவசாயிகளுக்கு அமைத்துத் தருதல். |
| மானியங்களும் சலுகைகளும் | • ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பிரிவைச் சார்ந்த சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 80% மானியமும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பிரிவைச் சார்ந்த இதர விவசாயிகளுக்கும், பொது பிரிவைச் சார்ந்த சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கும் 70% மானியமும், பொது பிரிவைச் சார்ந்த இதர விவசாயிகளுக்கு 60% மானியமும் வழங்கப்படும்.<br>• 7.5 குதிரைத் திறனுக்கு மேற்பட்ட திறன் கொண்ட சூரிய சக்தி பம்புசெட்டுகள் அமைக்கும் தனிநபர் விவசாயிகளுக்கு, 7.5 குதிரைத் திறன் கொண்ட சூரிய சக்தி பம்புசெட்டுகளுக்கான மானிய அளவே வழங்கப்படும். |
| தகுதி | • மின் இணைப்பு வசதி இல்லாத பாசனத்திற்கான நீர் ஆதாரம் கொண்ட அனைத்து விவசாயிகள்.<br>• சூரிய சக்தி பம்புசெட்டுகள் அமைக்கப்படவுள்ள புதிய பாசனக் கிணறுகள், நிலத்தடி நீர் பாதுகாப்பான குறுவட்ட பகுதிகளில் அமைந்திருக்க வேண்டும். இதர பகுதிகளில் |

| | |
|---|---|
| | ஏற்கனவே டீசல் என்ஜின் மூலம் பாசனம் மேற்கொண்டு வரும் விவசாயிகளுக்கு, அதற்கு மாற்றாக இத்திட்டத்தின் கீழ் சூரிய சக்தியால் இயங்கும் பம்புசெட்டுகள் அமைத்துத் தரப்படும்.<br>• தங்களது பங்களிப்பு தொகையை முதலில் செலுத்தும் விவசாயிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் சூரிய சக்தி பம்புசெட்டுகள் அமைத்துத் தரப்படும். |
| செயல்படுத்தப்படும் கால நிர்ணயம் | நிதியாண்டிற்குள் செயல்படுத்தப்படும். |
| அணுக வேண்டிய அலுவலர் | **வட்டார அளவில்**<br>உதவிப் பொறியாளர் / இளநிலைப் பொறியாளர்,<br>வேளாண்மைப் பொறியியல் துறை.<br>**வருவாய்க் கோட்ட அளவில்**<br>உதவி செயற் பொறியாளர்,<br>வேளாண்மைப் பொறியியல் துறை.<br>**மாவட்ட அளவில்**<br>செயற் பொறியாளர்,<br>வேளாண்மைப் பொறியியல் துறை.<br>**மேலும் தொடர்புக்கு:**<br>**மின்னஞ்சல்**: aedcesolar@gmail.com, aedcewrm@gmail.com<br>**விண்ணப்பிக்க**: **pmkusum.tn.gov.in** |

| **திட்டம் எண்**: 22 | |
|---|---|
| திட்டத்தின் பெயர் | **சூரிய கூடார உலர்த்திகள்** |
| நிதி ஆதாரம் | வேளாண் இயந்திரமயமாக்குதலுக்கான துணை இயக்கத் திட்டம் ஒன்றிய அரசு நிதி - 60% மற்றும் மாநில அரசு நிதி - 40% |
| திட்டப் பகுதி | அனைத்து மாவட்டங்கள் ( சென்னை நீங்கலாக) |
| நோக்கங்கள் | • சூரிய சக்தி மூலம் சுகாதாரமான முறையில், வேளாண் விளைபொருட்களை உலர வைப்பதன் மூலம் அறுவடைக்கு பின் சேமிப்பு காலத்தை நீட்டித்தல்.<br>• திறந்தவெளியில் உலர வைப்பதால் ஏற்படும் இழப்புகள் மற்றும் சேதாரத்தைக் குறைத்தல்.<br>• சுகாதாரமான முறையில் தரத்துடன் விளைபொருட்களை உலர்த்தி மதிப்பு கூட்டுதல் மூலம் விவசாயிகளுக்கு அதிக இலாபம் கிடைத்திட வழி வகுத்தல். |

| | |
|---|---|
| செயல்படுத்தப்படும் பணிகள் | விவசாயிகளுக்கு வேளாண் விளைபொருட்களை உலர வைத்திட, பசுமை குடில் வகையிலான, 400 முதல் 1,000 சதுர அடி பரப்பு கொண்ட பாலிகார்பனேட் தகடுகளை கொண்ட சூரிய கூடார உலர்த்திகள் அமைத்தல். |
| மானியங்களும் சலுகைகளும் | • ஆதி திராவிடர், பழங்குடியினர், சிறு, குறு மற்றும் பெண் விவசாயிகளுக்கு, சூரிய கூடார உலர்த்திகள் அமைப்பதற்கான மொத்த செலவில் அதிகபட்சமாக 50% அல்லது ரூ.4,40,000/- மற்றும் இதர விவசாயிகளுக்கு 40% அல்லது ரூ.3,52,000/- இதில் எது குறைவோ அத்தொகை மானியமாக வழங்கப்படும்.<br>• ஆதிதிராவிடர், பழங்குடியினர் பிரிவைச் சார்ந்த சிறு, குறு விவசாயிகளுக்கு நடைமுறையிலுள்ள 50% மானியத்துடன் கூடுதலாக 20% மானியம் மாநில நிதியில் இருந்து சேர்த்து, மொத்தமாக 70% மானியம் வழங்கப்படும். |
| தகுதி | சூரிய கூடார உலர்த்திகள் அமைக்க உரிய இடம் வழங்கும் அனைத்து விவசாயிகள். |
| திட்ட செயலாக்க கால நிர்ணயம் | நிதியாண்டிற்குள் செயல்படுத்தப்படும். |
| அணுக வேண்டிய அலுவலர் | **வட்டார அளவில்**<br>உதவிப் பொறியாளர் / இளநிலைப் பொறியாளர்,<br>வேளாண்மைப் பொறியியல் துறை.<br>**வருவாய்க் கோட்ட அளவில்**<br>உதவி செயற் பொறியாளர்,<br>வேளாண்மைப் பொறியியல் துறை.<br>**மாவட்ட அளவில்**<br>செயற் பொறியாளர்,<br>வேளாண்மைப் பொறியியல் துறை.<br>**மேலும் தொடர்புக்கு:**<br>**மின்னஞ்சல்:** aedcesolar@gmail.com |

| **திட்டம் எண் :** 23 | |
|---|---|
| திட்டத்தின் பெயர் | **விவசாயிகளுக்கு மானியத்தில் கதிரடிக்கும் களம் அமைத்துக் கொடுத்தல்** |
| நிதி ஆதாரம் | பிரதம மந்திரியின் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் ஒன்றிய அரசு - 60% மற்றும் மாநில அரசு - 40% |
| திட்டப் பகுதி | அனைத்து மாவட்டங்கள் (சென்னை நீங்கலாக) |
| நோக்கங்கள் | • அறுவடை செய்யப்பட்ட பயிர்களில் இருந்து தானியங்களை கதிரடித்து, பிரித்தெடுத்து அவற்றை போதிய ஈரப்பதத்திற்கு உலர்த்தி சேமித்து வைப்பதற்கு உரிய கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல்.<br>• அறுவடைக்குப் பின்னர் ஏற்படும் தானிய இழப்புகளை குறைத்தல். |
| செயல்படுத்தப்படும் பணிகள் | தனிநபர் விவசாயிகளுக்கு அவர்களின் சொந்த நிலங்களில் கதிரடிக்கும் களம் அமைப்பதற்கு மானியம் வழங்குதல். |
| மானியங்களும் சலுகைகளும் | 50% மானியம் அல்லது அதிகபட்சமாக ரூ.2.80 இலட்சம் பின்னேற்பு மானியம். |
| தகுதி | சொந்த நிலம் வைத்திருக்கும் அனைத்து மாவட்ட விவசாயிகள் (சென்னை நீங்கலாக). |
| திட்டம் செயலாக்க கால நிர்ணயம் | நிதியாண்டிற்குள் செயல்படுத்தப்படும். |
| அணுக வேண்டிய அலுவலர் | **வட்டார அளவில்**<br>உதவிப் பொறியாளர் / இளநிலைப் பொறியாளர்,<br>வேளாண்மைப் பொறியியல் துறை.<br>**வருவாய்க் கோட்ட அளவில்**<br>உதவி செயற் பொறியாளர்,<br>வேளாண்மைப் பொறியியல் துறை.<br>**மாவட்ட அளவில்**<br>செயற் பொறியாளர்,<br>வேளாண்மைப் பொறியியல் துறை.<br>**மேலும் தொடர்புக்கு:**<br>**மின்னஞ்சல்:** aedcebuildings@gmail.com |

# 5. வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை

| திட்டம்: 1 | |
|---|---|
| திட்டத்தின் பெயர் | உழவர் சந்தைகள் |
| பயன்கள் | ○ விவசாயிகள் தங்களின் விளைபொருட்களை இடைத்தரகர்களின்றி நேரடியாக நுகர்வோருக்கு விற்பதன் மூலம் நியாயமான விலை கிடைக்கின்றது.<br>○ முதலில் வருவோருக்கு முன்னுரிமை என்ற முறையில் கடை மற்றும் எடைத்தராசுகள் இலவசமாக ஒதுக்கீடு செய்யப்படுகின்றன.<br>○ நுகர்வோர், வெளிச்சந்தையைக் காட்டிலும் குறைவான விலையில் சரியான எடையில் பசுமையான காய்கறி மற்றும் பழங்களை பெறுகின்றனர்.<br>○ ஒரு சில உழவர் சந்தைகளில் உள்ள குளிர்பதன வசதியினை விவசாயிகள் இலவசமாக பயன்படுத்திக் கொள்ளலாம். |
| தகுதி | வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறையால் அடையாள அட்டை பெற்ற, காய்கறிகள் மற்றும் பழங்கள் பயிரிடுவோர். |
| தொடர்பு கொள்ளவேண்டிய அலுவலர் | சம்பந்தப்பட்ட வேளாண்மை துணை இயக்குநர் (வேளாண் வணிகம்) / நிர்வாக அலுவலர் (உழவர் சந்தை). |
| ஒப்பளிப்பு/ நிராகரிப்பு கால அளவு | காலவரையறை ஏதுமில்லை. |
| மேல்முறையீட்டு அதிகாரி | இயக்குநர்<br>வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை, கிண்டி, சென்னை 600 032.<br>தொலைபேசி எண்:044-22253884.<br>மின் அஞ்சல்: agrimarketing.us2@gmail.com |

| **திட்டம்: 2** | |
|---|---|
| திட்டத்தின் பெயர் | **ஒழுங்குமுறை விற்பனைக்கூடம்** |
| பயன்கள் | ○ விவசாயிகள் மற்றும் வணிகர்கள் இடைத்தரகர்களின் குறுக்கீடின்றி வணிகம் செய்திட பொதுவான சந்தை அமைப்பாகும்.<br>○ விவசாயிகளின் விளைபொருட்களுக்கு சிறந்த விலை கிடைக்கும்.<br>○ விவசாயிகளின் விளைபொருட்களுக்கு சரியான எடை மற்றும் உடனடியாக பணப்பட்டுவாடா.<br>○ சேமிப்புக் கிடங்கு, உலர்களம், குளிர்பதன வசதி, வணிகர் கடை, விவசாயிகள் ஓய்வு அறை மற்றும் குடிநீர் வசதி. |
| தகுதி | அனைத்து விவசாயிகள். |
| தொடர்பு கொள்ளவேண்டிய அலுவலர் | சம்பந்தப்பட்ட ஒழுங்குமுறை விற்பனைக்கூட கண்காணிப்பாளர் / மேற்பார்வையாளர். |
| ஒப்பளிப்பு / நிராகரிப்பு கால அளவு | விலை அறிவித்த அதே நாள். |
| மேல்முறையீட்டு அதிகாரி | செயலாளர், விற்பனைக்குழு. |

| **திட்டம்: 3** | |
|---|---|
| திட்டத்தின் பெயர் | **விவசாயிகளுக்கான பொருளீட்டுக்கடன்** |
| பயன்கள் | ○ விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை ஒழுங்குமுறை விற்பனைக்கூட கிடங்குகளில் அதிகபட்சமாக ஆறு மாதம் வரை இருப்பு வைத்து பொருளீட்டுக் கடன் பெறலாம்.<br>○ மஞ்சள் பயிரிடுவோர் ஒரு வருடம் வரை இருப்பு வைக்கலாம்.<br>○ விவசாயிகளின் உடனடி பணத்தேவைக்கும் அடுத்த சாகுபடிக்கான முன்னேற்பாடு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் உதவுகிறது.<br>○ சிறு மற்றும் குறு விவசாயிகள், தங்கள் விளைபொருட்களின் மொத்த மதிப்பில் 75 சதவீதமும், இதர விவசாயிகள் தங்கள் விளைபொருட்களின் மொத்த மதிப்பில் 50 சதவீதம் அல்லது அதிகபட்சமாக ரூபாய் 5 இலட்சம் வரை பொருளீட்டுக்கடன் பெறலாம்.<br>○ கடன் பெற்ற முதல் 15 நாட்களுக்கு வட்டியில்லை.<br>○ 15 நாட்களுக்குப் பிறகு ஐந்து சதவீதம் வட்டி வசூலிக்கப்படும். |
| தகுதி | ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள் மூலமாக விற்பனை செய்யும் அனைத்து விவசாயிகள். |
| தொடர்பு கொள்ளவேண்டிய அலுவலர் | சம்பந்தப்பட்ட ஒழுங்குமுறை விற்பனைக்கூட கண்காணிப்பாளர் / மேற்பார்வையாளர். |
| ஒப்பளிப்பு / நிராகரிப்பு கால அளவு | ஒரு வார காலம். |
| மேல்முறையீட்டு அதிகாரி | செயலாளர், விற்பனைக்குழு. |

| **திட்டம்: 4** | |
|---|---|
| திட்டத்தின் பெயர் | **வியாபாரிகளுக்கான பொருளீட்டுக் கடன்** |
| பயன்கள் | ○ ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் விளைபொருட்களை கொள்முதல் செய்யும் வியாபாரிகள், விவசாயிகளுக்கு உடனடியாக பணப்பட்டுவாடா செய்திட ஏதுவாக வியாபாரிகளுக்கு பொருளீட்டுக்கடன் வழங்கப்படுகிறது.<br>○ ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் உரிமம் பெற்ற வியாபாரிகளுக்கு, இருப்பு வைக்கப்படும் விளைபொருட்களின் மதிப்பில் 50 சதவீதம் அல்லது அதிகபட்சமாக ரூபாய் இரண்டு இலட்சம் வரை பொருளீட்டுக்கடன் ஒன்பது சதவீத வட்டியில் வழங்கப்படுகிறது.<br>○ வியாபாரிகள் ஆறு மாதம் வரை கொள்முதல் செய்த விளைபொருட்களை ஒழுங்குமுறை விற்பனைக்கூட கிடங்குகளில் இருப்பு வைக்கலாம். |
| தகுதி | ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள் மூலமாக விற்பனை செய்யும் உரிமம் பெற்ற அனைத்து வியாபாரிகள். |
| தொடர்பு கொள்ளவேண்டிய அலுவலர் | சம்பந்தப்பட்ட ஒழுங்குமுறை விற்பனைக்கூட கண்காணிப்பாளர் / மேற்பார்வையாளர். |
| ஒப்பளிப்பு /நிராகரிப்பு கால அளவு | ஒரு வார காலம். |
| மேல்முறையீட்டு அதிகாரி | செயலாளர், விற்பனைக்குழு |

| **திட்டம்: 5** | |
|---|---|
| திட்டத்தின் பெயர் | **தமிழ்நாடு உழவர் மேம்பாடு மற்றும் நலத்திட்டம்** |
| பயன்கள் | ○ **விவசாயிகள் அல்லது குத்தகைதாரர்கள் விபத்தின் காரணமாக / பாம்பு கடியினால் உயிர் இழக்க நேரிட்டால் அதிகபட்சமாக ரூபாய் ஒரு இலட்சம் உதவித் தொகை வழங்கப்படும்.**<br>○ **விபத்தின் காரணமாக இரண்டு கைகள் / கால்கள் / கண்கள் இழக்க நேரிட்டால் ரூ.75,000/- உதவித் தொகை வழங்கப்படும்.**<br>○ **விபத்தின் காரணமாக ஒரு கை / கால் / கண் அல்லது நிரந்தரமாக இடுப்பு செயல்பாட்டினை இழக்க நேரிட்டால் ரூ.50,000/- உதவித்தொகை வழங்கப்படும்.**<br>○ **இத்திட்டத்தில், விவசாயிகள் பயன்பெற கட்டணம் ஏதும் செலுத்த தேவையில்லை.**<br>○ **ஒருவருக்கு வருடத்திற்குரிய சந்தா தொகையான ரூ.10/-னை சம்பந்தப்பட்ட விற்பனைக்குழுவும், தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியமும் சமபங்களிப்பாக செலுத்துகின்றன.** |
| தகுதி | ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள் மூலமாக ஒரு நிதியாண்டில் ஒரு மெட்ரிக் டன் அல்லது அதற்கும் கூடுதலாக விற்பனை செய்யும் விவசாயி/ குத்தகைதாரர்<br>வயது வரம்பு : 18 முதல் 60 வயது வரை |
| தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் | ஒழுங்குமுறை விற்பனைக்கூட கண்காணிப்பாளர் / மேற்பார்வையாளர். |
| ஒப்பளிப்பு / நிராகரிப்பு கால அளவு | விபத்து / மரணம் நேரிட்ட மூன்று மாத காலத்திற்குள்ளாக தமிழ்நாடு மாநில வேளாண் விற்பனை வாரியத்திற்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| மேல்முறையீட்டு அதிகாரி | தலைமை செயல் அலுவலர்,<br>தமிழ்நாடு மாநில வேளாண் விற்பனை வாரியம், சென்னை-600 032.<br>தொலைபேசி எண் : 044-22253156<br>மின்அஞ்சல் :ceotnsamb2024 @gmail.com |

| **திட்டம்: 6** | |
|---|---|
| திட்டத்தின் பெயர் | **விவசாயிகளுக்கு சேலத்திலுள்ள மாநில பயிற்சி மையத்தில் பயிற்சி அளித்தல்** |
| பயன்கள் | • உணவு பதப்படுத்துதல், மதிப்புக் கூட்டுதல், மின்னணு தேசிய வேளாண் சந்தை மற்றும் வேளாண் ஏற்றுமதி தொடர்பான பயிற்சிகள் வழங்கப்படுகின்றது.<br>• உதவித்தொகை: பயணச்செலவு தொகை ரூ.750/- |
| தகுதி | அனைத்து மாவட்ட விவசாயிகள் |
| கால அளவு | 2-3 நாட்கள் |
| தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் | சம்பந்தப்பட்ட மாவட்ட வேளாண்மை துணை இயக்குநர் (வேளாண் வணிகம்) |
| மேல் முறையீட்டு அதிகாரி | தலைமை செயல் அலுவலர்,<br>தமிழ்நாடு மாநில வேளாண் விற்பனை வாரியம்,<br>சென்னை-600 032.<br>தொலைபேசி எண் : 044-22253156<br>மின் அஞ்சல்: ceotnsamb2024@gmail.com |

| **திட்டம்: 7** | |
|---|---|
| திட்டத்தின் பெயர் | **விலை ஆதரவு திட்டம்** |
| பயன்கள் | அறுவடைக் காலங்களில் பயறு மற்றும் கொப்பரைத் தேங்காயின் சந்தை விலை குறைந்தபட்ச ஆதரவு விலையை விட வீழ்ச்சி அடையும்போது அவை குறைந்தபட்ச ஆதரவு விலையில் கொள்முதல் செய்யப்படும். |
| தகுதி | • நியாயமான சராசரி தரமுடைய விளைபொருட்கள் மட்டுமே கொள்முதல் செய்யப்படும்.<br>• அனைத்து விவசாயிகளிடமிருந்தும் கொள்முதல் அளவாக சராசரி உற்பத்தியினை கணக்கிட்டு அதன்படி 25% மட்டுமே கொள்முதல் செய்யப்படும். |

| | |
|---|---|
| நியாயமான சராசரி தர அளவு | **பயறு வகைகள்**:<br>அயல் பொருட்கள் 2%, கலப்பினம் 3%, சேதமடைந்த பயறுகள் 3%, சற்றே சேதமடைந்த பயறுகள் 4%, வண்டு தாக்கப்பட்ட பயறுகள் 4%, ஈரப்பதம் 12%.<br>**பந்துக் கொப்பரை**:<br>அயல் பொருட்கள் (எடையில்) 0.2%, பூஞ்சானம் மற்றும் கருமை நிறம் கொண்ட கொப்பரை (எண்ணிக்கையில்) 2%, சுருக்கம் கொண்ட கொப்பரை (எண்ணிக்கையில்) 10%, சில்லுகள் (எடையில்) 1%, ஈரப்பதம் (எடையில்) 7% மற்றும் விட்டம் (குறைந்தபட்சம்) 75 மி.மீ.<br>**அரவைக் கொப்பரை**:<br>அயல் பொருட்கள் (எடையில்) 1%, பூஞ்சானம் மற்றும் கருமை நிறம் கொண்ட கொப்பரை (எண்ணிக்கையில்) 10%, சுருக்கம் கொண்ட கொப்பரை (எண்ணிக்கையில்) 10%, சில்லுகள் (எடையில்) 10% மற்றும் ஈரப்பதம் (எடையில்) 6%. |
| தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் | சம்பந்தப்பட்ட வேளாண்மை துணை இயக்குநர் (வே.வ), செயலாளர், விற்பனைக் குழு மற்றும் கண்காணிப்பாளர்/ மேற்பார்வையாளர், ஒழுங்குமுறை விற்பனைக் கூடம். |
| ஒப்பளிப்பு/ நிராகரிப்பு கால அளவு | நியாயமான சராசரி தர அளவு இல்லாதவை நிராகரிக்கப்படும். |
| மேல்முறையீட்டு அதிகாரி | இயக்குநர்,<br>வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை, சென்னை-600 032.<br>தொலைபேசி எண் : 044-22253884<br>மின்அஞ்சல்: ceotnsamb2024@gmail.com. |

| திட்டம்: 8 | |
|---|---|
| திட்டத்தின் பெயர் | **அக்மார்க் தரம்பிரிப்பு** |
